பெந்தெகொஸ்தே ஆவி

*

THE SPIRIT OF PENTECOST

*

By
V. S. Azariah
Late Bishop of Dornakal

பொருளடக்கம்

அதிகாரம்		பக்கம்
1.	பெந்தெகொஸ்தே ஆவி	1
2.	பெந்தெகொஸ்தே சபை	17
3.	பெந்தெகொஸ்தே ஊழியர்	28
4.	பெந்தெகொஸ்தே வேலை	44
5.	பெந்தெகொஸ்தே பலன்கள்	58
6.	பெந்தெகொஸ்தே ஆவியின் அவசியம்	71
7.	பெந்தெகொஸ்தே ஆவிக்குத் தடை : மாம்ச சிந்தை	82
8.	பெந்தெகொஸ்தே ஆவிக்குத் தடை : உலக சிந்தை	94
9.	பெந்தெகொஸ்தே ஆவியைப் பெற்றுக் கொள்ளும் வகை	115
10.	பெந்தெகொஸ்தே ஆவியினால் நிறைந்திருக்கும் இரகசியம்	133

பெந்தெகொஸ்தே ஆவி

1-ம் அதிகாரம்

பெந்தெகோஸ்தே ஆவி

பெந்தெகொஸ்தே! இதுதான் தற்கால சபைகளுக்கு அவசியமான எக்காள தொனி! அந்த ஆவியின் கிரியை தான் நமது தேசத்துக்கும் நமது நாட்டிற்கும் இப்பொழுது தேவை. அவர்தான் நமது சுதந்தர பாகம்! தேவனுடைய சபையே, எழும்பு, எழும்பு; தூசியை உதறிவிட்டு எழுந்திரு. பெந்தெகொஸ்தேயின் ஆவியே கிறிஸ்துவுக்குள் உனக்கு அருளப்பட்டிருக்கும் பங்கு!

இந்த அதிகாரத்தில்

(1) பெந்தெகொஸ்தே ஆவியானவர் யார்? என்றும்,

(2) அவருடைய விசேஷித்த வேலை என்ன வென்றும்,

(3) அவர் இக்காலத்திற்கும் உரியவரா என்றும் மூன்று காரியங்களைக் கவனிப்போமாக.

I. பெந்தெகோஸ்தே ஆவியானவர் யார்?

இயேசுநாதர் பரத்துக்கெழுந்தருளிப்போன பத்தாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்பேரில் ஊற்றப் பட்ட பரிசுத்த ஆவியானவரையே 'பெந்தெகொஸ்தே ஆவியானவர்' என்று இப்புஸ்தகத்தில் அழைக்கிறோம். அந்த ஆவியானவர் யார்? அவரைப்பற்றி முன் காலங் களிலேயே தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டிருந்ததா? அல்லது திடீரென்றுதான் இறங்கிவிட்டாரா?

(1) பழைய ஏற்பாட்டின் காலத்தில் பிதாவானவர் உலகத்திற்கு வாக்குப்பண்ணியிருந்த ஆவியானவரே பெந்தெகொஸ்தே ஆவியானவர்.

ஏசாயாவின் மூலமாய்தேவன் இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருந்தார். "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" (ஏசா. 44 : 3) என்று சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப்பின் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. வறண்ட இந்தப் பூமியின்மேல் அன்றுதான் ஆறுகளை ஊற்றினார். அந்த ஆறுகள் உலகத்தின் முடிவு பரியந்தம் ஓடிக்கொண்டேயிருக்கின்றன.

யோவேலின் மூலமாகவும் இந்த வாக்குக்கொடுக்கப்பட்டிருந்தது. "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் .... ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல். 2:28) என்று கர்த்தர் சொன்னார். இந்த வாக்குத்தான் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. அந்த நாளில் கூடிவந்தவர்களை பேதுரு நோக்கி: "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" என்றான்.

சங்கீதக்காரன் மூலமாயும் (சங். 68 : 18), எசேக்கியேலின் மூலமாயும் (எசே. 34 : 26; 36 : 26, 27; 37 : 14) இதே பிரகாரமான வாக்குகளைத் திரும்பவும் திரும்பவும் தேவன் அளித்திருந்தார். அவ்வெல்லா வாக்குகளையும் நிறைவேற்றினவரே பெந்தெகொஸ்தே ஆவியானவர். ஆதிகால

முதல் இவ்வுலகத்தைப்பற்றி தேவனுடைய திருவுள சித்தத்திலிருந்த தீர்மானம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. ஆதிகாலமுதல் வாக்குப்பண்ணப்பட்டிருந்த மேசியாவானவர், பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னே யூதேயா நாட்டில் வந்து தம்மைப்பற்றிய எல்லா வாக்குகளையும் நிறைவேற்றினதுபோல, ஆதிகாலமுதல் வாக்குப்பண்ணப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தின் ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமின் மேல் வீட்டறையில் வந்திறங்கி, தம்மைப்பற்றிய எல்லா வாக்குகளையும் நிறைவேற்றினார்.

(2) யோவான் ஸ்நானகன் தன் சீஷரிடத்தில் தீர்க்கதரிசனமாய் அறிவித்த ஆவியானவரே பெந்தெகொஸ்தே ஆவியானவர்.

"நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்....அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று யோவான் சொன்னான். ஆனால் இயேசுவானவருடைய ஜீவகாலமுழுவதிலும் சீஷர்கள் அந்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர் தாமே பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகும் போது, யோவான் ஸ்நானகனுடைய வார்த்தைகளை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளைக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்றார்.

பெந்தெகொஸ்தே நாளிலே தான் இயேசுநாதர் பிதாவின் வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, ஆவியின் அக்கினி ஸ்நானத்தை அவர்கள்மேல் பொழிந்தருளி, ஸ்நானகனுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்தினார்.

(3) இயேசுவானவர் தமது சீஷருக்கு வாக்குப் பண்ணின ஆவியானவரே பெந்தெகொஸ்தே ஆவியானவர்.

"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வாரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன்" என்றும், "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்றும் இயேசு சொன்னார். இந்தத் 'தேற்றரவாளன்,' இந்தச் 'சத்திய ஆவி'— பெந்தெகொஸ்தே ஆவியானவரே. இவரே சீஷரோடு 'என்றென்றைக்கும்' தங்கியிருக்கும்படி வந்தவர்.

நல்லது, பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளும், யோவான் ஸ்நானகனும், இயேசுநாதரும் முன்னறிவித்துச் சொன்னவர் பெந்தெகொஸ்தே ஆவியானவர்தான் என்றால் அதற்குமுன் அவர் பூமியில் கிரியை செய்யவில்லையா? என்று கேட்கலாம். வேதவசனத்தில் சொல்லியிருக்கிறபடி: "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்பது ஒருவிதமாய் உண்மைதான். யோசேப்பு (ஆதி. 48 : 21), பெசலெயேல் (யாத். 31 : 5), கிதியோன் (நியா. 6 : 34), (எசேக்கியேல் 2 : 2) முதலிய தேவமனுஷர் மேல் கர்த்தருடைய ஆவியானவர் இறங்கியிருந்தார். பழைய ஏற்பாடு "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலேயே" அருளப்பட்டிருந்தது (2 தீமோ. 3 : 16). தேவனுடைய பரிசுத்த

மனுஷர் பரிசுத்த ஆவியினாலேயே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேது. 1 : 21). அப்படியே சுவிசேஷ காலத்திலும் சகரியா (லூக். 1 : 67), எலிசபெத்து (லூக். 1 : 41), யோவான் ஸ்நானகன் (லூக். 1 : 15) முதலியவர்களும் ஆவியானவராலே நிரப்பப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம்.

சீஷருடைய விஷயத்தைத் தானும் பார்ப்போம்! பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் அவர்களில் ஆவியானவருடைய கிரியை காணப்படவில்லை என்று நாம் சொல்லலாமா? ஒருபோதும் சொல்லக்கூடாது. எல்லாவற்றையும் விட்டு அவர்கள் இயேசுவைப் பின்சென்றிருந்தார்கள். அவரை நேசித்தார்கள். அவருக்குப் பிரியமுண்டாக ஜீவிக்கும்படி வாஞ்சித்தார்கள். இதெல்லாம் ஆவியானவருடைய கிருபையின் கிரியைதானல்லவா? ஒரு சமயத்தில் பிரசங்கிக்கும்படி இரண்டு இரண்டு பேராக இயேசு அவர்களை அனுப்பினபோது அவர்களைப் பார்த்து: நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்; பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர் என்று சொன்னதாக வாசிக்கிறோம்.

காரியம் இப்படியிருந்தாலும், பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின் காணப்பட்ட ஆவியின் கிரியை முந்தின எந்தக் கிரியையிலும் விசேஷமானது என்பது மறுக்கப்படக்கூடாததே. எந்த தீர்க்க தரிசியின் பிரசங்கத்தினாலும் பெந்தெகொஸ்தே நாளில் உண்டான மாறுதலுக்கொப்பான மாறுதல் இயேசு கிறிஸ்துவுக்குமுன் காணப்பட்டதுண்டோ? சீஷர்கள் ஜீவியத்தில் அதற்குப் பின் காணப்பட்ட தைரியம், வல்லமை, சந்தோஷம், அன்பு—

இவைகள் அதற்கு முன் ஒருநாளும் அவர்களில் காணப்படவில்லையே. ஆகவே பெந்தெகொஸ்தே நாளில் தான் பரிசுத்த ஆவியானவருடைய பரிபூரண கிரியை ஆரம்பித்தது என்று பார்க்கிறோம். இயேசுநாதர் விஷயத்தில் இதைக் கவனிக்கிறோம். அவர் பெத்லகேமில் பிறக்குமுன்னும் பற்பல சமயங்களில் பற்பல மனுஷருக்கு உலகத்தில் தரிசனமளித்திருந்த போதிலும் (ஆதி. 18 : 1, 2; நியா. 13 : 18; தானி 3 : 25), பெத்லகேமில் அவர் பிறந்தபோதே தமது விசேஷித்த இரட்சிப்பின் கிரியையைச் செய்ய வந்தார். அதுபோலவே, பரிசுத்த ஆவியானவரும் முன் காலங்களில் பற்பல சமயங்களில், பற்பல மனுஷர்மேல், பற்பல வேலைகளுக்கென்று வந்து இறங்கியிருந்தாலும், எருசலேமின் மேல்வீட்டறையில் பெந்தெகொஸ்தே நாளில் வந்தபோதே தமது விசேஷித்த வேலையைச் செய்யத் தொடங்கினார் என்று காண்கிறோம். பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் ஆவியானவர் பூலோகத்தில் கிரியை செய்தது உண்மையானாலும், மனுஷரில் இவ்வளவு பெரிதும், வல்லமையும், ஏராளமுமான கிரியை அதற்குமுன் ஒருபோதும் காணப்படவில்லை என்பது சத்தியம். இந்த அவருடைய ஏராளமும் வல்லமையுமான கிரியைதான் முன்னறிவிக்கப்பட்டிருந்தது. இதுவே பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பித்தது. இயேசுநாதர் தமது விசேஷ கிரியையை நிறைவேற்றும்படி பெத்லகேமில் பிறந்தது போல, பரிசுத்த ஆவியானவர் தமது விசேஷித்த கிரியையை நிறைவேற்றும்படி எருசலேமின் மேல்வீட்டறையில் இறங்கினார்.

2. இந்த ஆவியானவருடைய விசேஷித்த வேலை என்னவென்று பார்ப்போம்.

கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதே ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாள்முதல் செய்துவரும் வேலை. இதினால்

தான், முன் 'கர்த்தருடைய ஆவி' என்று பொதுவாய் அழைக்கப்பட்டவர், இதற்குப்பின் 'கிறிஸ்துவின் ஆவி' என்று அழைக்கப்பட்டிருக்கிறூர். இதினுலேயே கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியை முடிந்து தீருமட்டும் ஆவியானவர் வருவது கூடாத காரியமாயிருந்தது. பரி. யோவான் சொல்லுகிறபடி 'இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினுல் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை' (யோவான். 7 : 39).

'கிறிஸ்துவை மகிமைப் படுத்துவது' என்பதில் இரண்டு கிரியைகள் அடங்கியிருக்கின்றன. (1) இயேசுவின் தாசருடைய இருதயங்களில் கிறிஸ்துவை மகிமைப் படுத்துவது ஒன்று. (2) அவர்கள் மூலமாய் அவிசுவாசிகள் நடுவில் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது மற்ருென்று.

முதலாவது: விசுவாசிகள் இருதயத்தில் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வேலை. பரிசுத்த ஆவியானவர் இவ் விசேஷித்த பிரகாரமாய் வரும் அந்நாளில்தான்-அதாவது பெந்தெகொஸ்தே நாளில்தான்—'நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலுமிருக்கிறதை' நீங்கள் அறிவீர்கள் என்றும் (யோவா. 14 : 20) 'அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்' என்றும் (15 : 26) 'என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பதினுல் என்னை அவர் மகிமைப்படுத்துவார்' என்றும் (16 : 14) இயேசு சொன்னூர். அப்படியே ஆவியானவர் வந்தபோது சீஷர்களுடைய மனதின் கண்கள் திறக்கப்பட்டன. தங்கள் எஜமான் தங்களைவிட்டுப் போய்விட்டாரே என்று திகைத்த அவர்கள், தங்கள் எஜமான் தங்களுக்குச் சமீபமாக இருக்கிறதாக உணர்ந்து கிரியை நடப்பித்தார்கள். கிறிஸ்துவே அவர்களுக்கு ஜீவனுகவும், பெலனுகவும், வல்லமையாகவும்

இருந்தார். ஆவியானவர் மூலமாக கிறிஸ்து அவர்கள் இருதயங்களிலும், அவர்கள் ஜீவியத்திலும் மகிமைப் பட்டார்.

இப்பொழுதும் ஆவியானவர் நம்மில் செய்யும்படி வந்திருக்கிற வேலை இதுவே. நமக்கு ஜீவனுகவும், ஆவியாகவும், எல்லாமுமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிற இயேசுவை,—நமக்கு நீதியும், பரிசுத்தமும், மீட்புமாயிருக்கும் அவரை,-நமக்குச் சந்தோஷமாகவும், சமாதானமாகவும், பெலனுகவும், நம்பிக்கையாகவும் விளங்கவேண்டிய அவரை—அவ்விதமாக ஆத்துமாக்களுக்குக் காட்டவே இப்பொழுதும் அவர் இருக்கிறுர். இயேசுவை நம்பியிருக்கும் விசுவாசி தன் இரட்சகர் பதினுயிரம்பேரில் சிறந்த நேசர் என்று இந்த ஆவியானவரால் கண்டுகொள்ளுகிறுன். கிறிஸ்துவின் அருமையை ஆவியானவர் அவனுக்குக் காட்டுகிறதினுல் அவன்: ஆ! அவர் முற்றிலும் அழகுள்ளவர்; இவரே என் நேசர்; இவரே என் சிநேகிதர் என்று ஆர்ப்பரிக்கிறுன். ஆவியானவரால் உள்ளான மனுஷனில் அவன் வல்லமையாய்ப் பலப்படுகிறதினுல் கிறிஸ்து அவன் இருதயத்தில் வாசமாயிருக்கிறுர். தேவனுடைய அளவற்ற அன்பினுலும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்படும்படி அவன் மென்மேலும் கெஞ்சுகிறுன் (எபே. 3 : 16-19). கிறிஸ்துவோடு இப்படி நெருங்கிய ஐக்கியமுள்ளவனுயிருக்கிறபடியால் பாவம் அவனை மேற்கொள்ளாது. ஆவியானவர் மாம்சத்தின் செய்கைகளை அழிக்கிறுர்; ஆவியின் கனிகளை அவனில் உண்டாக்குகிறுர். கிறிஸ்துவின் சாயலாக மறுரூபப்படும்படி கிரியை நடப்பிக்கிறுர் (2 கொரி. 3 : 18). வாசிக்கிறவனே, உன் இருதயத்தில் ஆவியானவர் இந்தக் கிரியையை நடப்பித்திருக்கிறுரா?

இரண்டாவது: இப்படி கிறிஸ்துவின் அருமையை அறிந்தவனுடைய ஜீவியத்திஞலும் வேலையிஞலும் மற்றவர்களைக் கிறிஸ்துவண்டையில் இழுப்பதே ஆவியானவர் செய்யும் இன்ஞெருவேலை. இதைக் குறித்துத்தான் இயேசு: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனே அவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்ருர். "நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்; அவர் வந்து...பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" என்ருர். விசுவாசிகளுடைய உள்ளத்தில் முதல் முதல் கிரியை அவர் நடப்பிக்கிறது என்னத்திற்காகவெனில், குணப்படாதவர்களை அவர்கள் மூலமாய்க் கண்டித்து உணர்த்தவே.

தேவன் அன்பாயிருக்கிருர். மனுஷர் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அவர் எப்போதும் ஆத்திரப்படுகிருர். இவ்வுலகத்தில் இயேசு ஜீவித்த காலத்தில் ஆவியானவர் மூலமாக தேவன் அவரில் வாசம் பண்ணி, கெட்டுப்போனவர்களைத் தேடி இரட்சித்தார். பெந்தெகொஸ்தேக்குப்பின் ஆவியானவர் மூலமாய் கிறிஸ்து விசுவாசிகள் உள்ளத்தில் வாசம் பண்ணி, கெட்டுப்போனவர்களை அவர்கள் மூலமாய்த் தேடி இரட்சிக்க விரும்புகிருர். பெத்லகேமில் தேவன் மனுஷனுய் அவதாரமாஞர். பெந்தெகொஸ்தே முதல் கிறிஸ்து விசுவாசியில் ஆவியானவர் மூலமாய் அவதாரமாகிருர். ஏன்? நித்திய நித்திய காலமாய் தேவனுடைய உள்ளத்தில் துடிக்கும் அன்பைக் கெட்டுப்போன மனுஷருக்கு இவன் மூலமாக வெளிப்படுத்தும்படிக்கே இவ்விதமாய் வந்து வாசம்பண்ணுகிருர். உலகத்தார் இயேசுவை நேசிக்காத பாவத்தை இவன் மூலமாய் அவர் கண்டித்து உணர்த்துகிருர். நீதியையும் நியாயத் தீர்ப்பையும் கூறி, இருதயத்தை உடைக்கிருர். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக இயேசுவை அந்த

ஆத்துமாவுக்கு உயர்த்திக் காட்டுகிறார். இயேசுவை விசுவாசத்தினால் பற்றிப் பிடிக்கும்படி செய்கிறார். இந்த வேலைதான் விசுவாசிகள் மூலமாய் ஆவியானவர் செய்யும் வேலை. விசுவாசிகள் மூலமாக கிறிஸ்துவை உலகத்தில் மகிமைப்படுத்துகிறார். இவ்விரண்டு வேலைகளையும் பூரணமாய்ச் செய்யும்படிக்கே ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் சபையின்மேல் இறங்கினார். வாசிக்கிறவனே, உன்னில் ஆவியானவர் இந்தக் கிரியையும் நடப்பித்திருக்கிறாரா? சோதித்துப் பார். இவைகளைச் செய்யும் ஆவியானவரே உன் பிதா ஆதிகாலங்கள் முதல் உனக்கு வாக்குப்பண்ணியிருக்கும் வாக்குத்தத்தத்தின் ஆவியானவர்!

2. பெந்தேகோஸ்தே ஆவியானவர் இக்காலத்திற்குமுரியவரா என்று இனிப் பார்ப்போம்.

நாம் முதலாவது கவனித்த குறிப்பில் இந்தக் கேள்விக்கு உத்தரவைக் காண்கிறோம். கிறிஸ்தவர்களுக்குள்ளோ இதைக் குறித்துப் பல தப்பெண்ணங்கள் இருக்கின்றன. பெந்தெகொஸ்தே ஆவியானவர் அந்த ஆதித் திருச்சபைக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டார் என்று பலரும் எண்ணுகிறார்கள். பல பாஷை பேசும் வரமும், அற்புதங்களைச் செய்யும் சக்தியுமே பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை என்பதுபோலத் தப்பாய் எண்ணிக்கொண்டு, இந்த வரங்கள் காணப்பட்ட அந்தத் துவக்கக் காலத்திலேயே ஆவியானவர் கிரியை செய்தார் என்றாற்போலக் கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். பெந்தெகொஸ்தே ஆவியானவர் எக்காலத்துக்குமுரியவரல்ல என்று இப்படிப்பட்டவர்கள் சொல்லுகிறார்கள்.

வேதம் என்ன சொல்லுகிறது? அப்போஸ்தலர் நடபடிகளை வாசித்தால் இது தெளிவாகும். பெந்தெ

கொஸ்தே நாளில் நிறைவேறின பிதாவின் வாக்குத்தத்தம் அந்த நாளில் கூடியிருந்த நூற்றிருபது பேருக்கு மாத்திரமல்ல, அதற்குப் பின்னுள்ள எக்காலத்திலுமுள்ள எந்த விசுவாசிக்கும் செல்லும் என்று தெளிவாய்க் காண்கிறோம். பேதுரு அப்போஸ்தலன் அந்த நாளில் பண்ணின பிரசங்கத்தில்: 'மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்' என்று யோவேல் சொன்ன தீர்க்கதரிசனம் அன்று நிறைவேறினதாகச் சொன்னார். சிலருக்கல்ல, அந்த நூற்றிருபது பேருக்குமல்ல, அந்தக் காலத்தில் உயிரோடிருந்த அந்த ஒரு தலைமுறையாருக்கல்ல — மாம்சமான யாவருக்கும் கொடுக்கப்பட்ட வாக்கு அன்றையத்தினம் நிறைவேறிற்று.

அப்படியே அன்று குணப்பட்ட மனுஷரை நோக்கி பேதுரு: நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று சொன்னார். அதாவது: பரிசுத்த ஆவியானவர் மேல் வீட்டறையில் காத்திருந்த நூற்றிருபது பேராகிய எங்களுக்கு மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் உங்களுக்கும் கொடுக்கப்படுவார், அதற்காகவே இறங்கியிருக்கிறார் என்பது போல சொன்னான்.

இயேசுவை அறிந்திருந்த சில சீஷர் எபேசுபட்டணத்திலிருந்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் நினைத்தார். அவர்களோ அறிவீனத்தினாலே இந்தப் பெந்தெகொஸ்தே ஆவியைப் பெறாதிருந்தார்கள். அநேக வருஷங்களுக்குப் பின் அதே சபையாருக்கு எழுதுகிற நிருபத்தில் அப்போஸ்தலன்: ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்; ஆவியினால் நிறைந்திருங்கள் என்று கட்டளை கொடுக்கிறார்.

அப்படியே, முதல் நூற்றாண்டின் கடைசியிலிருந்த கிறிஸ்து சபை ஒன்றைப் பார்த்து யோவான் அப்போஸ்தலன் 'நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது' என்று உண்மையோடு சொல்லக்கூடியதாயிருந்தது. (1 யோ. 2 : 27.)

ஆகவே, அப்போஸ்தலருடைய போதனையைக் கவனிக்கும்போது, பெந்தெகொஸ்தே நாளில் இறங்கின ஆவியானவர் தங்களுக்கென்று மாத்திரமல்ல தாங்கள் அடையாளமாயிருந்த கிறிஸ்துவின் சரீரமாகிய மெய்யான திருச்சபை முழுவதற்கும் பொழிந்தருளப்பட்டார் என்று அவர்களெல்லாரும் எண்ணினார்கள் என்பது தெளிவு. "வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது'' என்று பேதுரு சொன்னது மெய்யான சத்தியம்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின்மேல் வந்து இறங்கினார். அன்றுமுதல் உலகத்தில் ஒரு புதுக்காலத்தை ஆரம்பித்தார். மெய்யான திருச்சபையானது கிறிஸ்து வாசம்பண்ணும் ஆலயமாகவும், கிறிஸ்துவின் யுத்தத்தை நடப்பிக்கும் சேனையாகவும் இருக்கும்படி அன்று அதை அபிஷேகம்பண்ணினார். அந்த அபிஷேக தைலமே பரிசுத்த ஆவியானவராகிய அக்கினி. அவர் மெய்விசுவாசிகளான ஒவ்வொருவருடைய இருதயத்திலும் வாசம்பண்ணி, அவர்கள் மூலமாய் உலகத்தில் கிரியை நடப்பிக்கும்படி சித்தமுள்ளவராய், எருசலேமிலிருந்த அந்த ஆதிச் சபையைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தையும் அன்று வந்து ஆண்டுகொண்டார். அதுமுதல் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின்

சரீரமாகிய சபையில் தமது சம்பூரண நிறைவுடன் வாசம் பண்ணுகிறவராஞர். ஆவியின் நிறைவு என்பது அன்று பரிபூரணமாய் ஆரம்பித்தது.

தமிழ் நாட்டுச் சபையிலுள்ள தேவனுடைய பிள்ளைகளே, நம்மிலும் பரிபூரண நிறைவுடன் வாசம் பண்ணவே ஆவியானவர் அந்த நாளில் ஊற்றப்பட்டார். நாம் இப்பொழுது பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னுகவே இருக்கிறோம். நமது பிதா நமக்குக் கொடுத்திருக்கும் சுதந்தரம் பரிசுத்த ஆவியின் நிறைவாகிய பெந்தெகொஸ்தே ஆவிதான் என்பதை உணர்ந்துகொள்ளுவோமாக.

இதுதான் தற்காலத்தில் நமது நாட்டிலுள்ள தேவனுடைய பிள்ளைகள் உணரவேண்டிய சத்தியம். நம்மிலே மறுபிறப்பை உண்டாக்கி, கிறிஸ்துவின் ஜீவனை நமக்கு அளித்த ஆவியானவர் யாரென்றால்: நம்மை எக்காலமும் நிரப்பிக்கொண்டிருக்கும்படி தேவன் பெந்தெகொஸ்தே நாளில் அருளிச் செய்த பெந்தெகொஸ்தே ஆவியானவரே. நமது பாவத்தை நமக்கு உணர்த்திக்காட்டி, கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொள்ளும்படிசெய்து நமக்குள் வந்து வாசம் பண்ணினவர் யாரென்றால்: கிறிஸ்துவை நம்மிலும் நமது மூலமாயும் மகிமைப்படுத்தும்படி வாஞ்சைகொண்டிருக்கிற பெந்தெகொஸ்தே ஆவியானவரே. 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல' (ரோ. 8 : 9). நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், கிறிஸ்துவின் ஆவி நம்மில் வாசம்பண்ணுகிறார். ஆனால், இப்போது நாம் கவனிக்கிற காரியம் அதுவல்ல; இவ்விதமாய் நம்மில் வாசம்பண்ணுகிற ஆவியானவர் நம்மைப் பரிபூரணமாய் நிரப்பிக்கொண்டிருக்கவே வந்தார் என்பதை நாம் அறியவேண்டிய காரியம்.

ஜியார்ஜ் பௌவன் என்பவர் ஓரிடத்தில்: பெந்தெகொஸ்தே நாள் திருச்சபைக்கு மாதிரி நாளாகக் கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் காலமாகிய இந்தக் காலத்தின் ஒவ்வொரு நாளும் அந்த முதல் நாளைப்போலவே இருக்கவேண்டியது; சரியாய்ச் சொன்னால் அந்த நாளை விட மென்மேலும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்க வேண்டியது என்று சொல்லுகிறார்.

ஆன்றிரூ மறே என்பவர்: பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் 'நாட்கள்' 'கடைசி நாட்கள்' என்று குறிப்பிட்டுப் பேசின காலத்தின் முதல்நாளே பெந்தெகொஸ்தே நாள். அந்த நாள்தான் இவ்வாசீர்வாதத்தின் சூரியோதயம். அதுமுதல் ஒவ்வொருநாளும் என்னவிதமாய் இருக்கக்கூடும் என்று அடையாளமாகக் காண்பிக்கவே அந்த நாள் திருச் சபைக்குக் கொடுக்கப்பட்டது. திருச் சபையின் குற்றத்தினாலேயே இப்போது பதினெட்டு நூற்றாண்டுகளாகியும் சபையானது இன்னும் அந்த நாளுக்குச் சரியாயுங்கூட வந்து சேரவில்லை. திருச்சபையின் முழுப் பிரகாசமும் அன்றோடே முடிந்துபோனது போலவும், அதற்குப்பின் குறைந்து வரவேண்டியதுதான் என்பதுபோலவும் கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். சபை பெந்தெகோஸ்தேக்குத் திரும்பட்டும்; பெந்தெகோஸ்தே அப்பொழுது சபைக்குத் திரும்பும் என்கிறார்.

தேவனுடைய பிள்ளைகளே, இருபதாம் நூற்றாண்டிலிருக்கும் நமது சபைகள் பெந்தெகொஸ்தே சபைகளாயிருக்கவேண்டியவை. நமது ஊழியக்காரர் பெந்தெகொஸ்தே ஊழியக்காரராய் இருக்கவேண்டியவர்கள் நமது வேலை பெந்தெகொஸ்தே வேலையாய் இருக்கவேண்டிய வேலை. ஏனென்றால் நமக்கு அருளப்பட்டிருக்கும் ஆவியானவர்

பெந்தெகொஸ்தே ஆவியானவர். ஆவியானவருடைய கிரியை நமது நடுவில் ஒருவாறு விளங்கியிருந்தாலும், தற்காலத்தி லுள்ள நமக்குச் சுதந்தரபாகமான பெந்தெகொஸ்தே ஆவியின் நிறைவான கிரியையை நமது நடுவில் காணே மல்லவா? ஆவியானவர் நம்மிடத்திலில்லை என்று நான் சொல்லுகிறதில்லை. நமது நடுவிலும் ஆவியானவர் கிரியை நடப்பித்திருக்கிறுர் என்பதற்குச் சந்தேகமில்லை. மற்றப்படி இயேசுவை நமக்கு இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்க மாட்டோம். "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது" (1கொரி.12:3). பரிசுத்த ஆவியானவர் ஜீவனைக் கொடுக்கிறவராக நம்மில் வாசம் பண்ணுவிட்டால் நாம் கிறிஸ்துவினுடையவர்களா யிருக்கமாட்டோம். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோ. 8:9).

என்றாலும், இந்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே வல்லமையோடு நம்மிலும் நமது மூலமாயும் கிரியை நடப் பிக்கவில்லை என்று நாம் ஒத்துக்கொள்ளவேண்டுமல்லவா? விசுவாசிகளாகிய நமது உள்ளத்தில் கிறிஸ்து வாசம்பண்ணு கிறுர் என்ற உணர்வு நம்மில் உண்டா? பரிசுத்த ஆவி யானவர் பெந்தெகொஸ்தே சபையில் செய்ததுபோல கிறிஸ்துவை நமக்கு அருமையாக்கியிருக்கிறுரா? குணப் படாதவர்கள் நடுவில் நமது மூலமாய் வல்லமையான கிரியை நடப்பிக்கிறுரா? எவ்வளவு சொற்ப பலன்களில் நாம் திருப்தியடைந்துவிடுகிறோம்! சகோதரரே, நமது சபை களுக்கும் ஊழியக்காரருக்கும் நம் ஒவ்வொருவருக்கும் தேவன் கொடுத்திருக்கிற ஆவியானவர் பெந்தெகொஸ்தே ஆவியானவர். நம்மில் அவருடைய கிரியை விளங்குகிறதா? அவர்தான் பிதாவினால் நமக்கு வாக்குப்பண்ணப்பட்ட ஆவி யானவர். அவர்தான் நம்மிலும், நமது மூலமாய் குணப்

படாதவர்கள் நடுவிலும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி கொடுக்கப்பட்டவர். அவர் இக்காலத்திற்கும் உரியவர். தமிழ்நாட்டுச் சபைக்கும் உரியவர். வாசிக்கிறவனே, உனக்கும் உரியவர்.

2-ம் அதிகாரம்

பெந்தெகோஸ்தே சபை

பெந்தெகோஸ்தே நாளில்தான் கிறிஸ்து சபை பிறந்தது. அன்றுதான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அவரால் அபிஷேகம் பெற்று, உலகத்தை கிறிஸ்துவுக்காக ஜெயிக்கும் சேனையாக அவரால் அனுப்பப்பட்டது. அந்த அபிஷேக தினத்தின் விசேஷம் யாவருக்கும் தெரிந்ததே. ஆவியின் ஸ்நானம் அன்று சபைக்கு அளிக்கப்பட்டது. பலத்த காற்று, அக்கினிமயமான நாவுகள், பல பாஷைகள் முதலிய வெளி அடையாளங்களோடு பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அன்று ஊற்றப்பட்ட ஆவியானவர்,—நாம் முந்தின அதிகாரத்தில் பார்த்தபடி—அப்பொழுது காத்திருந்த அந்த நூற்றிருபது பேருக்காக மாத்திரமல்ல, கிறிஸ்து நாதர் இரண்டாந்தரம் வரும் நாள் வரைக்கும் பூமியிலிருக்கும் விசுவாசசபை அனைவருக்காகவுமே ஊற்றப்பட்டார். 'தேவனாகிய கர்த்தர் தூரத்திலிருந்து வரவழைக்கும்' எல்லாருக்காகவும்,—அதாவது, எந்தத் தேசத்திலிருந்தும், எந்தக் காலத்திலும் கிறிஸ்துவை விசுவாசிக்கிறதற்கு அழைக்கப்படும் எல்லாருக்காகவும்—அன்று ஆவியானவர் இறங்கினார். பரிசுத்த ஆவியானவர் சபையில் தங்கி, உலகத்தில் கிரியை செய்யும் காலம் அன்று ஆரம்பித்தது.

ஆகவே, நாம் இப்பொழுது பெந்தெகோஸ்தே ஆவியின் காலத்தில் இருக்கிறோம். கிறிஸ்து சபையில் ஒவ்வொரு நாளும் பெந்தெகோஸ்தே நாளாகவே இருக்க வேண்டியது. உலகமெங்குமுள்ள கிறிஸ்துவின் சபைகள்

இப்பொழுது பெந்தெகொஸ்தே சபைகளாகவே இருக்க வேண்டியது நியாயம். அன்று இறங்கின ஆவியானவர் எந்நாளும் சபையை நிரப்பிக்கொண்டிருக்கவே வந்தார். நமக்கு எதிராக இருக்கும் விக்கிரகாராதனையையும், அசுத்தத்தையும், வீண் பக்தியையும், ஜெயிப்பதற்கு பெந்தெகொஸ்தே ஆவி தீராத அவசியம் என்று கண்டே சபா நாயகராகிய இயேசு அன்றையத்தினம் அவரைத் தமது சரீரமாகிய சபைக்குத் தந்தருளினார். அன்று ஊற்றப்பட்ட பெந்தெகொஸ்தே ஆவியானவர் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகிற நம்மில் கிரியை செய்து கொண்டிருக்கிறாரா? அந்த ஆவியானவரின் கிரியை காணப்பட்ட ஆதிச்சபையின் நிலைமையைச் சற்றுக் கவனிப்போமாக. அதின் மாதிரியைக் கொண்டு நம்மை ஆராய்ந்து பார்ப்போமாக. தமிழ்நாட்டுச் சபையும் அவ்விதமாயிருக்கவேண்டும் என்பதே தேவசித்தம்.

1. பெந்தெகொஸ்தே சபை ஐக்கியமும் ஏகசிந்தையுமுள்ள சபையாயிருந்தது.

அப் 2 : 42. "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அன்னியோன்னியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்."

2 : 44—46. "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்.

4 : 32. "விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது."

மேலே காட்டிய வசனங்களில் அவர்களுக்குள் எவ்வளவு ஐக்கியம் இருந்ததென்று காண்கிறோம். அவ்வைக்கியம் விசேஷமாக இரண்டு காரியங்களில் காணப்படுகிறது.

1—வது : சாப்பாட்டு விஷயத்தில் ஐக்கியம்.

'நான் உயர்ந்தவன்' 'நீ தாழ்ந்தவன்' என்ற வார்த்தை அவர்களுக்குக் கிடையாது. எங்கள் ஜனம், எங்கள் இனம் என்பதில்லை. "வீடுகள் தோறும் கபடமில்லாத இருதயத்தோடு போஜனம் பண்ணினார்கள்." பேதுரு தோல் பதனிடுகிறவனுடைய வீட்டிலே தங்கியிருந்தார். புறஜாதியானவனோடு போஜனம் புசிக்கிறதற்கு அங்கே தேவன் அவரை ஆயத்தப்படுத்தினார். தேவனுடைய ஆவியானவர் கொர்நேலியுவின் வீட்டார் பேரில் இறங்கினதை பேதுரு கண்டபோது, அவர்களுடைய வீட்டிலே தங்கிப் போஜனம் பண்ணினான் (அப். 10 : 48; 11 : 3). யூதன், புறஜாதியான் என்பது ஒன்றுமில்லை. சாப்பாட்டிலும் வித்தியாசமில்லை. கபடமில்லாத இருதயத்தோடு ஒருவர் வீட்டில் ஒருவர் போஜனம் பண்ணினார்கள்.

நமது நாட்டில் இது காணப்படுகிறதா? தேவனுடைய பிள்ளைகளுக்குள்ளும் ஜாதி வித்தியாசம் உண்டல்லவா? போர்டிங் பள்ளிக்கூடங்களில் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிடுகிற வாலிபரும் பெண்களும் பெரியவர்களாகும்போது ஒருவர் வீட்டில் ஒருவர் தண்ணீர் முதலாய் குடிக்காத நிலைமையிலிருக்கிறதில்லையா? ஒரே சபையில் பல வகுப்பாரைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் இருக்கும்போது

கலியாணம் முதலிய விசேஷ நாட்களில் விருந்து சாப்பிடு கிறது யார்? அந்தந்த வகுப்பைச் சேர்ந்தவர்களோ அல்லது கிறிஸ்தவ சிநேகிதர் எல்லாருமோ? எல்லாரும் ஒன்று போல ஆலயத்தில் ஆராதனைக்குப் போவார்கள். எல்லாரும் ஒன்றாய்ப் பந்தலில் உட்கார்ந்திருப்பார்கள். வெளியரங்க மாயும், ஆவிக்குரிய விஷயத்திலும் நெருங்கிய சிநேகிதராயு மிருக்கிறவர்களுங்கூட, வேறே ஜாதியைச் சேர்ந்தவர்களா யிருந்தால், சாப்பாட்டு நேரத்தில் வெளியே போய்விட வேண்டுமல்லவா? எவ்வளவோ கற்று, எவ்வளவோ பக்தி யுள்ளவர்களென்று தங்களை எண்ணிக்கொள்ளுகிறவர்களுங் கூட சில கிறிஸ்தவர்கள் வீட்டில் சாப்பிடாமலிருக்கிறது தங்களுக்குக் கண்ணியம் என்று நினைக்கிறார்களல்லவா? ஆவிக்குரிய எந்த விஷயத்தில் ஒன்றாய்க் கூடிக்கொண்டா லும், சாப்பாட்டு விஷயத்தில் மாத்திரம் கூடாதவர்கள் உண்டல்லவா? இப்படிச் செய்கிற தேவனுடைய பிள்ளைகள் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் எப்படித் தான் சகலரோடும் உட்கார்ந்து சாப்பிடுவார்களோ தெரியாது. ஆனால் இதிலிருந்து நமக்குத் தெளிவாகிறது இதுதான்: பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை நமது நடுவில் காணப்படவில்லை!

2-வது: பணவிஷயத்தில் ஐக்கியம்.

ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பணமும் கிறிஸ்துவின் ராஜ்ய விருத்திக்கென்றே உபயோகிக்கப்படவேண்டும் என்று ஆதிக் கிறிஸ்தவர்கள் உணர்ந்தார்கள். தேவன் பத்திலொன்றைக் கேட்கிறார் என்ற கணக்கு அவர்கள் மனதில் வரவில்லை. தம்முடைய சொந்த இரத்தத்தையும் தேவனுடைய குமாரன் தங்களுக்காகச் சிந்தினபின் தங் களுடையதனைத்தும் அவருடையது என்று உணர்ந்தார்கள்.

விசுவாசிகளுக்குள் ஒருவன் குறைவுபட்டவனாயிருக்க அவர்கள் சம்மதிக்கவில்லை. "சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்."

தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் ஏராளமாய்ப் பெருகியிருக்கிறதினாலும், கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒன்றுபோல மெய் விசுவாசிகளாயிராதபடியினாலும் எல்லாருடைய காணியாட்சிகளையும் விற்று, பொதுவாய் வைத்துக் கொள்வது கூடாத காரியம். ஆதித் திருச்சபையிலுங்கூட இவ்விஷயம் நெடுங்காலத்திற்கு இப்படி நடக்கவில்லையென்றும் தெரிகிறது. கொரிந்து சபையில் ஓய்வுநாள் தோறும் காணிக்கை செலுத்தும்படி ஆலோசனை சொல்லப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். எல்லாருடைய பணமும் ஒன்றாயிருந்தால் இது அவசியமாயிருந்திருக்கமாட்டாதே.

ஆனால் இந்தச் சிந்தை தற்கால சபையிலுண்டா? தங்கள் பணமும் காணியாட்சிகளும் தங்களுக்கென்றல்ல, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் விருத்திக்கென்று மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறதாக விசுவாசிகள் உணருகிறார்களா? குறைச்சலுள்ள விசுவாசிகளுக்கு உதவி செய்வது தங்கள் பேரில் விழுந்த கடமையென்று தேவனுடைய பிள்ளைகள் நினைக்கிறார்களா?

தேவனுடைய பிள்ளைகளிலும் எத்தனையோ பேர் தசமபாகந்தான் நமது கடமையென்று சொல்லுகிறதில்லையா? பிரசங்கிமாரும், தசமபாகமாவது கர்த்தருக்குக் கொடுக்கவேண்டியது நமது கடமையென்று பிரசங்கிக்கிறதில்லையா? பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப் பார்த்து: தசமபாகக் கட்டளை உங்களுக்குமுரியது என்று அப்போஸ்தலர்கள் எங்கேயாவது சொல்லியிருக்கிறார்களா? யூத சபைக்குரிய

கட்டளையைக் கிறிஸ்து சபைக்குரியதாக்கிக்கொள்வது எவ்வளவு தப்பிதம்! எருசலேமிலிருந்தவர்கள் தங்கள் பணங்களைப் பொதுவாய் வைத்திருந்தார்கள். இரத்தாம்பர வியாபாரியாகிய லீதியாள் விசுவாசியானபோது பவுலையும் அவரோடு போன மூவரையும் போஷிப்பது தன் கடமையென்று உணர்ந்தாள்.

நமது சபைகளில் குணப்படாத உலகத்தின் பிள்ளைகளை விட்டுவிடுவோம். தேவனுடைய பிள்ளைகளை மட்டும் பார்ப்போம். தாங்கள் வாங்கும் சம்பளம் தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் மாத்திரம்தான் என்று எண்ணமிருக்கும் விசுவாசிகள் எத்தனைபேர் நமது நாட்டிலுண்டு? அவர் நமக்குத் தரும் ஐசுவரியமும், உயர்ந்த சம்பளமும், கிறிஸ்துவின் ராஜ்ய விருத்திக்காக மாத்திரம் செலவிடப்படவேண்டும் என்று உணருகிறவர்கள் உண்டா? தங்களை இரத்தக்கிரயமாக மீட்டுக்கொண்ட இயேசு எஜமானுக்கே தங்கள் பணம் உரியது என்று நினையாமல், தாங்கள் சம்பிரமமாய் வாழவும், தங்கள் பெண்கள் மினுக்கான வஸ்திரம் கட்டவும், தங்கள் பிள்ளைகள் சொகுசாக ஜீவிக்கவும், பெரிய வீட்டுக்காரர் என்று பேரெடுக்கவுமே கொடுக்கப்பட்டிருக்கிறதுபோல எண்ணி நடக்கிறார்களல்லவா? கிறிஸ்துவின் ஊழியமும், சபை பராமரிப்பும், சுவிசேஷ வேலையும் பணக் குறைவினால் கஷ்டமனுபவிக்கும்போது அதற்கு உதவி செய்கிறதற்கு வாஞ்சை கொள்ளுகிறவர்கள் எத்தனை சொற்பம்! வறுமையடைந்திருக்கும் கிறிஸ்தவர்களுடைய குறைவைத் தங்களாலானமட்டும் நிவர்த்தி செய்யப் பார்க்கிறவர்கள் அநேகர் உண்டோ? மனச்சாட்சியைச் சமாதானப்படுத்தும்படி பத்திலொன்றைக் கொடுத்துவிட்டுப் பத்தில் ஒன்பதைத் தங்களுக்கென்று செலவழிக்கலாம்

என்றே மிச்சமானபேர் நினைக்கிறார்களல்லவா? பெந்தெகொஸ்தே சபையார் அப்படி எண்ணினார்களோ? நமது சபையிலும் பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை நடக்கும் பொழுது பெரிய மாறுதல் காணப்படமாட்டாதா? காணப்படும். ஆனால் இப்போதோ அவர் வல்லமையாய் கிரியை செய்யாமல் தடைபட்டிருக்கிறார்.

II. பெந்தெகோஸ்தே சபை ஜெப சிந்தையுள்ள சபையாயிருந்தது.

அப். 4 : 24, 31 — "அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது."

12 : 5 — பேதுரு சிறைச்சாலையில் காக்கப்பட்டிருக்கையில், சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடு ஜெபம் பண்ணினார்கள்."

13 : 1—3 "அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கும்போது பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி அவர்களை அனுப்பினார்கள்.

ஜெபம் ஆதிச் சபையார் சுவாசித்த சுவாசமாயிருந்தது. ஜெபக் கூட்டங்கள் அவர்களுக்குள் அதிகமாய் வைக்கப்பட்டது. தேவ ஊழியக்காரருக்காக இரா முழுவதும் தூக்கமின்றி ஜெபத்தில் தரித்திருப்பது அவர்களுக்குப் பெரிய காரியமாயிருக்கவில்லை. புறதேச அஞ்ஞானிகளுக்காக உபவாசித்து ஜெபிப்பது அவர்களுக்கு வருத்தமாயிருக்கவில்லை. தற்காலத்திலுள்ள நமது சபைகள் எப்படி? ஜெபக் கூட்டங்கள் எவ்வளவு சொற்பம்! பிரசங்கங்கள், பஜனைகள் உண்டு; பாட்டுக் கூட்டங்கள், வேத பாடக் கூட்டங்கள் ஏராளம். ஜெபத்திற்கென்று மாத்திரம் கூடுகிற

கூட்டங்கள் எவ்வளவு சொற்பம்! மேலும் ஜெபக் கூட்டங்களுக்கு வருகிறதற்கு ஜனங்கள் திவிரிக்கிறார்களா? பஜனைக்கு ஓடுவார்கள். பாட்டுக் கூட்டத்தில் நிற்க இடம் கிடையாமல் கூட்டம் நிறைந்து போம். ஜெபக் கூட்டம் என்றால் கால் எழும்பாது. "வெறும் ஜெபக் கூட்டந்தானே" என்கிறார்களல்லவா? ஜெபத்தில் வல்லமை காணப்படுகிறதா? ஜெபத்திற்கு உத்தரவாக தேவ ஊழியர் பேரில் ஆவியானவரின் புதுவரங்கள் அருளப்படுகின்றனவா? ஜெபத்தினாலே புறமதஸ்தருக்கு ஊழியக்காரர் பிரித்து வைக்கப்படுகிறார்களா? இல்லை அல்லவா? ஒருமனப்பட்ட ஊக்கமான ஜெபத்தைச் சபையில் காணோம். இவைகள் எதைக் காட்டுகிறது? பெந்தெகொஸ்தே சபையில் போல நமது சபைகளிலும், ஜெபத்தின் ஆவியும் விண்ணப்பத்தின் ஆவியுமான பரிசுத்த ஆவியானவர் ஊக்கமான ஜெப சிந்தையை உண்டாக்கவேண்டியது நியாயமானாலும், ஏதோ காரணத்தினால் நமது நடுவில் அவருடைய கிரியை தடுக்கப் பட்டிருக்கிறதென்பதையே அல்லவா?

III. அவிசுவாசிகளைக் கர்த்தரிடம் இழுக்கும் வல்லமை பெந்தெகொஸ்தே சபையிலிருந்தது.

அப். 2 : 43—"எல்லாருக்கும் பயமுண்டாயிற்று."

2 : 47—"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்."

8 : 4—"சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து, சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள்."

11 : 19—"ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினால் சிதறப்பட்டவர்கள் கர்த்தராகிய இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள். கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது. அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தர் இடத்தில் திரும்பினார்கள்."

ஒவ்வொரு விசுவாசியும் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணவேண்டியவன் என்று பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்கள் உணர்ந்தார்கள். அவர்களுடைய அன்னியோன்னிய ஜீவியத்தினால் சுற்றிலுமிருந்தவர்களுக்குப் பயம் உண்டாயிற்று. துன்பத்தினால் சிதறடிக்கப்பட்டபோது, அவர்கள் போனபோன இடங்களிலெல்லாம் விசுவாசிகள் பெருகினார்கள். தற்காலச் சபையில் அப்படி இருக்கிறதா? ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவது விசுவாசிகள் ஒவ்வொருவருக்குமுரிய வேலையென்று தேவனுடைய பிள்ளைகள் நினைக்கிறார்களா? ஆதித் திருச் சபையிலோ அவ்வித சிந்தை காணப்பட்டது. விசுவாசிகள் ஆவியானவரால் நிரப்பப்பட்டபோது, ஜீவத் தண்ணீருள்ள நதிகள் அவர்களிலிருந்து எப்பக்கமும் ஓடின. அவர்களுடைய சரீர பிழைப்புக்குரிய வேலை எதுவென்பது காரியமில்லை. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கூடார வேலை செய்தவர்கள் தான். ஆனால் அவர்கள்தான் அப்பொல்லோவுக்கு 'தேவனுடைய மார்க்கத்தைத் திட்டமாய் விவரித்துக் காண்பித்தவர்கள்' (அப். 18 : 24-26). அனனியா சாதாரண ஒரு சீஷன்தான். ஆனால் அவன்தான் பவுலுக்கு தேவ செய்தியைத் தெரியப்படுத்தி, அவன் ஆவியானவரால் நிரப்பப்படுகிறதற்குக் காரணமாயிருந்தான் (அப். 9 : 10).

ஆவியானவர் கிரியை செய்தால்தான் குணப்படுதல் உண்டாகும். குணப்படுதல் நமது சித்தத்தினாலேயா என்று இதை வாசிக்கிறவர்கள் ஒருவேளை நினைக்கலாம். அது நிசந்தான். ஆனால் விசுவாசிகள் மூலமாகத்தான் ஆவியானவர் கிரியை செய்கிறவர். "நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன், அவர் வந்து—அவர் உங்களிடத்தில் வந்து, அங்கிருந்து பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." நமது மூலமாகத்

தான் ஆவியானவர் உலகத்தில் கிரியை நடப்பிப்பார். 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ' அவனுடைய உள்ளத்திலிருந்து—விசுவாசி எவனோ அவனுடைய ஜீவியத்திலிருந்து — ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓட வேண்டுமே. பெந்தெகொஸ்தே பின்னடியாராகிய உடன் சபையாரே, ஆவியானவர் நமக்குள்ளிருந்து பாவத்தை கண்டித்து உணர்த்துகிறாரா? நம்மைப் பார்க்கிறதினால் அவிசுவாசிகள் பயப்படுகிறார்களா? நாம் போகும் இடங்களிலெல்லாம் ஆத்துமாக்களை இரட்சிக்கும் தேவ வல்லமை நதிகளாக நம்மிடத்திலிருந்து பாய்ந்து செல்லுகிறதா? தற்காலம் சபையில் வேலைக்கு ஏதாவது குறையுண்டா? தெருப் பிரசங்கங்களுக்குக் குறையா? தேசாந்தர, கூடார பிரசங்கங்களுக்கு நாம் போகவில்லையா? புறமதஸ்தருக்குப் பிரசங்கங்கள், படித்தவர்களுக்கு உபந்நியாசங்கள் முதலியவைகள் நடந்துவரவில்லையா? ஆம், எல்லாம் நடக்கின்றன. வல்லமையையோ காணோம்! காரணம் என்ன? பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துவின் சபைக்கு அருளப்பட்ட ஆவியானவர் ஏதோ காரணத்தினால் நமது நடுவில் தமது கிரியையை வல்லமையாய் நடப்பிக்கவில்லை.

தேவனுடைய பிள்ளைகளே, நமது சபைகளில் பொதுவாய் பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை காணப்படவில்லையென்பது தெளிவல்லவா? பரிசுத்த ஆவியின் கிரியை நமது நடுவில் இல்லையென்று நான் சொல்லுகிறதில்லை. இயேசுவை தேவகுமாரன் என்று விசுவாசித்தவர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் இருந்ததுபோல இப்போதும் ஏராளமான பேர் இருக்கிறார்கள். ஆனால் நப்கால சபைக்கு இருக்கவேண்டிய பெந்தெகோஸ்தே ஆவியின் கிரியை நம்மில் விளங்கக்காணோம் என்பது சத்தியம்.

அநேகருக்குள் இது விஷயத்தில் தப்பான எண்ணமுண்டு. "தற்காலத்தில் எவ்வளவு அறிவீனமுள்ளவர்கள் சபையில் சேர்ந்திருக்கிறார்கள்! எவ்வளவு உற்சாகமாய்க் காணிக்கை கொடுக்கிறார்கள்! இதெல்லாம் சின்னக் காரியமா?" என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவைகள் பெரிய காரியங்கள் தான். இதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் நாம் பெந்தெகொஸ்தே சபையின் பின்னடியார், பெந்தெகொஸ்தே ஆவிக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். பின்னை, ஏன் பெந்தெகொஸ்தே சபையில் காணப்பட்ட பலன்களைக் காணோம்? இந்த நிலைமைக்கு உத்தரவாதிகள் யார்? நாமா? தேவனா? தேவன் நமக்கென்று ஆவியானவரை ஊற்றினாரே. குற்றம் நமது பேரில் தானல்லவா? தேவ சமுகத்தில் தரித்திருந்து இந்தக் காரணத்தை நாம் கண்டுபிடிப்போமா? சபை ஒவ்வொன்றும் பெந்தெகொஸ்தே சபையாயிருக்கவேண்டுமென்பதே தேவ சித்தம். அவர் தமது வல்லமையுள்ள கிரியையை நம்மிலும், நமது மூலமாயும் தாராளமாய்ச் செய்யாதபடி நாமல்லவா அவரைத் தடுத்துக்கொண்டிருக்கிறோம்? இதை உணரும்படி ஆவியானவர் இதைவாசிக்கும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் கிருபை செய்வாராக!

3-ம் அதிகாரம்.

பெந்தெகோஸ்தே ஊழியர்

பெந்தெகோஸ்தே சபை எப்படிப்பட்டதாயிருந்த தென்று முந்தின அதிகாரத்தில் பார்த்தோம். ஆதிச் சபையின் நிலைமையைக் கவனித்து, தற்கால சபையும் வேலையும் அவ்விதமாயிருக்க வேண்டியவையானாலும் பெந்தெகோஸ்தே ஆவியின் வல்லமையை நமது நடுவில் காணோம் என்று சொன்னோம். இப்பொழுது, சபையின் ஊழியரில் பெந்தெகோஸ்தே ஆவியின் கிரியை காணப் படுகிறதா என்று பார்ப்போமாக.

கிறிஸ்து சபையின் ஊழியம் மகிமையுள்ள ஊழியம். ஏனென்றால், இது புது உடன்படிக்கையின் ஊழியம் (2 கொ. 3: 6-11). பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் ஆசாரியரைப் பார்க்கிலும் புதிய ஏற்பாட்டு தேவ ஊழியர் விசேஷித்தவர்கள். யோவான் ஸ்நானன் சம்பந்தமாய் இயேசுநாதர் இதைக்காட்டினார். "யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை" யென்று தீர்த்து விட்டார். எலியா, எலிசா, ஏசாயாவைப் பார்க்கிலும் யோவான்ஸ்நானன் விசேஷித்தவன்தான். ஆனால் சுவிசேஷ காலத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனி லும் பெரியவனாயிருக்கிறான். ஏன் இவன் பெரியவன்? இவன் ஆவிக்குரிய ஊழியன். கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வேலையை இவன் மூலமாய்ச் செய்வார். சுருக்கிச் சொன்னால், பெந்தெகோஸ்தே சபை யூதச் சபையைப் பார்க்கிலும் வல்லமை பொருந்தியதும், விசேஷித் ததுமாயிருந்ததுபோல யூதச்சபையின் ஊழியரைப் பார்க்கி லும் பெந்தெகோஸ்தே ஊழியர் விசேஷித்தவர்கள்தான்.

இவர்களில் காணப்பட்ட தேவ வல்லமை எவ்வளவு! தைரியம் எவ்வளவு! விடாமுயற்சி எவ்வளவு! இவர்கள் வேலையினால் காணப்பட்ட மாறுதல் பழைய ஏற்பாட்டின் எந்த மாறுதலைப்பார்க்கிலும் விசேஷித்ததல்லவா?

தமிழ் சபையின் ஊழியரே, இப்பொழுது நாம் பெந்தெகொஸ்தே காலத்தில்தான் இருக்கிறோம். நமது ஊழியக்காரரும் பெந்தெகொஸ்தே ஊழியக்காரராகவே இருக்க வேண்டியது நியாயம். தமது சுவிசேஷத்திற்கு விரோதமாய்க் கிரியை நடப்பிக்கும் லௌகீகம், நிர்விசாரம், அசுத்தம் முதலிய துர்க்கிரியைகளை ஜெயிப்பதற்கு பெந்தெ கொஸ்தே ஆவி தீராத அவசியம் என்று கண்டே, சபா நாயகர் அந்நாளில் தமது ஆவியைப் பொழிந்தருளினார். என் உடன் ஊழியரே, அந்தத் தேவாவியானவர் கிறிஸ்து வின் ஊழியக்காரரான நம்மில் கிரியை செய்து கொண் டிருக்கிறாரா? அந்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட ஊழியக்காரரைச் சற்றுக் கவனிப்போமாக. அவர் களுடைய மாதிரியைக் கொண்டு நம்மை ஆராய்ந்து பார்ப் போமாக. தமிழ்நாட்டு தேவ ஊழியக்காரரும் அப்படி இருக்க வேண்டும் என்பதே தேவ சித்தம்.

1. பெந்தெகோஸ்தே ஊழியர் ஆத்துமாக்களை ஆயத்தம் பண்ணும் ஊழியராயிருந்தார்கள்.

அப். 2 : 41 —அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

8 : 12 —பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

11 : 24 —பர்னபா நல்லவனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான். அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

14 : 1 — திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள்.

17 : 4 —அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்துப் பவுலையும் சீலாவையும் சேர்ந்துக் கொண்டார்கள்.

இப்படியே ஒவ்வொரு அதிகாரத்திலும் கவனிக்கலாம். பெந்தெகொஸ்தே ஊழியர்போய் பிரசங்கம் பண்ணின ஓரிடத்திலாவது பலன் காணப்படாமல் போகவில்லை. எங்கெங்கே அந்த ஊழியர் போனார்களோ, அங்கங்கெல்லாம் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையில் சேர்த்தார். வழியில் போகிற மந்திரியிலானாலும் சரி, வீட்டில் கூடியிருக்கும் சிநேகிதரிலானாலும் சரி, எருசலேம் தேவாலய மண்டபங்களிலானாலும் சரி, அந்தியோகியாவின் ஜெப ஆலயத்திலானாலும் சரி, ஆற்றங்கரையிலானாலும் சரி, சிறைச்சாலையிலானாலும் சரி — எங்கும் தேவவல்லமை அவர்கள் மூலமாய்க் கிரியை செய்தது. ஜீவ தண்ணீருள்ள நதிகள் அவர்கள் போனபோன இடமெல்லாம் அவர்கள் உள்ளத்திலிருந்து ஓடி, பாழான வெளிகளைப் பசுமையாக்கிற்று. அப்போஸ்தலர் தலைமுறைக்குள்ளாக, எருசலேம் துவக்கி ஸ்பானியா நாடுவரைக்கும், யூதமார்க்க அரண்களிலும், எபேசுவின் வீதிகளிலும், ரோமாபுரி அரமனையிலும், சின்ன ஆசியாவின் மாகாணங்களிலும் கிறிஸ்து சபைகள் உண்டாகிவிட்டன. அவர்களுக்குப் படிப்புக் கிடையாது, பணம் கிடையாது, பெரியோர் தயவு கிடையாது, ராஜாங்க வல்லமை கிடையாது. எளிமைத்தனமும், உபத்திரவங்களுமிருந்தாலும், அவர்கள் மேல் ஊற்றப்பட்ட ஆவியின் வல்லமையால் ராஜ்யங்களை ஜெயித்தார்கள்.

தமிழ் நாட்டுக் கிறிஸ்து சபையின் ஊழியரே, நமது மூலமாக ஆவியானவர் இப்படிக் கிரியை செய்கிறாரா? நாம் பெந்தெகொஸ்தே ஊழியரின் பின்னடியார்தானல்லவா? அப்போஸ்தலர் காலத்துச் சபை ஒழுங்கும், சபை விசாரணையும் எங்கள் சபைக்குத்தானுண்டு; நாங்கள்தான் அப்போஸ்தலரின் பின்னடியார் என்று ஒவ்வொரு சபையும், அதின் ஊழியரும் ரூபிக்கும்படி பிரயாசப்பட்டு, சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்களேயன்றி, அப்போஸ்தலரில் காணப்பட்ட வல்லமையைக் காண்பிக்கும் சபையையும், ஊழியக்காரரையும் காணோமே. வருஷமுழுவதும் ஓய்வு நாட்களில் காலை மாலை பிரசங்கங்கள் செய்கிறோம். தெருவிலும், திண்ணையிலும், கோவிலிலும், பள்ளிக்கூடங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. ஆத்துமாக்களை இரட்சிக்கும் ஆவியானவர் நமது மூலமாகக் கிரியை நடப்பிக்கிறாரா? நமது வார்த்தைகள் மூலமாய்ப் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறாரா? இயேசுவை மகிமைப்படுத்துகிறாரா? இதின் பலனாக ஜீவியங்கள் மாற்றப்பட்டிருக்கின்றனவா? "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும் வந்தது" என்று எத்தனை போதகன்மார், ஊழியர் தங்கள் சபையைப் பார்த்துச் சொல்லக்கூடும்? ஒரு வருஷம் முழுவதும் வேலை செய்தபின் மெய்யாய்க் குணப்பட்ட ஆத்துமா ஒன்றுமில்லை என்று சொல்லக்கூடியவர்கள்தான் ஏராளம் அல்லவா? கிறிஸ்து சபை ஊழியமோ ஆவிக்குரிய ஊழியம். ஆவியின் வல்லமை கிரியை செய்யும் ஊழியம். மனுஷரைப் பிடிக்கும் ஊழியம். அநேகரை ஆவியானவர் குணப்படுத்துகிறதினால் கிறிஸ்துநாதர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியாகக் கருவியாயிருக்கும் ஊழியம். ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணினது தான் ஆதிச் சபையின் விசேஷம் அல்லவா? ஆத்துமாக்

களை ஆதாயம் பண்ணுமல் பிரயோசனமற்ற பிரசங்கங்கள் செய்துகொண்டிருந்த எந்த ஊழியக்காரனுவது ஆதிச் சபையில் இருந்தானே? நமது நாட்டிலோ, ஐயோ! பெந்தெகொஸ்தே ஊழியரைக் காண்பது எவ்வளவு அரிது!

நமது ஊழியருக்குள் வேத அறிவுக்குக் குறையா? தமிழ் ஞானத்திற்குக் குறையா? சாதுரியத்திற்குக் குறையா? பாட்டுகள், ராகங்களுக்கு ஏதேனும் குறைவுண்டா? கவிஞருக்கும் குறைவா? கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இவை ஒன்றுக்கும் குறைவில்லை. நமது காலத்தை விசேஷப்படுத்திக் காட்டவேண்டிய ஆவியின் வல்லமையையோ காணேம்! சபையில் வல்லமையாய் வாசம்பண்ணி, சபையின் ஊழியர் மூலமாய்ப் பாவத்தை கண்டித்து உணர்த்தவும், ஆத்துமாக்களைக் குணப்படுத்தவும், கிரியை செய்யவேண்டிய ஆவியானவர் ஏதோ காரணத்தினுல் நமது மூலமாய்க் கிரியை செய்யக்கூடாமல் தடைபட்டிருக்கிருரல்லவா?

2. பெந்தெகோஸ்தே ஊழியர் மெய்யான தாழ்மையுள்ள ஊழியராயிருந்தார்கள்.

அப். 3 : 12 — நாங்கள் எங்கள் சுய சக்தியினுலாவது, எங்கள் சுய பக்தியினுலாவது இவனை நடக்கப்பண்ணினேமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?

9 : 43—பின்பு அவன் யோப்பா பட்டணத்திலே தோல் பதனிடுகிறவனுகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் அநேகநாள் தங்கியிருந்தான்

11 : 15, 17 — நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் இறங்கினுர்.........தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்.

14 : 14—பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துக்குள்ளே ஓடி......நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே என்றார்கள்.

மேலே காட்டியிருக்கும் வசனங்களைப் பிரித்துச் சொன்னால், அவர்களுடைய தாழ்மை மூன்று விஷயத்தில் காணப்பட்டதென்று கவனிக்கலாம்.

(1) வேலை செய்வதில் மனத்தாழ்மையை அணிந்திருந்தார்கள்.

தங்களில் எவன் பெரியவன் என்ற கேள்வியெல்லாம் அவர்களுக்குள் நின்றுவிட்டது. முதல் நாளில் பேதுரு மாத்திரந்தான் பிரசங்கம் செய்தார். பேசுகிறதற்கு எங்களுக்கும் இடம் வேண்டும் என்று மற்றவர்கள் சண்டை போடவில்லை. உதவிக்காரராகிய ஸ்தேவானும், பிலிப்பும் செய்த வேலையினால் ஆத்துமாக்கள் குணப்பட்டபோது, அப்போஸ்தலர் பொறாமை கொள்ளவில்லை. அவர்களால் ஞானஸ்நானம் பெற்றவர்களைத் திட்டப்படுத்தும்படி அப்போஸ்தலர் அனுப்பப்பட்டார்கள் (8 : 14). உங்கள் வேலை விதவைகள் கணக்குப்பார்ப்பதல்லவா? நீங்கள் ஏன் பிரசங்கவேலை செய்கிறீர்கள்? என்று ஒருவரும் சொல்லவில்லை. கொர்நேலியு வீட்டில் பேதுரு பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் ஆவியானவர் ஊற்றப்பட்டார் என்று அப்போஸ்தலர் கேள்விப்பட்டபோது, தேவனை மகிமைப்படுத்தினார்கள் (11 : 18). சின்ன யாக்கோபு என்று பேர் பெற்றவர் எருசலேம் சங்கத்திற்கு முதலாளியாக வைக்கப்பட்டார். வலதுபக்க இடம் கேட்ட யோவான் கடைசி இடத்திற்குப் போய்விட்டார்.

தமிழ் நாட்டு தேவ ஊழியரே, நம்மை ஆராய்ந்து பார்ப்போமாக. நம்மிடத்தில் இவ்வித தாழ்மை காணப் படுகிறதா? பேசுகிறவர்களில் ஒருவராக நாம் குறிக்கப்படா திருக்கும்போது நமக்குப் பொறாமை உண்டாகிறதில்லையா? உத்தியோக ஒழுங்கின்படி நமக்குக் கீழானவர்கள் வேலை செய்வதினாலுண்டாகும் பலனை நசுக்குமதிப்பதும், அதைப் பார்த்துச் சந்தோஷிப்பதும் நமது மனதிற்குக் கஷ்ட மல்லவா? நம்மை முதலாளியாகவாவது, முக்கிய அங்கமாக வாவது, பேசுகிறவர்களில் ஒருவராகவாவது, ஆலோசனைக் காரராகவாவது வைத்தால் முன்னுக்கு நிற்போம்; மற்றபடி குறை கூறுவதே நமது தொழிலாகிவிட்டதல்லவா? என்பேர் முதலில் வர வேண்டும், என் சபை எல்லாராலும் கவனிக்கப் படவேண்டும், என் சபை ஒழுங்கு எவ்வளவு சிறந்தது! ஐயோ! இவைகளல்லவா அடிக்கடி நமது காதுகளில் விழுகிற சத்தம்? "தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று" என்பது நம்மைப் பற்றியும் உண்மையல்லவா? வாயினால் வாக்கு வாதம் பண்ணாவிட்டாலும், இருதயத்தில் அப்படிப்பட்ட நினைவு உண்டே. பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் சீஷர் இருந்த நிலைமையில் ஜீவிக்கிறோமேயன்றி, சகல பொறாமை யையும், கனத்தையும் ஒழித்துத் தம்மைத் தாழ்த்தினவரின் ஆவியானவரது வல்லமைக்குரியவர்களாக நாம் ஜீவிக்க வில்லையே!

(2) வேலை விஷயமாய் மற்றவர்கள் கனம் செய்யும் போது தாழ்மையை அணிந்தார்கள்.

அற்புதம் நடந்தாயிற்று. அற்புதத்திற்குக் கருவிக ளாயிருந்த அப்போஸ்தலரை ஜனங்கள் வெகு கூர்மையாய்ப் பார்க்க அவர்களுடைய உத்தரவு என்ன? "நாங்கள் எங் களைக் கிறிஸ்துவுக்கு முற்றிலும் ஒப்புவித்து ஆவியானவரால்

நிரப்பப்பட்டிருக்கிறோம்; ஆகையால் கிறிஸ்துவின் நாமத்தினால் இதைச் செய்தோம்'' என்று சொன்னார்களோ? இல்லை. ''நாங்கள் எங்கள் சுய சக்தியினாலாவது, எங்கள் சுய பக்தியினாலாவது இவனை நடக்கப்பண்ணினோம் என்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?'' என்றார்கள். மரித்த தொற்காளை உயிரோடெழுப்பிவிட்ட அப்போஸ்தலன், 'பின்பு போய்' தோல் பதனிடுகிறவனுடைய வீட்டில் இருந்தாராம். அற்புதம் நடந்ததினால், தேவர்கள் வந்துவிட்டார்கள் என்று ஜனங்கள் பூமாலை கொண்டுவருகிறார்கள். அப்போஸ்தலரோ தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளுகிறார்கள். ஐயோ, இதென்ன பாவம்! தேவனை மகிமைப்படுத்துகிறதற்குப் பதிலாக எங்கள் மேல் உங்கள் கவனம் வந்துவிட்டதே என்பதுபோல நினைத்து வஸ்திரங்களைக் கிழித்து, எல்லாருக்கும் முன்பாகத் தங்களைத் தாழ்த்துகிறார்கள்.

உடன் ஊழியரே, நம்மில் இது உண்டா? நம்முடைய வேலையையும் பிரசங்கங்களையும் மெச்சிக் கொள்ளுகிறவர்கள் மேல்தான் நமக்குப் பிரியம் அல்லவா? நமது உத்தியோகத்திற்குரிய கனத்தை ஒருவன் செலுத்தாவிட்டால் எவ்வளவு கோபம்! எவ்வளவு மனக்கசப்பு! ஜனங்கள் தேவனையும் அவருடைய பரிசுத்த நாளையும், அவருடைய கட்டளைகளையும் கனப்படுத்துகிறார்களா என்ற கவனத்தைவிட, நமக்கும், நமது மனைவிக்கும் அவர்கள் பூமாலையிட வேண்டும் என்றும், சந்திப்பு வைக்க வேண்டும் என்றும் அதிகக் கவனம் கொள்ளுகிறோமல்லவா? 'நமக்கு இவர்கள் இதெல்லாம் செய்யவேண்டியதுதானே' என்றுங்கூட பேசுகிறோமே. நாம் செய்யும் வேலையினாலும் பிரசங்கத்தினாலும் நமக்குக் கனமும், பெருமையும் உண்டாக வேண்டுமென்றும், நமது ஜனங்கள் மனதிலும், பெரியோர்

மனதிலும் நம்மைப்பற்றி நல்லெண்ணம் உண்டாக வேண்டுமென்றும் பார்க்கிறோமேயன்றி, அப்போஸ்தலர் செய்தது போல, மற்றவர்கள் நம்மைக் கவனியாதபடி வேலை செய்யும் சிந்தை இன்னும் நமக்கு உண்டாகவில்லையல்லவா? தாழ்ந்த வீட்டுக்குப்போய் அங்கே தங்குவது நமது அந்தஸ்துக்குக் குறைவாகிப்போகிறதாக நினைக்கிறோமல்லவா? பூமாலை கொண்டு வந்தவர்கள் முன்பாக வஸ்திரங்களைக் கிழித்தவர்களின் பின்னடியாராகிய உடன் சகோதரரே, இந்த ஆவி நம்மிடத்தில் உண்டு என்றும் நாம் சொல்லக்கூடுமா? பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை நம்மில் இன்னும் நடக்கவில்லை என்பதற்கு இவைகள் போதுமான அத்தாக்ஷிகளல்லவா?

(3) வேலையைக் குறித்துக் கணக்கு ஒப்புவிப்பதில் தாழ்மையைத் தரித்தார்கள்.

பெந்தெகொஸ்தேக்கு முன் வேலைசெய்ய அனுப்பப்பட்டபோது, "அப்போஸ்தலர் திரும்பி வந்து தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விவரித்துச் சொன்னார்கள்." (லூக். 9 : 10). பெந்தெகொஸ்தே ஊழியர் இருவர் வேலை செய்து திரும்பிவந்து, "தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளை அறிவித்தார்கள்." (அப். 14 : 27). கொர்நேலியுவின் வீட்டில் ஆவியின் வல்லமை மகத்துவமாய்க் காணப்பட்டது. பேதுரு, "நான் கூடியமட்டும் நன்றாய்ப் பிரசங்கித்தேன்; இயேசுவின் ஜீவியமுழுவதையும் நன்றாய்ச் சுருக்கிச்சொன்னேன்; உடனே ஆவியானவர் வந்து இறங்கி விட்டார்" என்று சொன்னாரோ? இல்லை. "நான் பேசத் தொடங்கினபோது"—அதாவது, நான் என் பிரசங்கத்தை அப்போதுதான் ஆரம்பித்தேன். அதற்குள் ஆவியானவர் இறங்கிவிட்டார். எனக்கும் ஆச்சரியந்தான். தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்! என்பதுபோலச்

சொல்லுகிறார். அப்போஸ்தலர் நடபடிகளை வாசிக்கிறோமே. எந்த அப்போஸ்தலனையாவது மகிமைப்படுத்தி ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா? எல்லாம்: தேவனை மகிமைப் படுத்தினார்கள்; கர்த்தருடைய வசனம் பரம்பியது; கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள்-இதுதான் ரிப்போர்ட்டு

தேவ ஊழியரே, நமது காரியம் எப்படி? நமது ரிப்போர்ட்டுகளில் எத்தனையோ பேர் மகிமையைப் பெறுகிறார்களே. மிஷனெரிமாருக்கு மகிமை; பிரசங்கிகளுக்கு மகிமை; போதகருக்கு மகிமை; தாய்க் கமிற்றிமாருக்கு மகிமை — மீதி எத்தனையிலொருபாகம் தேவனுக்குப் போகிறது? தேவன் நம்மைக்கொண்டு கிரியை நடப்பித்தது மெய்யானால், அவருக்கல்லவா மகிமை முழுவதும் போக வேண்டும்! ‘என் மகிமையை வேறொருவருக்கும் கொடேன்’ என்று அவர் சொல்லியிருக்கிறாரே. தேவன் நம்மைக்கொண்டு கிரியை நடப்பிக்கிறதுமில்லை, நமது மூலமாய் அவருக்கு மகிமை கிடைக்கிறதுமில்லை. மாம்சம் வேலை நடப்பிக்கிறது. பற்பலராலும், பற்பல சமயங்களிலும் மாம்சத்திற்கே கனமும் புகழ்ச்சியும் மகிமையும் உண்டாகிறது! இயேசுவின் ஊழியத்திலும், பெந்தெகொஸ்தே ஊழியத்திலுமோ, எப்போதும், “அவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்” என்றே வாசிக்கிறோம். ஆவியானவரின் பெந்தெகொஸ்தே கிரியைகள் நமது நடுவில் பலமாய்க் காணப்படவில்லையென்பதற்கு நமது ரிப்போர்ட்டுகளும் அத்தாட்சிகளல்லவா?

3. பெந்தேகோஸ்தே ஊழியர் ஜெபத்தில் தரித்திருந்தவர்களாயிருந்தார்கள்.

அப் 6: 4—நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.

10: 9—பேதுரு ஆறும் மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினன்.

14: 23—அந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்து உபவாசித்து ஜெபம்பண்ணினர்கள்.

16: 14, 16—ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உபதேசித்தோம். நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்திற்குப்போகையில் ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.

16: 25—நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி தேவனைத் துதித்துப் பாடினர்கள்.

தங்களுக்குக் கொடுக்கப்பட்டது இரண்டு வேலை என்று உணர்ந்தார்கள் — இடைவிடாத ஜெபம்; இடைவிடாத போதனை. மத்தியானம், நடு ராத்திரி என்று அவர்கள் பார்க்கவில்லை. சிறைச்சாலை, ஆற்றங்கரை, கடற்கரை மணல் என்று அவர்கள் கவனிக்கவில்லை. எங்கும் ஜெபம்பண்ணினர்கள். வல்லமை தங்களில் இல்லை என்று அவர்கள் நன்றாய் உணரவே, தேவனுடைய வல்லமைக்காக ஓயாமல் அவர் பாதத்தைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். இவ்வித ஜெபத்தினல் நீர்ப்பாய்ச்சப்பட்ட சபை வல்லமையாய் வளர்ந்தது.

மேற்காட்டிய வசனங்களைத் திரும்பவும் வாசிப்போம். ஜெபம்பண்ணுகிற வேலைக்கென்று சில வேலைகளை விட்டுவிட்டார்கள். பிரசங்க வேலையில்லாமல் இளைப்பாறின போது, மதிய நேரத்தில் மேல் வீட்டில் பேதுரு ஜெபம் பண்ணுவதில் நேரத்தைப் பின்னிட்டார். சபையில் உத்தியோகஸ்தரை நியமித்தால் உபவாசித்து ஜெபம் பண்ணித்தான் அவர்களை நியமிப்பார்கள். அவர்கள் ஜெபம் பண்ணுவதற்கு விசேஷ இடங்கள் இருந்தன. ஊருக்கு வெளியே, வனாந்தரமான இடத்தில், தங்கள் எஜமானைப்

போல இவர்களும் தேவனேடே கலந்துபேசித் தங்கள் வேலைகளைச் செய்தார்கள். பவுல் அப்போஸ்தலனில் இது அதிகப் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகிறது. ஜெபத்தினலே குணப்பட்டார். மூன்று நாள் ஜெபத்திற்குப் பின் ஆவியானவரால் நிரப்பப்பட்டார். ஜெபத்தின் பலனுகப் புறதேசத்திற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். ஜெபத்தினல் அவர்களை வளர்த்தார். ரோமச் சிறைச்சாலைக்குள் அவர் பண்ணின ஜெபத்தினலேயே அவைகளைத் திரும்பவும் ஊன்றக்கட்டினர்.

உடன் ஊழியரே, நாம் எப்படி? பிரசங்கம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு வேலை என்று ஒத்துக்கொள்வோம். ஜெபத்தில் தரித்திருப்பதும் நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வேலை என்று உணருகிறேமா? தங்கள் சபையாருக்காக இடைவிடாமல் தேவ சமுகத்தில் தரித்திருக்கும் ஊழியக்காரர் எத்தனை பேர் நமது நாட்டிலுண்டு? சபையின் பொறுப்பை உடையவர்கள், மோசேயைப்போல, சபையாருக்காக எப்பொழுதும் தேவ சமுகத்தில் இருக்கிறர்களா? தேவ ஊழியரே, நமக்கு அநேக வேலைகளுண்டு. பிரசங்கம் ஆயத்தம்பண்ணவும், அதிகாரம் பண்ணவும், வழக்குகள் தீர்க்கவும், வருகிறவரிடத்தில் வீணுய்ப் பேசிக்கொண்டிருக்கவும், பணம் பிரிக்கவும் நேரம் உண்டு. ஜெபத்தில் தரித்திருப்பதற்கு நமக்கு நேரம் கிடைக்கிறதில்லை. ஐயோ! நம்மைப் பார்க்கும்போது: "நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் தரித்திருப்போம்" என்று சொன்னவர்களின் பின்னடியார் என்று யாராகிலும் சொல்லுவார்களா?

சர்க்கார் உத்தியோகஸ்தரோடு நமக்குப் பழக்கம் வேண்டும் என்று விரும்புகிறேம். கலெக்ற்றரையும், போலீஸ் சூப்பிரண்டையும் கண்டு வைத்துக்கொள்ளவேண்டும் என்று

நினைக்கிறோம். சமயம் வரும்போது, இவர்கள் நமது சபையாருக்கு நியாயம் செய்வார்களாம்! அப்போஸ்தலருக்கோ, பூமியிலே நியாயம் செய்கிறவர் ஒருவர்தான் தெரியும். அவரோடு பழகுவதே தங்களுக்குப்போதும் என்று அவர்கள் எண்ணினார்கள். அந்த ஜெப சிந்தை நம்மில் இல்லையல்லவா? என்றாலும், ஆவியானவர் தான் இப்படிப்பட்ட ஜெப வாஞ்சையைக் கொடுக்கிறவர். ஆவியினால் நிறைந்தவனுக்குத் தான் இராமுழுவதும் ஜெபம்பண்ணின இயேசுவின் ஊக்கமும், உபவாசித்து ஜெபித்த அப்போஸ்தலருடைய ஆத்திரமும் விளங்கும். இவ்வித ஜெப சிந்தை நம்மில் இல்லாததைப் பார்க்கும்போது, அந்தச் சிந்தையை உண்டாக்க வேண்டிய ஆவியின் கிரியை நம்மில் இல்லை என்று ஒத்துக் கொள்ளவேண்டுமே. பெந்தெகொஸ்தே நாள் முதல் கிறிஸ்து சபையின் உக்கிராணக்காரரை நிரப்பி, அவர்களில் ஜெபத்தின் ஆவியாகவும், விண்ணப்பத்தின் ஆவியாகவும் விளங்கவேண்டிய பெந்தெகொஸ்தே ஆவியானவர் நம்மில் கிரியை செய்யாதபடி நாம் தடுத்துக்கொண்டிருக்கிறோம் அல்லவா?

4. பெந்தெகோஸ்தே ஊழியர் இடைவிடாமல் வேலை செய்கிறவர்களாயிருந்தார்கள்.

அப் 4: 20—நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே என்றார்கள்.

5: 21 — அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம்பண்ணினார்கள்.

5: 28—இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினால் நிரப்பியிருக்கிறீர்கள் என்று சொன்னான்.

5: 42—தினந்தோறும் தேவாலயத்திலும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணிப் பிரசங்கித்தார்கள்.

6: 4—நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்.

20: 31—நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்.

'தினந்தோறும்,' 'இடைவிடாமல்,' 'இரவும் பகலும்'—இதுதான் அவர்களுடைய வேலையைக் காட்டுகிற பதங்கள். கிறிஸ்துவின் அன்பு அவர்களை நெருக்கி ஏவிற்று. அவர்களுக்கு அருளப்பட்டிருந்த ஆவியினாலே தேவ அன்பு அவர்களுடைய உள்ளத்தில் ஊற்றப்பட்டிருந்தது. அது அவர்களைச் சும்மா உட்கார்ந்திருக்க விடவில்லை. சிறைச்சாலையும், யூதருடைய அடியும், கல்லெறியும், அவர்கள் உற்சாகத்தை அமைத்துவிடவில்லை. சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாவிட்டால் எனக்கு ஐயோ!" என்று உணர்ந்தார்கள். இப்படி நினைத்து ஓயாமல் ஊழியஞ் செய்ததால் சில நாட்களுக்குள்ளாக எருசலேமை அந்தப் போதகத்தினால் நிரப்பினார்கள். பவுல் இரண்டு வருஷம் எபேசுவில் குடியிருக்குமுன்: "ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்" (19 : 10).

இந்த வேலைக்கு அவர்களுக்குச் சம்பளமும் கொடுக்கப்படவில்லையே. தேவ ஊழியரே, நமக்கோ இந்த வேலைக்குச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இப்படியிருந்தாலும் ஓயாத வேலை நமது நடுவில் உண்டா? தினந்தோறும் தவறாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? தேவ ஊழியக்காரராக நியமுகம் பெற்றிருப்பது மாத்திரமல்ல, சம்பளமும் அதற்கு நமக்குக்

கொடுக்கப்படுகிறதினால் நமது நேரம் முழுவதும் இந்த ஊழியத்திற்கென்றே செலவழிக்கப்பட வேண்டுமல்லவா? ஐயோ! சொந்தவேலைகள் பார்க்கிறவர்கள் எத்தனைபேர்! வாரம் முழுவதும் சும்மா இருந்தாலும் பிரசங்கம் ஆயத்தம் பண்ண மறந்து போகிறவர்கள் எத்தனைபேர்! தூக்கத்திலும், சிநேகிதரைக் கண்டு பேசுவதிலும் வாரத்தைச் செலவு செய்கிறவர்கள் எத்தனை ஏராளம்! கதைப் புஸ்தகங்கள் வாசிப்பதிலும், சீட்டு விளையாடுவதிலும் நேரத்தைப் பின்னிடுகிறவர்களுமில்லையா? இதெல்லாம் என்னத்தைக் காட்டுகிறது? பிரசங்க வேலை இருதயத்தின் வாஞ்சையாயில்லை. கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவவில்லை. கிறிஸ்துவின் ஊழியத்தைவிட உலக, உல்லாச வேலைகள் நமது இருதயத்திற்குப் பிரியம். கிறிஸ்துவின் கல்வாரி அன்பை இருதயத்தில் அனல் மூட்டிவிடும் ஆவியானவர் தமது கிரியையை நம்மில் நடப்பிக்கக்கூடாதபடி தடைபட்டிருக்கிறார் என்பது தெளிவாயிருக்கிறதல்லவா?

என்றாலும், கிறிஸ்து தமது ஆவியானவரைத் தமது சபைக்கென்றேதான் ஊற்றினார் அல்லவா? வசனத்தைப் போதிக்கிற ஊழியக்காரர் மூலமாகத்தான் ஆவியானவர் தமது இரட்சிப்பின் கிரியையை நடப்பிக்கக் கூடுமல்லவா? "அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" பிரசங்கிக்கிறவர்கள் மூலமாகவே ஆவியானவரின் மிச்சமான கிரியை நடப்பிக்கப் படவேண்டியதிருக்கிறது. அதற்காகத்தான் பெந்தெகொஸ்தே நாளில் தேவன் "ஊழியக்காரர்பேரிலும், ஊழியக்காரிகள்பேரிலும்" தமது ஆவியைப் பொழிந்தருளினார். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இருக்கும் நம்மில் அவர் கிரியைசெய்யாமலிருப்பதற்குக் காரணமென்ன? நாமா? தேவனா? நம்மை

யும் நிரப்பி, நமது மூலமாகவும் ஆத்துமாக்களை இரட்சிக்க இன்றைக்கும் தேவன் ஆயத்தமாயிருக்கிறாரே.

ஆ! தேவ ஊழியரே, நம்மைத் தாழ்த்துவோமாக. இவ்வளவு நாளும் நாம் செய்த வல்லமையற்ற பிரசங்கங்கள் போதாதா? இவ்வளவு நாளும் நாம் பண்ணின அதிகாரங்களும், பெற்ற கண்ணியமும் போதாதா? சோம்பலிலும் தூக்கத்திலும் நமது இரவு பகலை இவ்வளவு நாளும் போக்கடித்தது போதாதா? "உங்கள் தேவன் எங்கே? என்று கர்த்தருடைய சத்துருக்கள் குறைகூறுகிறார்களே. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராகிய நமக்கு பெந்தெகொஸ்தே ஆவியிலுள்ள பங்கு எங்கே? அவருடைய விசேஷித்த வல்லமையை ஏன் நமது நாட்டில் காணோம்? "இயேசு ரக்ஷகா ! விலையேறப்பெற்ற உமது இரத்தத்தினால் நீர் சம்பாதித்த சபையின் ஊழியத்தில் பெந்தெகொஸ்தே ஆவியின் வல்லமை என் மூலமாய்க் காணப்படவில்லையே. அவரைத் தடுத்துக்கொண்டிருக்கும் எந்தத்தடை என்னில் உண்டு என்று தயவாய் எனக்குக் காட்டியருளும்" என்று நாம் ஒவ்வொருவரும் அவரிடத்தில் கேட்டு, அவர் சமுகத்தில் நம்மை ஆராய்ந்து பார்ப்போமாக.

4-ம் அதிகாரம்

பெந்தெகோஸ்தே வேலை.

பெந்தெகொஸ்தே சபை எப்படிப்பட்டதாயிருந்தது என்றும், ஊழியர் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள் என்றும் முந்தின அதிகாரங்களில் பார்த்தோம். அந்த மாதிரியைக்கொண்டு நமது சபைகளையும் ஊழியரையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பொதுவாய் இன்னும் பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை காணப்படவில்லையென்று கண்டோம். இனி பெந்தெகொஸ்தே வேலையைக் கவனிப்போம்.

நமது நாட்டில் நடக்கிற வேலையைப்பற்றி ஒரு குறையும் சொல்ல முடியாது. ரிப்போர்ட்டுகளைப் பார்த்தால், ஒரு வருஷத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பிரசங்கம் நடந்ததாகவும், ஆயிரம் பதினாயிரமான புஸ்தகங்களும், ஒற்றைத்தாள் பிரதிகளும் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் வாசிக்கிறோம். இவ்வளவும் பெந்தெகொஸ்தே வல்லமையுடைய வேலையாயிருந்தால் எவ்வளவு பலன் காணப்படக் கூடும்! என் உடன் ஊழியரே, நமது வேலை பெந்தெகொஸ்தே வேலையாயிருக்கிறதா? அந்த ஆவியின் நிறைவைக் கொண்டு செய்யப்பட்ட வேலையை ஆராய்ந்து பார்ப்போமாக. தமிழ் நாட்டில் நடக்கும் வேலை அனைத்தும் பெந்தெகொஸ்தே வேலையாயிருக்கவேண்டும் என்பதே தேவ சித்தம்.

1. பெந்தெகோஸ்தே வேலை மனுஷருடைய முகத்திற்குப் பயப்படாமல் செய்த வேலையாயிருந்தது.

அப். 4 : 19—தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்.

அப். 5 . 28-30—பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி... அந்த மனுஷனுடைய இரத்தப் பழியை எங்கள்மேல் சுமத்த வேண்டுமென்கிறீர்கள் என்றான். அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்... நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவே... தேவன் எழுப்பினார்...என்றார்கள்.

அப். 7 : 51, 52—வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே,... நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்... நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள்.

கலா. 1 : 10—இப்பொழுது நான் மனுஷரையா தேவனையா யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.

மேற்காட்டிய வசனங்களில் அப்போஸ்தலரிடத்தில் காணப்பட்ட தைரியம் தெளிவாய் விளங்குகிறது. தாங்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் என்று உணர்ந்தார்கள். ஆகவே அவருடைய சுவிசேஷத்தைக் கூறி அறிவிப்பதில் வேறொன்றையும் கவனிக்கவில்லை. தங்கள் பிரசங்கங்களைக் கேட்கிறவர்கள் இயேசுநாதரைக் கொலைசெய்தவர்கள் என்றால் அதை நேரே சொல்லப் பயப்படவில்லை. ஒரு ஊரில் வசனத்தைக் கேட்டவர்கள் எதிர்த்து நின்றார்களானால், உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொல்ல வருத்தப்படவில்லை (13 : 46). ஒரு பட்டணத்தில் யூதர் தூஷிக்கும்போது, தங்கள் வஸ்திரங்களை உதறி, உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும் என்று பயமில்லாமல் கூறினார்கள்.

அப்போஸ்தலனுகிய பவுல் தம்மைக் குறித்துச் சொன்னதுபோல, பெந்தெகொஸ்தே ஊழியர் மனுஷரைப் பிரியப்படுத்தப் பார்க்கவில்லை; தாங்கள் மனுஷரைப் பிரியப் படுத்துகிறவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் ஊழியக்கார ரல்ல என்று உணர்ந்தார்கள் (கலா. 1 : 10). தேவனுடைய சத்தியம் என்று எதை அவர்கள் கண்டார்களோ அதைத் திட்டமாய்ப் போதித்தார்கள். தங்கள் சபையில் என் னென்ன தப்பிதம், யார் யாரிடத்திலிருந்தாலும் அவை களைக் கிறிஸ்துவினிமித்தம் நேரே சொல்லப் பயப்பட வில்லை. இவ்வுலக கனம் அவர்களுக்குத் தேவையாயிருக்க வில்லை. மற்றவர்களுடைய நல்லெண்ணம் இவர்களுக் கென்ன செய்யும்? ஆகவே, கிறிஸ்துவுக்கும் அவருடைய சத்தியத்திற்கும் உண்மையாயிருந்தார்களேயன்றி மனுஷர் முகத்தைப் பார்க்கவில்லை.

தமிழ் நாட்டு தேவ ஊழியத்தில் இது உண்டா? தேவ ஊழியக்காரர் தங்களைக் கிறிஸ்துவின் ஸ்தானுபதிகள் என்று உணர்ந்து, தங்கள் இயேசு ராஜாவுக்கு உண்மை யாகப் பேசுகிறுர்களா? அவருடைய நாமத்தில் ஞான ஸ்நானம் பெற்றவர்கள் பாவத்தில் நிலைத்திருந்து அவரு டைய சத்துருவுக்கு ஊழியஞ் செய்யும்போது, பயப் படாமல் அதைக் கூறுகிறுர்களா? ஐயோ! மிச்சமாக இல்லை என்று சொல்லவேண்டும் அல்லவா? பெரியவர்கள் ஓய்வு நாளை மீறும்போது அதைக் கண்டிக்கப் பயப்படுகிறுர் களில்லையா? சபையின் தலைவன் தப்பிதஞ் செய்கிறதைக் காணும்போது அதற்குரிய தாட்சணியம் வேறேயல்லவா? எளியவனுக்கு ஒரு தண்டனை, வலியவனுக்கு ஒரு தண்டனை என்பதில்லையா? “நீர் உம்முடைய சகோதரன் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்ல” என்று சொன்ன ஸ்நானகனுடைய ஆவி இப்போது நமது ஊழியக்காரரில்

உண்டா? "நான் என் பொல்லாதவனுய்ப் போகவேண்டும்" என்பதல்லவா தேவ ஊழியரின் வெட்கமில்லாத நியாய மாய்ப் போய்விட்டது!

இயேசுவானவர் உலகத்தால் பகைக்கப்பட்டார். அவருடைய சீஷர்கள் உலகத்தால் பகைக்கப்பட்டார்கள். நாம் அவர்களைவிட பெரியவர்களாய்ப் போனேமே! நமது மரியாதை, நமது அந்தஸ்து, நமது பேர் என்ற எண்ணம் இன்னும் ஒழிய வில்லையே. நான் மனுஷரைப் பிரியப் படுத்தாமலிருந்தால், எப்படி இந்த ஊரில் காலக்ஷேபம் செய்யக்கூடும்! என்று தாராளமாய்ச் சொல்லுகிருர்களே. பெந்தெகொஸ்தே வேலைக்காரர் அப்படிச் சொல்லவில்லை. நமக்குள் இன்னும் பெந்தெகொஸ்தே வல்லமை பலமாய்க் காணப்படவில்லை என்பதற்கு இது அடையாளமல்லவா? சீஷர்களோ உண்மையைச் சொன்னுர்கள். அதற்காக அடிபட்டார்கள்; காவலில் வைக்கப்பட்டார்கள்; வீதிகள் வழியாய் இழுக்கப்பட்டார்கள். என்ருலும் இதை யெல்லாம் அவர்கள் தங்களுக்கு வெட்கமாய் எண்ணவில்லை கிறிஸ்துவின் 'நாமத்துக்காக தாங்கள் அவமானம் அடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்ட படியால்' சந்தோஷப்பட்டார்கள்.

எது அவமானம்? கிறிஸ்துவின் ஸ்தானுபதி தான் அறிந்த உண்மையைச் சொல்லாதிருப்பது அவமானம்! கிறிஸ்துவின் போர்ச்சேவகன் தன் எஜமான் அவமானப் படுத்தப்படும்போது தன் கனத்தை நினைப்பது அவமானம்! அவருக்காக அடிபடுவதோ மேன்மை, சந்தோஷம். தமிழ் நாட்டு வேலையில் இவ்வித சிந்தை காணப்படுகிறதா? அநேகமாக இல்லையென்று ஒத்துக்கொள்ள வேண்டு மல்லவா? நமது ஊழியக்காரரிலும் இதே தைரியத்தோடு

ஜனத்தின் பாவத்தை எடுத்துக்காட்டி, கீழ்ப்படியாதவர்களின் இருதயத்தைத் தேவனிடத்திற்குத் திருப்பும்படி ஆவியானவர் இந்தக் காலத்திலும் ஆயத்தமாயிருக்கிறுரல்லவா? ஆகவே சபையின் வேலைக்கு வேண்டிய தைரியத்தைக் கொடுக்கும் ஆவியானவர் நமது நடுவில் கிரியை செய்யாதபடி தடைபட்டிருக்கிறுரே.

2. பெந்தெகோஸ்தே வேலை பெரிய விசுவாசத்தில் செய்யப்பட்ட வேலை.

அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் இதை ரூபிக்கிறது. அவர்களுடைய எஜமான் "பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினுர்கள். கர்த்தர் அவர்களுடனே கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினுலே வசனத்தை உறுதிப் படுத்தினுர்." இதுதான் நடபடிப் புஸ்தகச் சுருக்கம்.

சீஷர்கள் செம்படவரும் உயர்ந்த படிப்பற்றவர்களுந்தான். ஆனுல் பரலோகத்தில் வீற்றிருக்கும் அவர்களுடைய எஜமானின் மீதுள்ள விசுவாசம் அவர்களை உலகத்தை ஜெயிக்கிறவர்களாக்கிற்று. அவர் பேரிலுள்ள விசுவாசத்தினுல் ஆசாரியரும், பிரதான ஆசாரியரும் எதிர்க்கக்கூடாத தைரியம் அவர்களுக்கு வந்தது. அவர் பேரிலுள்ள விசுவாசத்தினுல் யூதமார்க்க அரணுகிய எருசலேமைத் தங்கள் போதகத்தினுல் நிரப்பினுர்கள். அவர் மீதுள்ள விசுவாசத்தினுல் அசுத்தம் நிறைந்த கொரிந்து பட்டணத்தைப் பிடித்தார்கள். அவர் பேரிலுள்ள விசுவாசத்தினுல் தியானுள் தேவதையின் பெரிய ஆலயம் இருந்த எபேசுவிலும் கிறிஸ்துவின் வல்லமையை விளங்கப்

பண்ணினார்கள். அவர் பேரிலுள்ள விசுவாசத்தினாலேயே ரோம ராஜ்யத்தின் தலைநகராகிய ரோமாபுரியிலும் வெட்கப் படாமல் சுவிசேஷக்கொடியை நாட்டிவிட்டார்கள்.

தமிழ் நாட்டு தேவ ஊழியரே, நம்மிடத்தில் இப்படிப் பட்ட விசுவாசம் உண்டா? உயிர்த்தெழுந்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்து நாதருடைய சீஷராக நாம் வேலை செய்கிறோமா? இந்த நாடு, தேசம் முழுவதும் கிறிஸ்துவுக்கென்று சிருஷ்டிக்கப்பட்டதென்றும் இந்த தேசத்திலுள்ள எல்லாருக்காகவும் அவர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினார் என்றும் நம்பு கிறோமா? இந்த விசுவாசத்தினால் நமது தேசத்தை நமது இராஜாவுக்காக ஜெயிக்கிறோமா? நமது தமிழ் நாட்டிலுள்ள பெரிய நகர்கள் இன்னும் சுவிசேஷத்திற்கு அசையாமல் இருக்கிறதே.

இவைகளைக் காணும்போது இந்து மார்க்கத்தின் வல்லமையையும், அதின் ஜனத்திரளையும், அது நெடுங் காலமாக ஜனங்களின் மனதை வசப்படுத்திக் கொண்டிருக் கிறதையும் நினைக்கிறோமேயன்றி, நமது எஜமானுடைய வல்லமையையும், அவருடைய நாமத்தினால், அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினால் இவைகளையும், இவை களைப்போல இன்னும் கோடாகோடி நகர்களையும் நாம் ஜெயிக்கலாம் என்பதையும் மறந்து விடுகிறோமல்லவா? "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்." நாம் ஜெயிக்காமலிருக்கிறதைக் காணும்போது, பரமேறின நமது எஜமான்பேரிலும் நமக்கு விசுவாசம் குறைந்திருக் கிறது என்பது உண்மையல்லவா?

நம்முடைய வேலைகளில் எவ்வளவாய் நாம் லௌகிக முறைகளைக் கையாடுகிறோம்! கிறிஸ்தவ ஜனங்களைக் கூட்டங் களுக்கு இழுக்கிறதற்கு முதலாய் எவ்வளவு உலகத்திற்

கொப்பான முறைகளைக் கையாடுகிறோம்! வேடிக்கை, பந்தயம், நாடகம் இவைகள் இல்லாவிட்டால் ஜனங்கள் வரமாட்டார்கள் என்று எண்ணுகிறோமல்லவா? "நான் உயர்த்தப்பட்டிருக்கையில் எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்று சொன்ன இயேசு பெருமானின் வல்லமை நமது மூலமாக விளங்காததினாலல்லவா இவைகளைக் கையாட வேண்டியதிருக்கிறது!

உயிரற்ற தேவர்களைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் விளையாட்டுகளும் வாண வேடிக்கைகளும், தம்புரு முதலிய கீதவாத்தியங்களுமில்லாவிட்டால் வந்து கூடமாட்டார்கள். உயிருள்ள கிறிஸ்துவின் தாசரும் இவ்வித முறைகளுக்குச் சில வேளைகளில் சமீபிக்கிறார்களல்லவோ? கிறிஸ்துவின் வல்லமை நமது மூலமாய்க் கிரியை செய்யவில்லையென்பதற்கும், அது கிரியை செய்யத்தக்கதாக நம்மிடத்திலும் விசுவாசம் இல்லை என்பதற்கும் இது அத்தாட்சியல்லவா? பெந்தெகொஸ்தே ஆவியினால் உண்டான விசுவாசம் நம்மில் இல்லை; ஆனால் நமக்கும் இருக்கக்கூடும். அந்த ஆவியின் கிரியை நமது நடுவில் விளங்காதபடி தடை செய்து கொண்டிருக்கிறோமல்லவா?

3. பெந்தெகோஸ்தே வேலை ஊக்கம் குன்றாத வேலையாயிருந்தது.

அப். 5 : 42—அவர்கள் தினந்தோறும் தேவாலயத்திலும், வீடுகளிலும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்.

19: 10—இரண்டு வருஷக்காலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த...எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்.

20 : 31—நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்.

28 : 30—பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல்...உபதேசித்துக்கொண்டிருந்தான்.

பெந்தெகொஸ்தே ஊழியர் ஊடே ஊடே உற்சாகமாய் வேலை செய்யவில்லை. அவர்கள் செய்த வேலை எப்போதும் மேலேறிச் சென்றதேயன்றி, ஒருநாளாவது தளர்ச்சியடைய வில்லை துன்பம் இருக்கும்பொழுதும் ஊக்கம் குன்றவில்லை; சமாதானமாய் இரண்டு மூன்று வருஷம் ஒரே இடத்தி லிருந்து வேலை செய்தபொழுதும் உற்சாகம் மங்கவில்லை.

பவுலும், பர்னபாவும் தேசங்களெல்லாம் சுற்றிவிட்டு வருகிறார்கள்; "சிலநாளைக்குப் பின்பு" திரும்பவும் புறப்பட ஆரம்பிக்கிறார்கள். எபேசுவில் ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசு பெறுமான குறிசொல்லும் புஸ்தகங்கள் சுட்டெரிக்கப் பட்டவுடனேதான், மக்கெதோனியா, அகாயா, எருசலே முக்கும், ரோமாபுரிக்குங்கூட போகும்படி பவுல் நிர்ணயம் பண்ணினார். அத்தேனேயிலும், கொரிந்துவிலும் அதிக பலன் இல்லாமல்போன பின்பும் "ஆவியிலே வைராக் கியங்கொண்டு" பலமாய்ப் பிரசங்கித்தார். "ஒரு வருஷ மும் ஆறு மாதமும்" அங்கே தங்கிக் கூடாரவேலை செய்து கொண்டிருக்கும்போது செய்த பிரசங்கத்தினால்தான் ரோம நியாயாதிபதிக்கு முன்னும் யூதர் அவரைக் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

ஆகவே பல இடத்திலும் அலைந்து பிரசங்கிப்பதாவது, ஒரே இடத்தில் நெடுங்காலம் வேலை செய்வதாவது, பெரிய

பலன்களைக் காண்பதாவது, அற்பப் பலன்களைக் காண்பதாவது, சிறைச்சாலையாவது, இரத்தாம்பர வியாபாரி வீட்டு விருந்தாவது, கூடாரவேலைக் கைத்தொழிலாவது, ரோம போர்ச்சேவகரின் சங்கிலிகளாவது அவர்களுடைய ஊக்கத்தைக் குறைத்துவிடவில்லை என்று பார்க்கிறோம்.

தேவ ஊழியரே, நமது வேலையைப்பற்றி இப்படிச் சொல்லக்கூடுமா? தங்களை ஒரு வகையாய் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிற தேவனுடைய பிள்ளைகளிடத்திலாவது இந்த விடா முயற்சியும் ஊக்கமும் காணப்படுகிறதா? நமது நடுவிலுள்ள வேலையைப்பற்றிச் சொல்லப்படுகிற குறை இதுதானல்லவா? இரண்டு வாரம் உற்சாகம், பின் ஒரு மாசம் குளிர்ச்சி; ஓய்வுநாளில் ஊக்கம், திங்களில் தளர்ச்சி; ஆறு மாசம் ஊக்கம், ஆறு மாசம் சோர்பு—நம்மில் மிச்சமானவர்களைப் பற்றி இது உண்மையல்லவா? ஒரே இடத்தில் சில வருஷங்கள் இருந்தபின் முயற்சிக் குறைவு; சில ஆத்துமாக்கள் குணப்பட்டபின் ஒரு சோர்பு, ஆத்துமாக்கள் குணப்படாமலிருக்கும்போது ஒரு சோர்பு; பிரயாணவேலை செய்கிறவர்களுக்கும் சோர்பு, ஒரே இடத்தில் நிலையாயிருக்கிறவர்களுக்கும் சோர்பு; படிப்பாளர் நடுவில் வேலை செய்கிறவர்களுக்கும் குளிர்ச்சி, அறிவீனர் நடுவில் குடியிருக்கிறவர்களுக்கும் குளிர்ச்சி. சகோதரரே! இதற்குக் காரணம் என்ன? நமது வேலையின் தன்மையல்ல; நாம் வேலைசெய்யும் இடமல்ல; நாம் வேலை செய்யும் ஜனங்களல்ல; நமது வேலையின் பலன்களுமல்ல—நாமே காரணம்.

பெந்தெகொஸ்தே ஆவியானவர் நம்மில் கிரியை செய்யவில்லை. அவரோ "என்றென்றைக்கும்" நம்மோடு நிலைத்திருக்கும்படி கொடுக்கப்படுகிறார். அவர் கொடுக்கிற சந்தோஷம் நிலையான சந்தோஷம். அவர் மூட்டுகிற அனல்

மங்காத அனல். அவரிலிருந்து தோன்றும் பக்திவைராக்கியம் மாறுதலற்ற பக்திவைராக்கியம். கூட்டங்களால், புஸ்தகங்களால், பலன்களால் உண்டாகிற அனல் குன்றிப் போகும்; பரிசுத்த ஆவியானவரால் மூட்டப்படும் அக்கினியோ மங்காமல் எரிந்துகொண்டிருக்கும். எப்பக்கம் போய், எப்படிப்பட்ட தேவ ஊழியரிடத்தில் கேட்டாலும் இந்த முறைப்பாடுதான் கேட்கப்படுகிறது.

இதை வாசிக்கிற சகோதரனே, உன் விஷயத்திலும் இது உண்மையில்லையா? எவ்வளவோ அற்ப காரியங்கள் உன் உற்சாகத்தைக் கொன்றுவிடுகின்றன அல்லவா? பெந்தெகொஸ்தே ஆவிதான் உனக்கு அவசியம். அருமையான தேவ ஊழியக்காரரே, நம்முடைய காரியத்தை ஆதிச் சபையின் வேலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்களில் கிரியை செய்த ஆவியானவர் நம்மிலும் கிரியை நடப்பிக்கும்படி இடம் பெறவில்லை என்று ஒத்துக்கொள்ள வேண்டுமல்லவா?

4. கடைசியாக, பெந்தெகொஸ்தே வேலை மிகுந்த பலனுள்ள வேலையாயிருந்தது; அதனால் தேவன் மகிமைப் பட்டார்.

அப். 4 : 21 — நடந்த சங்கதிகளைக் குறித்து எல்லாரும் தேவனை மகிமைப் படுத்தினார்கள்.

அப். 11 : 18—இவைகளை அவர்கள் கேட்டபோது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

அப். 13 : 48—புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள்.

அப். 19 : 17, 18—இது...தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.

பெந்தெகொஸ்தே வேலையின் பலன் மிகுதியாயிருந்தது என்பது அப்போஸ்தலர் நடபடியில் வெகு தெளிவாய்க் காணப்படுகிறது. ஒரே நாளில் ஆயிரக்கணக்கானவர்கள் மனந்திரும்பினார்கள். யூதருக்குள் மாத்திரமல்ல, புறஜாதிகளுக்குள்ளும் அதேவித குணப்படுத்தல்கள் நடந்தன. எபேசுவின் மாயவித்தைக்காரர் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசு பெருமான புஸ்தகங்களைச் சுட்டெரிக்க ஒப்புக்கொடுத்தது எவ்வளவு ஆச்சரியம்! என்றாலும் ஆவியானவருடைய வல்லமைக்கு இதுவும் ஆச்சரியமல்ல. பேதுரு பிரசங்கம்பண்ண ஆரம்பித்தவுடனே கொர்நேலியுவின் வீட்டார்பேரில் ஆவியானவர் இறங்கினது தேவனுடைய வல்லமையைக் காட்டுகிறதல்லவா?

இப்படி மிகுதியான பலன்கள் காணப்பட்டதினாலே அதற்குக் காரணம் மனுஷனல்ல, தேவன் என்று யாவரும் எண்ணக்கூடியதாயிற்று. சீஷர்கள் ஓர் தடவை இரா முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் கிடையாதிருந்தாலும், இயேசுநாதரின் 'வார்த்தையின்படியே' வலையைப் போட்டபோது வலை கிழியத்தக்கதாக மீன் பிடித்தார்களே. அந்த மீன்களின் ஏராளமல்லவா சீமோன்பேதுருவை இயேசுவின் பாதத்தில் விழும்படி செய்தது? இரண்டாந்தரம் வலை வீசினபோது, பத்து இருபது மீன்கள் பிடித்திருந்தார்களானால் அந்த நேரத்தினுடைய தன்மையினால், வலை வீசின இடத்தின் கூறுபாட்டினால், வலையை இழுத்த சீஷரின் கைத்திறமையினால் — இப்படிப்பட்ட ஏதோ ஒரு காரணத்தால் அது கிடைத்ததாக நினைக்க மனம்

வரும். ஆனால் அமிழத்தக்கதாக இரண்டு படவுகள் மீன்களால் நிரப்பப்பட்டதினால் தேவனுடைய கிரியையேயன்றி வேறொன்றுமல்ல என்பது தெளிவாயிற்று.

அப்படித்தான் அருமை இரட்சகருடைய ஜீவியத்திலும், அப்போஸ்தலருடைய வேலையிலும் காணப்பட்டது. தேவனுடைய பலத்த வல்லமை ஆச்சரியமான கிரியைகளை நடப்பித்தது. மனுஷர் நினைக்கிறதற்கு மிஞ்சின காரியங்களை அவர் செய்து விட்டார். தேவன் கிரியை நடப்பித்தார் என்று சொல்லுவதைத் தவிர வேறே காரணத்தைச் சொல்ல வழியில்லாமல் போயிற்று.

கொர்நேலியு வீட்டில் பேதுரு முதலாய் எதிர்பாராத வண்ணம் ஆவியானவர் இறங்கிவிட்டார்; ஆகவே எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். பேதுருவைப் பற்றி நினைக்க அங்கே இடமில்லை. ஒரு மாச முழுவதும் கொர்நேலியு வீட்டில் பேதுரு இருந்து, நியாயதோரணைகளோடு அவனுக்குப் பிரசங்கித்து, கடைசியில் அவனை ஞானஸ்நானம் பெறச் சம்மதிக்கப் பண்ணியிருந்தாரானால், அது பேதுருவினுடைய சாமர்த்தியத்தினால் வந்தது என்று சொல்லி, எல்லாரும் பேதுருவை மகிமைப்படுத்தியிருக்கலாம். இங்கேயோ சர்வ வல்லமையுள்ள தேவன் இருதயங்களை அசைத்து, மனந்திரும்புதலை அளித்து, ஆவியானவரால் அபிஷேகம் பண்ணிவிட்டார். எல்லாரும் பிரமிப்படைந்து தேவனை மகிமைப்படுத்தினார்களேயன்றி பேதுருவை மறந்துவிட்டார்கள்.

தேவ ஊழியரே, நமது நடுவில் இப்படிப்பட்ட அசைவைக் காணோமல்லவா? தேவனே கிரியை செய்துவிட்டார் என்று கண்டு, மனுஷரை மறந்துபோகத்தக்கதான வேலை நமது நடுவில் உண்டா? அங்கங்கே, ஒவ்வொருவர் வேலை

செய்து சில வருஷங்களுக்குப் பின் ஒரு ஆத்மா குணப் படுகிறதற்குக் கருவியாயிருந்திருக்கிறதாகக் கேள்விப் படுகிறோம். அதையும் அதிகப் பெரிய காரியம்போல எண்ணிக்கொள்ளுகிறோம். அப்போஸ்தலர் காலத்துப் பலன் கள் இப்படியா இருந்தது? இயேசுவானவருடைய வாக்கும் இதுவா? "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்" என்றல்லவா அவர் சொன்னார்?

ஊடே ஊடே ஒவ்வொருவர் குணப்படுகிறதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஆனால் இது பெந்தெகொஸ்தே ஆவியின் காலமல்லவா? அவருடைய வல்லமையான கிரியை களை ஏன் காணோம்? அவர் வல்லமையாய் இறங்கி இருதயங் களை அசைத்து விடும்போது, மாம்சமானவன் ஒருவனும் அவரது மகிமையைத் திருடமுடியாதே. ஆ! சகோதரரே, மனுஷன் ஒருவனும் பெருமைபாராட்டக் கூடாத பிரகாரமாய் ஆவியின் வல்லமை காணப்படும்படிக் கெஞ்சுவோமாக.

நாம் எல்லாரும் பார்த்து பிரமிக்கத்தக்க ஆச்சரிய மான காரியங்களை நமது நடுவிலும், இக்காலத்திலும் செய்ய ஆவியானவர் வல்லவர். இப்பொழுது நமது நடுவில் அப்படிப் பட்ட கிரியைகள் இல்லாதிருப்பது தேவ ஊழியக்காராகிய நமது பாவந்தான் என்று ஒத்துக்கொள்வோமாக. அதிசய மான காரியங்களை தேவன் நமது நடுவில் செய்யத்தக்கதாக அவருடைய பாதத்தில் நம்மைத் தாழ்த்துவோமாக. "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்" என்பது இக்காலத்திலிருக்கும் நமக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தான்.

'நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல் லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு'

சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

5-ம் அதிகாரம்

பெந்தெகோஸ்தே பலன்கள்.

பெந்தெகொஸ்தே ஆவியானவர் கிரியை நடப்பித்த சபை, ஊழியர், வேலை—முதலியவை எப்படிப்பட்டவை களாயிருந்தன என்று முந்தின அதிகாரங்களில் பார்த்தோம். இந்த அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே ஆவியானவரால் நிரம்பியிருக்கும் விசுவாசியினுடைய ஜீவியத்தில் காணப்படும் பலன்களைக் கவனிப்போம். விசுவாசி ஒவ்வொருவனுடைய ஜீவியத்திலும் இவைகளை விளங்கப் பண்ண ஆவியானவர் ஆயத்தமாயிருக்கிறார். ஒவ்வொன்றும் உன்னிடத்தில் விளங்குகிறதா என்று நீ உன்னையே ஆராய்ந்து பார்.

1. போராட்டத்தில் ஜேயம்.

முதலாவது சீஷரைப் பார்ப்போம். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் அவர்களிடத்தில் காணப்பட்ட பெருமை எவ்வளவு! தங்களில் எவன் பெரியவன் என்று அடிக்கடி அவர்கள் வாக்குவாதம் பண்ணினார்கள் (மாற். 9 : 34; லூக். 22 : 24). ஒருவர் பேரில் ஒருவருக்கு எரிச்சல் மூண்ட சமயங்களுமுண்டு (மாற். 10:41). தங்கள் பிரியப்படி ஜனங்கள் நடவாதபோது கோபமூண்டு, வானத்திலிருந்து அக்கினி வரப்பண்ணி, அவர்களை அழிக்கும்படி ஆலோசனை பண்ணின தருணமுமுண்டு (லூக். 9 : 54). இவ்வித பாவங்களின்மேல் ஜெயம்பெற இன்னும் அவர்கள் படிக்கவில்லை. இப்படிப்பட்ட பாவ சோதனைகள் நேரிட்டபோது, மாம்சம் அதிகமாய் அவர்களை ஜெயித்ததேயன்றி, அவர்கள் மாம்சத்தை ஜெயிக்க வில்லை.

பெந்தெகொஸ்தே நாள் வந்தபோதோ எவ்வளவு அதிசயமான மாறுதல் உண்டானது! எவன் பெரியவன்

என்கிற கேள்விபோக, சின்னவன் பெரியவனும், பெரியவன் சின்னவனுமாகிவிட்டான். சின்ன யாக்கோபு சங்கத் தலைவனானன். பேதுருவும் யோவானும் தாழ்ந்த இடத்தைத் தெரிந்து கொள்வது கூடியதாயிருந்தது. எரிச்சல், பொறாமை என்பவைகளுக்கு இடமில்லை. காரணமென்ன? பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது அவர்களை நிரப்பிக் கொண்டார். அவரால் அவர்கள் மாம்சத்தின் கிரியைகளை அழித்தார்கள் (கலா. 5 : 16, 17 ; ரோ. 8 : 13). முன்னல் இயேசுவானவர் அவர்களுக்கு வெளியே இருந்தார். இப்போதோ, ஆவியானவர் மூலமாய் அவர்களுக்குள் வாசம் பண்ணினர். அவருடைய பிரசன்னம் பாவத்தினின்று அவர்களைக் காத்துக்கொண்டது. ஆவியானவர் மூலமாய் சீஷர்கள் கிறிஸ்துவிலும், கிறிஸ்து சீஷரிலும் நிலைத்திருந்தார்கள். ஆகவே, பாவத்தினின்று காக்கப்பட்டார்கள்.

விசுவாசியே, இவ்வித கிரியையை உன்னிலும் நடப்பிக்க ஆவியானவர் வல்லவர். உன் மாம்ச இச்சைகளை ஜெயிப்பார். உன் சோதனைகளில் பெலன் அளிப்பார். உன் போராட்டத்தில் அவர் மூலமாய் நீ மேற்கொள்ளுவாய். இப்பொழுது உன்னல் செய்யக்கூடாததை ஆவியானவர் கூடியதாக்குவார். "ஆவியினலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்." இது உன்னில் காணப்படுகிறதா? நீ உன் சரீரத்தின் செய்கைகளை அழிக்கிறயா? இல்லையானல், இந்த பெந்தெகொஸ்தே ஆவியானவர் உனக்கு வேண்டுமல்லவா?

2. நடக்கையில் இயேசுவின் சாயல்.

ஆவியானவர் பாவத்தை ஜெயிக்கிறது மாத்திரமல்ல, இயேசுவின் சாயலையும் உண்டாக்குகிறர். "நாமெல்லாரும் ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்தானே

மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3 : 18).

ஆவியானவர் இருதயத்தை நிரப்பும்போது ஆவியின் கனி காணப்படுகிறது. "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்." இதுதான் பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்களிடத்தில் காணப்பட்டதல்லவா? இவ்வொன்பது குணங்களும் சேர்ந்து ஆவியின் ஒரே கனி. கனிகள் அல்ல, கனி. இவைகளில் ஒன்று இரண்டு ஒருவனிடத்தில் இயற்கையாய்க் காணப்படலாம். ஒருவன் இயற்கையாய் அதிக சாந்தகுணமுள்ளவனாயிருக்கலாம். ஆனால் இவ்வொன்பது கிருபைகளும் சேர்ந்து காணப்படும் இடம் பெந்தெகொஸ்தே ஆவியானவர் வாசம்பண்ணும் இருதயமே.

எபேசியர் நிருபத்தில் 'ஆவியினால் நிறைந்திருங்கள்' என்ற கட்டளைக்குப்பின் ஆவியினால் நிறைந்திருப்பதினால் வரும் பலன்களெவை என பவுல் அப்போஸ்தலன் காட்டுகிறார். ஆவியினால் நிறைந்தவனே எப்போதும் கீதம் பாடக் கூடியவனாயிருப்பான்; அவனே எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ் செலுத்துவான்; அவனே மற்றவர்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பான். ஆவியினால் நிறைந்த மனைவி வீட்டில் கீழ்ப்படிதலுள்ளவளாயிருப்பாள். ஆவியினால் நிறைந்த புருஷன் எப்பொழுதும் அன்புள்ளவனாயிருப்பான். ஆவியினால் நிறைந்த பிள்ளைகள் பெற்றாருக்குக் கீழ்ப்படிவார்கள். ஆவியினால் நிறைந்த பெற்றார் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் நல் வளர்ப்பில் வளர்ப்பார்கள். ஆவியினால் நிறைந்த வேலைக்காரர் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கபடற்ற மனதோடு, கர்த்தருக்கென்று ஊழியஞ் செய்வார்கள் (எபே. 5 : 18—6 : 9). சுருக்கிச் சொன்னால், அன்றாடக

ஜீவியத்தில் பரிசுத்தம் பெந்தெகொஸ்தே ஆவியானவரா லேயே உண்டாகும்.

ஆதித் திருச்சபையில் இப்படித்தான் இருந்தது. கிறிஸ்துவுக்குப்பின் 130-ம் வருஷத்திலிருந்த ஒரு அஞ்ஞான ஆக்கியோன்* கிறிஸ்தவர்கள் ஜீவியத்தைக் கூர்மையாய்க் கவனித்து எழுதினான் :—

"வானத்தையும் பூமியையும் படைத்த தேவனுடைய கற்பனைகளைக் கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளுகிறார்கள். அதினால் அவர்களுக்குள் விபசாரம், வேசித்தனம் என்பது கிடையாது. பொய்ச் சாட்சி அவர்கள் சொல்லுகிறதில்லை. பணத்தை அவர்களிடம் கொடுத்துவைத்தால் அதை அவர்கள் ஏமாற்றி எடுத்துக் கொள்ளுகிறதில்லை. மற்றவர் களுடைய பொருளுக்காக அவர்கள் ஆசைப்படுகிறதில்லை. தகப்பனையும் தாயையும் அவர்கள் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் மனைவிகள் பதிவிரதா பத்தினிகள். அவர்கள் பெண் மக்கள் மிகுந்த நாணமும் ஒழுக்கமும் உள்ளவர்கள். அவர்கள் புருஷர் எவ்வித அசுத்த ஜீவியத்திலும் பிர வேசிக்கிறதில்லை. தங்கள் வேலைக்காரரை அவர்கள் நேசிக் கிறார்கள். வேலைக்காரரும் கிறிஸ்தவர்களாகத்தக்கதாகப் போதிக்கிறார்கள். அப்படி அவர்கள் கிறிஸ்தவர்களாகும் போது சகோதரரைப்போல அவர்களை நடத்துகிறார்கள். அவர்கள் மிகுந்த மனத்தாழ்மையும் அன்புமுள்ளவர்கள். பொய் அவர்களிடம் கிஞ்சித்தேனும் கிடையாது. ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். தங்கள் மேசியாவின் கட்டளைகளைத் திட்டவட்டமாய்க் கைக்கொள்ளுகிறார்கள். காலையிலும் மற்ற நேரங்களிலும் தேவனுடைய கிருபைகளை நினைத்து, துதித்துப் பாடுகிறார்கள். அவர்களில் ஒரு நீதிமான் மரிக்கும்போது, அவர்கள் மகிழ்ந்து தேவனுக்கு

---

* "Apology of Aristides."

ஸ்தோத்திரஞ் செலுத்துகிறார்கள். ஒரு பிள்ளை பிறக்கும் போது தேவனைத் துதிக்கிறார்கள். அது சிறு பிராயத்தில் மரித்தாலும் தேவனைத் துதிக்கிறார்கள். இப்படி அவர்கள் தேவனுடைய நன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவதினாலே, அவர்கள் நிமித்தமாகவே உலகம் செழிக்கிறது என்று எண்ணுகிறேன்" என்கிறான்.

தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களே நம்மைப்பார்த்து புற மதஸ்தர் இப்படிச் சொல்லுவார்களா? பெந்தெகொஸ்தே ஆவியானவர் நம்மிலும் இவ்வித மாறுதல்களை உண்டாக்க ஆயத்தமாயிருக்கிறாரே.

3. பேலவீனத்தில் உதவி.

'தேற்றரவாளன்' என்று திருப்பியிருக்கும் கிரேக்கு பதத்திற்கு 'உதவி செய்கிறவர்' என்பது அர்த்தம். "அந்தப்படி ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்" (ரோ. 8 : 26).

(1) வேதவாசிப்பில் நமக்கு உதவி செய்கிறார். பெந்தெகொஸ்தே ஆவியினால் நிறைந்த அப்போஸ்தலர் பழைய ஏற்பாட்டு வசனங்களை எடுத்துச் சொன்ன ஞானத்தை நாம் அறிவோமே. ஆவியானவர் புத்தியின் கண்களைத் தெளிவாக்குகிறார். நமது ஆத்தும நிலைமைக் கேற்ற போதனையைக் காட்டுகிறார். அவரே அந்தத் திருவசனத்தை எழுதும்படி ஏவினவராதலால், அவருடைய திவ்ய சகாயத்தினாலேயே அதைச் சரியாய் அறிந்து கொள்வது கூடியகாரியம். பெந்தெகொஸ்தே ஆவியானவர் நம்மில் தமது நிறைவான கிரியையை நடப் பிக்கும்போது, நமது வேதவாசிப்பு புதிதாகும்.

இதைக்குறித்து இயேசுநாதரும், என் நாமத்தினாலே பிதா உங்களுக்கு அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய

தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார் என்றார் (யோ. 14 : 26). யோவான் அப்போஸ்தலன் தமது நிருபத்தில், நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது என்கிறார் (1 யோ. 2 : 27). விசுவாசியே, உனக்கும் இந்தப் போதனை உண்டு. பெந்தெகொஸ்தின் அபிஷேகத்தை நீயும் பெற்றுக்கொள்ளும்போது, உனக்கும் 'ஒருவரும் போதிக்க வேண்டுவதில்லை' நீ தேவனால் போதிக்கப்படுவாய்.

(2) ஜெபத்தில் நமக்கு உதவி செய்கிறார். பின்னி பிரசங்கி சொல்லுவதாவது:- "பரிசுத்த ஆவியானவராலேயன்றி தேவனுடைய சித்தத்தின்படி ஜெபம் பண்ணுவது கூடாத காரியம். ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் உதவி செய்வது எப்படி? ஆவியானவர் நம்முடைய மனதைப் பிரகாசிப்பிப்பார்; சபையின் நிலைமையையும், புறமதஸ்தருடைய நிலைமையையும் நாம் காணும்படி செய்வார்; ஆத்துமாக்களின் அருமையையும், பாவிகளின் மோசத்தையும் உணரும்படி பண்ணுவார்; வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களைப் பற்றிப்பிடிக்கும்படி ஏவுவார். இதுதான் ஆவியானவர் நமக்கு உதவி செய்கிற விதம்."

(3) அன்றாடக ஜீவியத்தின் அவசியங்களில் உதவி செய்கிறார்.

நாம் இயற்கையாய் மறதியுள்ளவர்களாதலால், ஆவியானவர் நமக்கு நினைப்பூட்டுகிறார் (யோ. 14 : 26). நாம் இயற்கையாய் மந்தப் புத்தியுள்ளவர்களாதலால்,

ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகிறார் (யோ. 16:13); எல்லாவற்றையும் நமக்குப் போதிக்கிறார் (யோ. 14 : 26); தேவனுடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார் (ரோ. 8 : 27). சங்கடங்கள் உண்டாகும் போது மனவருத்தப் படுவது இயற்கையாகையால், ஆவியானவர் துன்பத்தின் நடுவில் சந்தோஷத்தை உண்டாக்குகிறார் (அப் 5 : 41; 13 : 52).

ஆவியானவர் வேறொரு தேற்றரவாளன்—வேறொரு உதவிசெய்கிறவர். இயேசுநாதர் பூலோகத்திலிருந்த போது சீஷரோடிருந்து, அவர்கள் குறைவை நிவிர்த்தியாக்கி, அவர்களுக்குச் சிநேகிதராகவும் சமயசகாயராகவும் விளங்கினதுபோலவே, ஆவியானவரும் அவர்களுக்குச் சிநேகிதராயிருந்து எல்லா விஷயங்களிலும் அவர்களுக்கு உதவி செய்வார் என்பதே கிறிஸ்துவின் வாக்கு. நமக்கும் அதுதான் வாக்கு. பெந்தெகொஸ்தே ஆவியானவர் நமது ஜீவியத்தில் வந்து கிரியை செய்ய இடம் பெறும்போது நமது சகல பலவீனங்களிலும் நமக்கு உதவி செய்கிறார். இவ்வித உதவி நமக்கு வேண்டாமா? பெந்தெகொஸ்தே ஆவியானவர் நமக்கும் உதவி செய்கிறவராக வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறாரே.

4. ஜீவியத்தில் நடத்துதல்.

அப்போஸ்தலர் நடபடிகள் 8-ம், 9 ம, 10-ம் அதிகாரங்களில் இதை விசேஷமாகக் கவனிக்கலாம். கந்தாகே ராஜஸ்திரீயின் மந்திரியை ஆயத்தப்படுத்துகிறார்; அதற்கிசைவாக பிலிப்புவை நடத்திக்கொண்டு போகிறார். பவுலை ஆயத்தப்படுத்துகிறார்; அவனைச் சந்திக்க அனனியா என்ற சீஷனை நடத்துகிறார். கொர்நேலியுவின் வீட்டாரை ஆயத்தப்படுத்துகிறார்; அவனுக்கு நேரே பேதுரு அப்போஸ்தலனையும் நடத்துகிறார். மக்கெதோனியாவில் வேலையை

ஆயத்தப்படுத்திக்கொண்டு, பிரிகியா, கலாத்தியா, மீசியா, பித்தினியா நாடுகளைக் கடந்துபோகும்படி பவுலை நடத்தினார் (அப் 16: 6, 7). இன்றும் அப்படி நடத்துவாரா? ஆம், அதற்காகவே வாக்குப்பண்ணப்பட்டார். அதற்காகவே பெந்தெகொஸ்தே நாள்முதல் இறங்கிக் கிரியை செய்கிறார். "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" என்பதுதான் இயேசுசுவாமியின் வாக்கு. சகோதரனே, உனக்கு இந்த நடத்துதல் வேண்டாமா? உன் ஜீவியத்தில் சந்தேகமான எந்த விஷயத்திலும் தேவ சித்தப்படி நடத்தப்பட விரும்புகிறாயா? பெந்தெகொஸ்தே ஆவியானவர் உன்னையும் நிரப்பி, நடத்த ஆயத்தமாயிருக்கிறார்.

5. ஊழியத்தில் வல்லமை.

ஆவியானவர் விசேஷமாக வாக்குப்பண்ணப்பட்டது கிறிஸ்துவுக்காகச் செய்யும் ஊழியத்திற்காகவே. "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப். 1 : 8). அக்கினிமயமான 'நாவுகள்' மயமாகவே ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் தம்மை வெளிப்படுத்தினார். அவர்கள் நாவுகளின் கட்டுகள் அன்று திறக்கப்பட்டன. இயேசுவின் சாட்சியை வல்லமையாய்க் கூறி அறிவித்தார்கள். இதின் சம்பந்தமாக ஆவியானவர் செய்யும் வேலையை இரண்டு பிரிவாகக் கவனிக்கலாம். முதலாவது: ஊழியக்காரரில் அவர் செய்யும் கிரியை. இரண்டாவது; அவர்கள் மூலமாய் உலகத்தில் அவர் செய்யும் கிரியை.

முதலாவது: ஊழியக்காரரில் ஆவியானவர் செய்யும் கிரியை.

(1) பிரசங்கிப்பதில் தைரியம் கொடுக்கிறார் (அப். 4 : 31).

வேலைக்காரப்பெண் முன்பாக மறுதலித்த பேதுரு, இப்பொழுது சங்கத்தார் முன்னும், எருசலேமின் ஜனங்கள் முன்னும் நின்று "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசு" என்று சொல்லப் பயப்படவில்லை. பேதுருவும் யோவானும் பேசின தைரியத்தைச் சங்கத்தார் கண்டு ஆச்சரியப்பட்டார்கள் (அப். 4 : 13).

விசுவாசியே, உன் ஊரிலும், உன் பள்ளிக்கூடத்திலும், உன் சபையார் நடுவிலும், இனத்தார் நடுவிலும் இயேசுவைக் குறித்துச் சாட்சிகொடுக்க உனக்கு வெட்கமாயிருக்கிறதோ? உனக்குப் பயமுண்டோ? அவற்றை நீக்கி உனக்கு மெய்யான தெய்வீக வைராக்கியத்தைத் தரும்படி பெந்தெகொஸ்தே ஆவியானவர் உனக்கு அருளப்பட்டிருக்கிறார். நீ அவரைப் பெற்றிருக்கிறாயா?

(2) பிரசங்கிக்கவேண்டிய வார்த்தைகளைக் கொடுக்கிறார். "அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே" பேசுகிறோம். (1 கொரி. 2 : 13).

சமயத்திற்கேற்ற வாக்கியங்களையும், பொருள்களையும் அளிக்கிறார். அப்போஸ்தலன் சொல்லுகிறபடி பேசவேண்டிய வார்த்தைகளையும் அவரே கொடுக்கிறார். பெந்தெகொஸ்தே ஆவியானவரின் கிரியையைப் பெறும்பொழுது பிரசங்கம் ஆயத்தம் பண்ணவேண்டியதில்லை என்பது இதின் கருத்தல்ல. ஆனால் ஜெபத்தில் காத்திருந்து, சுயசித்தத்தையும் சுய எண்ணத்தையும் தள்ளி ஆவியானவரால்

நடத்தப்பட விரும்பும்பொழுது, ஆயத்தத்திலும் மனதைத் தெளிவாக்குகிறார். பிரசங்கிக்கும்போதும், கூட இருந்து நடத்துகிறார். அப்போஸ்தலர் நடபடியில் சொல்லியிருக்கிறதைப் பார்க்கிறோமே. பேதுருவின் பிரசங்கங்கள், பவுலின் பிரசங்கங்கள் நமக்கு வேதவசனமாக எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆவியினால் நிறைந்து பேசினார்கள். ஆவியானவர் நிமிஷந்தோறும் அவர்களை நடத்தினார்.

விசுவாசியே, உனக்கும் இது வேண்டாமா? பிரசங்கிப்பதில் ஞானம் வேண்டுமல்லவா? பெந்தெகொஸ்தே ஆவியானவர் இதையும் நமக்குச் செய்யும்படி ஆயத்தமாயிருக்கிறார்.

(3) பிரசங்கத்தைப் பலத்தினால் உறுதிப்படுத்துகிறார். "என் பிரசங்கம் ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" (1 கொரி. 2 : 5) என்று பவுல் சொன்னார்.

ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வந்தவரானதால் கிறிஸ்துவைப்பற்றிக் கொடுக்கும் சாட்சியோடு அவரும் கூடச்சேர்ந்து சாட்சி கொடுக்கிறார். மனச்சாட்சியை உயிர்ப்பிக்கிறார். பேசுகிற வார்த்தைகளின் அலங்காரத்தையும், நளினத்தையும் ஜனங்கள் கவனிக்கமாட்டார்கள். ஏனென்றால் அவர் கொடுக்கும் வசனங்கள் 'மனுஷ ஞானத்துக்குரிய நய வசனமுள்ளதா'யிருக்கமாட்டாது. ஆனால் இருதயத்தை உடைக்கத்தக்க வல்லமை பொருந்தியதாயிருக்கும். ஆவியானவர் தமது கட்கமாகிய தேவ வசனத்தைக்கொண்டு கடின இருதயங்களை வெட்டுவார்; காயமாக்குவார். ஜனங்களுடைய இருதயங்கள் நொறுக்கப்படும். இதுதான் பெந்தெகொஸ்தே நாளில்

உண்டான மாறுதல். வசனத்தைக் கேட்டவர்கள் 'இருதயத்திலே குத்தப்பட்டவர்களானார்கள்' (அப் 2 : 37). சகோதரரே, இந்தப் பலம் நமக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆவியானவரிடத்தில் பட்சபாதமில்லை! நம்மிலும் இவ்வித கிரியையை நடப்பிக்க அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

இரண்டாவது: உலகத்தில் ஆவியானவர் நடப்பிக்கும் கிரியை.

(1) பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார்.

இதுதான் நமது நடுவில் காணப்படவேண்டிய பலத்த கிரியை. சபைகளையும், புறமதஸ்தரையும் பார்த்தால் பாவ உணர்வு எவ்வளவோ சொற்பமாயிருக்கிறதென்று காண்கிறோம். ஜனங்கள் எல்லாப் பிரசங்கங்களையும் இன்பமாய்க் கேட்டு, இருதயத்தில் சற்றென்கிலும் உணர்வில்லாதவர்களாய் எழுந்திருந்து தங்கள் பழைய ஜீவியத்திற்குப் போகிறார்கள்; ஆராதனைக்கு வருகிறார்கள்; ஓய்வுநாள் பள்ளிக்கூடங்கள், ஜெபக்கூட்டங்கள் இவைகளுக்கு ஒழுங்காய்ப்போவார்கள். ஆனால் பாவத்தைவிட்டுத் திரும்பும் மனந்திரும்புதலையோ காணோம்.

ஆதித் திருச்சபையில் அப்படி இருக்கவில்லை. பிரசங்கங்களினால் உணர்வு உண்டாயிற்று. அப்போஸ்தலர்களுடைய பிரசங்கங்களைக் கேட்ட யாராவது வந்தது போலத் திரும்பிப்போனதுண்டா? ஒருபோதும் இல்லை. ஆவியானவர் அவ்வசனங்களைக் கொண்டு மனச்சாட்சியைக் கண்டிக்கிறார். ஒன்று அதற்கு இணங்கி ஜனங்கள் விசுவாசிகளாகிறார்கள்; அல்லது அதை எதிர்த்து, பிரசங்கிகளைப் பகைத்து, அவர்களைப் புறம்பே துரத்தவும் கொல்லவுங்கூடத் தீர்மானம் பண்ணுகிறார்கள்.

சகோதரரே, நமது மூலமாய் ஆவியானவர் உலகத்தின் பாவத்தைக் கண்டித்து உணர்த்த வேண்டாமா? "நான் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்; அவர் வந்து பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" என்று இயேசு சொன்னார். நமக்கு அவர் வேண்டாமா? நமது மூலமாயும் அவர் அப்படிப்பட்ட கிரியையை நடப்பிக்கச் சித்தமுள்ளவராயும், வல்லமையுள்ளவராயுமிருக்கிறார்.

(2) இயேசுவினிடம் ஆத்துமாக்களை நடத்துகிறார்.

பாவ உணர்வுண்டாகி, இருதயம் உடைந்து போயிருக்கிறவர்களைக் கல்வாரி இரத்தத்தினால் காயம் கட்டுகிறார். உயர்த்தப்பட்ட பரிசுத்த பலியை நோக்கிப் பார்க்கச் செய்கிறார். விசுவாசத்தை உண்டாக்குகிறார். பாவ மன்னிப்பின் நிச்சயத்தைக் கொடுக்கிறார். புத்திர சுவிகாரத்தை அருளுகிறார் (ரோ. 8: 15). நீ தேவனுடைய பிள்ளை என்று அந்த மனுஷனுடைய ஆவியுடனேகூட சாட்சியும் கொடுக்கிறார் (ரோ. 8: 16). சுருக்கமாய்ச் சொன்னால் மறுபிறப்பை உண்டாக்குகிறார். ஆவியினால் அவனைப் புதுப்பிக்கிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் அவனைப் புது சிருஷ்டியாக்குகிறார் (யோவான். 3: 5; 2 கொரி 5: 17).

இவ்விதமாய் ஆவியானவர் குணப்படாத மனுஷரை இரட்சிக்கிறார். முதலாவது தேவ ஊழியர் மனுஷரைப் பிடிக்கிறவர்களாகும்படி செய்கிறார். பிற்பாடு அவர்களோடுகூட இருந்து கிரியையும் நடப்பிக்கிறார்.

தேவ ஊழியரே, இந்த வேலையில் நாம் தனிமையாய் விடப்படவில்லை. பெந்தெகொஸ்தே ஆவியானவர் கொடுக்கப்பட்ட நோக்கம் இதுதான். அவரைப் பெறாமல் அவருடைய வேலையைச் செய்வது கூடாத காரியம்.

" பரிசுத்த ஆவியின் ஐக்கியம் " (2 கொரி. 13: 14) நம்மோடு இருந்தாலன்றி ஆத்துமாக்களை நாம் அசைக்க மாட்டோம். அப்படியானால் நமது நாட்டின் அவசியத்தைக் கவனிக்கிற நாம் அவரைப் பெற்றுக்கொள்ள வேண்டாமா ? தடைகளை அகற்றி, பெந்தெகொஸ்தே ஆவியானவரால் நிறைந்திருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டாமா? வாசிக்கிற சகோதரனே, அவ்விதத் தாகம் உன் இருதயத்திலும் என் இருதயத்திலும் உண்டாவதாக!

6-ம் அதிகாரம்

பெந்தெகோஸ்தே ஆவியின் அவசியம்.

"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்."—இயேசு இரட்சகர் இவ்வுலகத்திலிருக்கும் போது தமது சீஷர்களுக்குச் சொன்ன வார்த்தைகளில் இதைப்போல வேறொன்றும் அவர்களுக்குப் பிரமிப்பை உண்டாக்கியிருக்கமாட்டாது. அவர்களுடைய எஜமான் போகிறதே அவர்களுக்குத் துக்கம். இந்த நஷ்டத்தை எதுதான் சரிப்படுத்தக் கூடும்? எப்பொழுதும் அவர்கள் பக்கத்திலிருந்து, அவர்களுக்குத் தெய்வீக காரியங்களைப் போதித்து, அவர்கள் பிசகும்போது கண்டித்து, அறிவீனத்தைக் காட்டும்போது பொறுமையைக் காண்பித்து, தெரியாததைச் சொல்லிக்கொடுத்து நடத்தின திவ்விய சிநேகிதர் போகிறார். வேறெது — வேறே யார் — அவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடும்? இயேசு இல்லாமல் இவர்கள் எப்படி இனி உலகத்தில் இருந்து கொள்ளப்போகிறார்கள்? அது மாத்திரமல்ல, அவர்கள் இனிச் செய்யவேண்டிய வேலையையும் சொல்லிவிட்டார் அவர்கள் போய் மிகுந்த கனிகளைக் கொடுக்கவேண்டும் என்றும், தம்மைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளை அவர்கள் செய்வார்கள் என்றும், மற்றவர்கள் அவர்களைப் பகைப்பார்கள் என்றும் சொன்னார். ஏழைச் சீஷர் திகைக்கிறார்கள். ஆண்டவரே! நீர் இருந்தீரேயானால் நாங்கள் இதெல்லாம் செய்வோம். நீர் கூட இருந்தால் எந்த உபத்திரவத்தையும் சகிப்போம். நீர்

எங்களோடு வந்தால் நாங்கள் போய் மிகுந்த கனிகளைக் கொடுப்போம். நீரோ, போகிறதாகப் பேசுகிறீரே என்று உள்ளத்தில் அவர்கள் நினைத்திருக்கலாம். அருமை இயேசு அவர்களைப் பார்த்து: நீங்கள் இந்த வேலை செய்வதற்கு, நீங்கள் உபத்திரவங்களைச் சகிப்பதற்கு, நீங்கள் போய் மிகுந்த கனிகளைக் கொடுப்பதற்கு உங்களுக்கு அவசியம் வேண்டியவர் பரிசுத்த ஆவியானவரே. அவர் உங்களுக்குள்ளும் இருந்து உங்களுக்குப் பெலன் அருளுவார்; நீங்கள் குணப்படுத்த வேண்டிய உலகத்தையும் கண்டித்து உணர்த்துவார். அவர் மூலமாகவே நான் உங்களோடு ஒரு காலும் பிரியாச் சம்பந்தமாய் தங்கக்கூடும் ஆகவே, அவரே உங்களுக்கு இன்றியமையா அவசியம் அவர் உங்கள்மேல் வருவதற்காக என்னை நீங்கள் காணுதிருக்கச் சம்மதிக்க வேண்டும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார் என்பதாகச் சொல்லுகிறுர்.

இயேசுவானவரோடிருந்து, அவருடைய திருவாய் மொழியைக் கேட்டு, அவருடைய அதிசயச் செயல்களைக் கண்ட அப்போஸ்தலருக்கே பெந்தெகொஸ்தே ஆவியானவர் தீராத அவசியம் என்றுல் நமக்கு அவர் எவ்வளவு அதிக அவசியம்! தேவ ஊழியக்காராகிய நம்மைப் பார்த்தாலும், நமதுகையின் கீழிருக்கும் சபைகளின் நிலைமையைப் பார்த்தாலும், நம்மைச் சுற்றிலும் இருக்கிற புறமதஸ்தரின் நிலைமையைப் பார்த்தாலும் நமக்குத் தீராத அவசியம் பெந்தெகொஸ்தே ஆவியானவரே அல்லவா!

1. சபைகளைப் பார்ப்போம். கணக்கின்படி ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருந்தாலும், மெய்யாய்க் குணப்பட்டவர்கள் எவ்வளவு சொற்பம்! மற்றமார்க்கங்களைப்போலவே கிறிஸ்துமார்க்கமும் ஒன்று என்றே மற்ற

வர்கள் யோசிக்கிறார்களல்லவா? திருநீறு பூசுகிறதும் மொட்டையடிக்கிறதும் மற்றும் மார்க்கங்களுக்கு அடையாளமாயிருக்கிறது போல, ஞானஸ்நானம் பெறுகிறதும், கூடுமானால் ஓய்வுநாள்களில் ஆராதனைக்குப் போவதுமே கிறிஸ்துமார்க்கத்துக்கு அடையாளம் என்று ஜனங்கள் நினைக்கிறதில்லையா? அஞ்ஞான ஊர்களில் இருப்பதுபோல கிறிஸ்தவ ஊர் தெருக்களிலும் சண்டைகள் தூஷணங்கள் இல்லையா? அஞ்ஞானிகள் கோர்டு கச்சேரிக்கு அலைவது போல கிறிஸ்தவர்களும் கோர்ட்டுக்குப் போகிறதில்லையா? அஞ்ஞானிகளில், சகோதரர் சொக்காரர் தாயாதிக்காரர் பாகம் பிரித்துக்கொள்வதில் சண்டைபோடுவதுபோல, கிறிஸ்தவ சகோதரர் சொக்காரர் தாயாதிக்காரரும் சண்டை போடுகிறதில்லையா? அஞ்ஞானிகளுக்குள் புருஷன் மனைவி மாமி மருமகள் சண்டைபோட்டு அடிபிடிகளாகிறது போல கிறிஸ்தவர்களுக்குள்ளும் இல்லையா? ஒருவர் பாடுகிறபடி:—

உலகத்தா ரூரிலும் கிறிஸ்தவர்கள் சபையிலும் ஓயாத
சச்சரவுகள்
ஓடியம், சாடிகள், உத்தண்ட கோபங்கள், ஒற்று கேட்குந்
தன்மைகள்,
கொலை, களவு குடிகாமம் மோசடிகள் பொய்ம் மொழிதல் குரு
நிந்தை சாமத்துரோகம்
கோள் புறணி தூற்றுதல் குடிகேடு பொறாமைகள் குத்திரப்
பெருமைவன்மம்
புலைபேசி உடனரரை யிகழுதல் தீதுபுரி புல்லர்க்குக்
கொடுத்தல்
பூசைக்குத் தர்மத்துக் கீயாமல் வேசைக்குப் பொலிசை
வழக்குக்கு மீதல்
நலமான வேமொன்றில்லா திருக்கையில் நாங்கள் மெய்ம்
மதத்தரென்றும்
நையாண்டிக்கிறிஸ்தவர்கள் யேசுவினால் பெற்ற
நன்மையே தமலகுருவே.

இப்படியெல்லாம் இருந்தாலும் இது கிறிஸ்தவர்களுக் கழகல்ல என்ற உணர்ச்சியாவது உண்டா? கிறிஸ்து போதித்த மார்க்கம் வேறே, நம்மில் காணப்படுகிற மார்க்கம் வேறே என்று பொதுவாய் உணருகிறோமா? நாகரீகமுள்ள வர்கள் தங்கள் ஜாதியிலும் படிப்பிலும் பணத்திலும் பெருமை பாராட்டி, தேவாலயத்தை அசட்டைபண்ணுகிற தையும், ஓய்வுநாளை மீறுகிறதையும், தேவஊழியக்காரரை நிந்திக்கிறதையும் காண்கிறோம். படிப்பாளிகள் வீடுகள் கட்டுவதிலும், உயர்ந்த உத்தியோகம் நாடுவதிலும், தங்கள் பிள்ளைகளை உயர்ந்த பரீக்ஷைகளுக்குப் படிக்கவைப்பதிலும் சோலியாயிருக்கிறதினால் கிறிஸ்துவுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமையை மறந்து போகிறார்கள். நாகரீகமற்ற எளிய கிறிஸ்தவர்கள் ஆத்துமா உண்டு என்கிற உணர்வு முதலாய் அற்றவர்களாய், வயிறு பிழைக்கவே வேதக்காரர் என்று பேரெடுத்து ஜீவிக்கின்றனர். கிறிஸ்து சபையார் ஆவிக்குரிய பிரகாரமாக ஊக்கமற்றவர்களாயும், இம்மையை மாத்திரம் பெரிதாய் எண்ணுகிறவர்களாயும், கிறிஸ்துவின் நாமத்துக்கு அபகீர்த்தியை உண்டாக்குகிறவர்களாயுமிருக் கின்றனர். ஐயோ! என்ன நிர்ப்பந்த நிலைமை! புறஜாதி களுக்குள்ளே தேவனுடைய நாமம் உங்கள் மூலமாகத் தூஷிக்கப்படுகிறதே என்பது நமது நாட்டுக் கிறிஸ்தவ சபைகளைப்பற்றியும் உண்மைதான் என்று துக்கத்தோடே நாம் ஒத்துக்கொள்ள வேண்டுமல்லவா?

இந்த எலும்புகள் உயிரடையும்படி தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியக்காரருண்டா? தற்காலத்தில் செய்யப்பட வேண்டிய பெரிய வேலை கிறிஸ்தவர்கள் என்று பெயர் பெற்றவர்களுக்குள்ளல்லவா? இவர்களல்லவா முதலாவது பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் இனிவரும் நியாயத்தீர்ப்பை குறித்தும் கண்டித்து உணர்த்தப்பட

வேண்டியவர்களாயிருக்கிறார்கள்? இப்படி இவர்களை ஆவி யானவர் உணர்த்துவதற்கு, தேவனுடைய பிள்ளைகளான விசுவாசிகளில் அல்லவா பெந்தெகொஸ்தே ஆவியின் வல்லமை முதலாவது காணப்படவேண்டும்! குணப் படுத்துவது அவருடைய வேலை. பாவத்தை உணர்த்துவது அவர் வேலை. இயேசுவை மகிமைப்படுத்துவது அவர் வேலை. ஆனால் அவரோ யார் யார் அவர்களுக்கு தங்களை ஒப்புக் கொடுக்கிறார்களோ அவர்கள் மூலமாகவே இந்த வேலைகளை நடப்பிக்கிறார். ஆகவே நம்முடைய சபைகள் ஆவிக்குரிய பிரேதங்களால் நிறைந்த கல்லறைத் தோட்டங்களும், உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்குகளுமாயிராமல் கிறிஸ்துவுக்காகப் போராடும் சேனையாக மாற்றப்படவேண்டு மானால் பெந்தெகொஸ்தின் பலத்த ஆவியின் வல்லமையிலும் குறைந்த வல்லமை போதவே போதாது. ஆவியானவரே, நீர் காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, பாவத்தினால் கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படி இவர்கள்மேல் ஊதும்!

2. புற மதஸ்தர்களைப் பார்ப்போம்.

இந்தியாவின் பல இடங்களிலும் கிறிஸ்துமார்க்கம் ஏறக்குறைய இருநூறு வருஷங்களாகப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. துவக்கத்தில் ஊர் ஊராகக் கிறிஸ்தவர்களானார் கள். குடும்பம் குடும்பமாக ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்பொழுது அப்படிக் காணோம். இதற்குப் பல காரணங் களுண்டு. ஆனால் ஒன்று: முன்னால் கிறிஸ்து மார்க்கத்தை யும், கிறிஸ்துவையும், அவருடைய போதனையையும் கவனித்து, இவைகளின் மாட்சிமையை ஒப்புக்கொண்டு மார்க்கத்தைச் சேர்ந்தார்கள். இப்பொழுதோ, கிறிஸ்தவர்கள் ஏராளமாகியும் கிறிஸ்துவின் போதனையின்படி அவர்கள்

நடக்கக் காணோம். ஆகவே, எங்கும் தற்காலத்தில்: மார்க்கம் நல்ல மார்க்கந்தான், ஆனால் இந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களும் எங்களைப்போலதானே இருக்கிறார்கள். இப்பொழுது கிறிஸ்துமார்க்கம் பரவுகிறதற்குத் தடை கிறிஸ்தவர்களே. இந்துக்களில் சீர்திருத்தக்காரர் முதலாய் ஜாதிவித்தியாசம் ஆகாது என்று சொல்ல, கிறிஸ்வர்களுக்குள்ளோ ஜாதி வித்தியாசம் அவசியம் என்று சொல்லுகிறவர்களும், தங்களுடைய பழைய ஜாதியின் மேன்மையைப் புகழுகிறவர்களும் அதிகரிக்கிறார்கள். உண்மையாய்ச் சொல்லவேண்டுமானால், அநேக கிறிஸ்தவர்கள் சன்மார்க்கமான சில இந்துக்களிலும் கேவலமாகவே இருக்கிறார்கள். கிறிஸ்து வல்லமையுள்ளவராயிருக்கலாம்; ஆனால் கிறிஸ்தவர்களிடத்தில் பொதுவாய் அந்த வல்லமையைக் காணோம். கிறிஸ்து சுய வெறுப்புள்ளவராயிருந்தார் என்பது மெய்தான். ஆனால் கிறிஸ்தவர்களிடத்தில் சுய வெறுப்பு என்பது கிஞ்சித்தேனும் கிடையாது. கிறிஸ்து தமக்குத்தானே பிரியமாய் நடக்கவில்லை; ஆனால் கிறிஸ்தவர்களிடத்திலோ சுயநயம் என்பதே குடிகொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆ! தற்காலத்து புறமதஸ்தரின் இரத்தப்பழி நம்மிடத்தில்லவா கேட்கப்படப்போகிறது! நாம்தாம் அவர்கள் வாசிக்கிற வேதாகமம்; நம்மிடத்திலோ கிறிஸ்துவை அவர்கள் காண்கிறதில்லை. நம்மைச் சுற்றிலுமிருக்கிற புறமதஸ்தரின் நிமித்தம் பெந்தெகொஸ்தே ஆவியானவர் நமக்குத் தேவையல்லவா?

மகம்மது மார்க்கம் இன்னும் அசையவில்லை. நமது பட்டணங்கள் இன்னும் கிறிஸ்துவின் வல்லமையைக் காணவில்லை. படித்தவர்களில் அநேகர் தங்கள் பழைய மதாசாரக் கொள்கைகளில் திருப்தியைக் காணமல், அதைத் தங்களுடைய புத்திக்கேற்றதாக்கும்படி புதிதாய்ப்

பிரயாசப்படுகிறார்கள். அநேகர் உள்ளபடியே நாஸ்திகராகவுமிருக்கின்றனர். அசுத்தம், மாம்ச இச்சை அதிகரிக்கிறது. படிப்பும் பணமும் பெருகப் பெருக, குடிவெறியும், சிற்றின்ப உல்லாசங்களும் அதிகரிக்கின்றன. பொதுவாய் ஜனங்களுக்குள் மறுமையைப்பற்றிய நிர்விசாரமும், ஆத்தும விஷயங்களைப்பற்றிய அசதியும், வயிற்றைப்பற்றியும், உலக வாழ்க்கையைப்பற்றிய எண்ணமுமே காணப்படுகின்றன. ஏறக்குறைய ஒரு கோடி ஜனங்கள், அதாவது இந்தியாவிலுள்ள மொத்தக் கிறிஸ்தவர்கள் தொகைக்கு மூன்று மடங்குபேர், வருஷந்தோறும் நித்யத்திற்குட் பிரவேசிக்கிறார்கள். அதாவது ஒரு நிமிஷத்துக்கு இருபதுபேர் வீதம் இரவும் பகலும் ஆத்துமாக்கள் இவ்வுலகத்தைவிட்டுப் பிரிகின்றனர். மொத்த ஜனத்தொகையில் நூறு பேருக்கு ஒருவன் கிறிஸ்தவன்! பெந்தெகொஸ்தின் பலத்த ஆவியேயன்றி வேறொன்றும் இதற்குப் போதாது. நமக்கு எதிராக இருக்கும் பாவத்தையும், பிசாசின் கோட்டைகளையும், மாம்ச அரண்களையும் பார்க்கும்போது கிறிஸ்தவர்கள் எல்லாரும் தங்களைத் தாழ்த்தி, தேவனுடைய பெந்தெகொஸ்தே ஆவி வந்து நம்மைப் பட்சிக்கும்படி நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்து அவருக்குமுன் காத்து நிற்பது அவசியமல்லவா?

3 தேவ ஊழியக்காரரைப் பார்ப்போம். முன்கண்ட இருவகையாரிலும் இவர்கள் மூலமாகவே ஆவியானவர் அதிகமாய்க் கிரியை செய்யவேண்டியது. சபைகளிலும் வீதிகளிலும் கிறிஸ்துவின் நாமத்தை உயர்த்திக் காட்ட வேண்டியவர்கள் இவர்களே. நமதுநாட்டின் குருக்கள், போதகன்மார், உபதேசிமார், உபாத்திமாரைப் பார்க்கும் போது, பெந்தெகொஸ்தே ஆவியே இவர்களுக்கு மிகுந்த அவசியம் என்பது தெளிவாயிருக்கிறதல்லவா?

தேவ ஊழியக்காரரில் குணப்படாதவர்கள் இல்லையா? இவர்கள் வேலையென்பது கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதியா யிருக்கும் வேலை என்றும், மனுஷரைக் கிறிஸ்துவுக்காகப் பிடிக்கும் வேலை என்றும், ஆத்துமாக்களின் இரத்தப் பழியைச் சுமக்கும் வேலையென்றும் உணருகிறார்களா? கிறிஸ்து சபையின் போதகன்மார் குருமார் யாவரும் தங்களைக் கிறிஸ்துவின் ஆசாரியர் என்று எண்ணி, எவ்வித தீட்டும் அசுத்தமும் பாவமும் தங்களைத் தொடாதபடி ஜீவிக்க நாடுகிறார்களா? அதிகாரம், கௌரதை, மரியாதை இவைகளைப் பெரிதாய் எண்ணுகிறவர்களுமில்லையா? மனந் திரும்புதலும் பாவமன்னிப்பும் சபைகள்தோறும் பிரசங் கிக்கப்படுகிறதா? பரிசுத்த ஆவியானவரின் காலத்திலிருக் கிறோமே. தானும் தன் சபையாரும் பரிசுத்த ஆவியான வரால் நிறைந்திருக்கும்படி ஆத்திரப்படும் ஊழியக்காரர் எத்தனைபேர்? நாம் ஞானஸ்நானத்தில் ஆவியைப் பெறு கிறோம், திடப்படுத்தலில் ஆவியைப் பெறுகிறோம், பரிசுத்த இராப்போசனத்தில் ஆவியைப் பெறுகிறோம் என்று சொல்லி ஜனங்களைத் தேற்றி, அவர்களெல்லாரும் குணப் பட்டவர்கள் போலவும், ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்தவர் கள் போலவும், அவருக்கென்றுமாத்திரம் பிழைக்கவொப்புக் கொடுத்திருக்கிறவர்கள் போலவும் எண்ணி, அவர்களைத் தட்டிக்கொடுக்கிறவர்கள்தாம் ஏராளம் அல்லவா? மனந் திரும்பி பாவமன்னிப்புப் பெறாதவர்களால் சபைகள் நிறைந் திருக்கிறது. உலகத்துக்கும் மாம்சத்துக்கும் பிசாசுக்கும் கிறிஸ்தவர்கள் ஊழியஞ் செய்கிறார்கள். பகிரங்கமாகக் குடித்து, வெறித்து, சண்டைபோட்டு, தூஷணம்பேசி, வார முழுவதும் ஜீவிக்கிறார்கள். ஓய்வுநாளில் கோவிலுக்கு வந் தால் தூக்கம்பிடித்துப்போய், உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்கவாவது முழங்காற்படியிடவாவது மனமற்றுப் பாவத்தில் உறங்குகிறார்கள். தேவ ஊழியரோ, பாவத்தை

எச்சரிக்கத் தைரியமற்று, கடமைக்காக ஒரு பிரசங்கத்தைப் பண்ணிவிட்டுப் போகிறார்கள். தங்கள் சொந்த இருதயத்திலும், தேவன் விஷயத்திலும் ஜனங்களுக்குச் 'சமாதானமில்லாதிருந்தாலும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்.' ஆகவே, கோவில்களுக்கும் ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களுக்கும் ஜெபக் கூட்டங்களுக்கும் ஜனங்கள் வந்தாலும், பாவம் உணர்த்தப் படாமலும் இரட்சிக்கப்படாமலும் இருக்கிறார்கள். பாவத்தைக் கண்டித்து உணர்த்தி, இயேசுவை மகிமைப் படுத்தும் ஆவியானவர் தேவஊழியக்காரர் மூலமாய் இருதயங்களில் கிரியை செய்கிறதில்லை.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு வேண்டியதென்ன? படிப்பு வேண்டுமா? அப்போஸ்தலருக்குப் படிப்பு வேண்டியதாயிருக்கவில்லை. படிப்புஇருக்கும்போது நல்லதுதான். ஆனால் படிப்பு மாத்திரம் ஒருநாளும் ஆத்துமாக்களைக் குணப்படுத்தமாட்டாது. சாதுரியம் தேவையோ? அதுவும் நமது சபைகளில் உண்டு. ஆனால் இதுவும், அதிகமான கிருபையும், ஆவியின் வல்லமையும் இல்லாதிருக்கும்போது, பாவஉணர்ச்சிக்கும் குணப்படுத்தலுக்கும் தடையாயிருக்குமேயன்றி ஒருபோதும் அனுகூலமாயிருக்கிறதில்லை. சுயாதீனம் தேவையோ? அப்படியும் அநேகர் சொல்லுகிறார்கள். சுயாதீனம் ஆத்துமாக்களைக் குணப்படுத்துமா? ஆ! அருமையானஉடன் ஊழியரே, நமக்கு வேண்டியது படிப்பல்ல, சாதுரியமல்ல, சுயாதீனமல்ல — பரிசுத்தாவியின் அக்கினியே அவசியம். நம்முடைய பெருமையைத் தாழ்த்தவும், கோழைத்தனத்தை நீக்கவும், சோம்பலை அகற்றவும் தேவையானது — தேவையானவர் பெந்தெகொஸ்தே ஆவியானவரே.

தேவாவியானவர் இவற்றை நமது உள்ளங்களில் சுட்டெரிப்பாராக! நமது உயிரற்ற சபைகளினிமித்தமும், இருளில் இருக்கும் கோடிக்கணக்கான நமது தேசத்தாரினிமித்தமும் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக்கப் பார்ப்போமாக. அவரே நமது அவமானத்தை நீக்குகிறவர் அவரே நமது பெலவீனத்தில் பெலன் அருளுகிறவர். அவரே கிறிஸ்து சபைக்குரிய வல்லமை அருளுகிறவர். அவரில்லாமல் கிறிஸ்துவின் வேலை செய்வது பாவம்!

சகோதரனே, உன்னுடைய ஜீவியத்தில் எப்படி? உன்னைச் சுற்றிலுமிருக்கிற சபையார் சாகிறதை நீ பார்க்கிறாயே. உன் பாவத்தினாலும், உன் ஊக்கக் குறைவினாலும், நீ பரிசுத்த ஆவியினால் நிறைந்திராததாலும் நரகத்துக்குப் போயிருக்கும் ஆத்துமாக்கள் எத்தனை பேருண்டு? உன் சபையில் குணப்படாமல் செத்திருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் நீயும் உத்தரவாதியல்லவா? நீ ஆவியானவரால் நிறைந்திருப்பாயாகில், அந்த ஆத்துமாக்களை உன் மூலமாய் தேவன் இரட்சித்திருப்பாரே. இந்த ஒரே காரியந்தான் உனக்குத் தேவை என்பதை உணருகிறாயா? இந்த ஆவியினால் நீயும் நிரப்பப்படும்வரைக்கும் அமர்ந்திருக்க மாட்டேன் என்று இப்பொழுதே தீர்மானம் பண்ணுவாயா? எதை விட்டுவிட வேண்டியதானாலும், என்ன நஷ்டம் நேரிட்டாலும் பெந்தெகொஸ்தே ஆவியானவரே எனக்கு வேண்டும் என்று தேவனை நோக்கிக் கூப்பிடுவாயா? உன் பலனற்ற ஊழியம் போதாதா? நீ இவ்வளவு நாளும் அனலற்றிருந்தது போதாதா? 'பெந்தெகொஸ்தே ஆவியில் என் பங்கைத் தாரும்' என்று இதுமுதல் ஓயாமல் கெஞ்சுவாயா?

உன்னைத் தமது ஊழியத்திற்கு அழைத்தவர் தமது வல்லமையை அருளாமல் தமது வேலையைச் செய்யச்

சொல்லுவாரா? சீஷருக்கு அவர் அப்படிச் சொல்லவில்லை. உன் எஜமான் விதைக்காத இடத்தில் அறுக்கிற கடினமுள்ள எஜமானல்லவே. உனக்கும் பெந்தெகொஸ்தே ஆவியில் பங்குண்டு. நீயும் அவருக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணலாம். அவர் உன்னை நிரப்பாதபடி இருக்கும் தடைகளை மாத்திரம் நீக்கு. நீ நிரப்பப்படாதிருப்பது உன் குற்றமே. பெந்தெகொஸ்தே ஆவியோ கிறிஸ்து சபையின் ஒவ்வொரு விசுவாசிக்கும், ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் உண்டு. உனக்கும் உண்டு!

7-ம் அதிகாரம்

பெந்தெகொஸ்தே ஆவிக்குத் தடை : மாம்சசிந்தை

நம்மில் வாசம் பண்ணுகிறவரும், நமக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறவரும், நமக்குரியவருமான ஆவியானவர் பெந்தெகொஸ்தே ஆவியானவர் என்று பார்த்தோம். அப்படியிருந்தாலும், நமது சபைகளையும், நமது ஊழியக்காரரையும், நமதுநடுவில் நடக்கும் வேலையையும் கவனிக்கும்போது பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை நமது நடுவில் காணப்படவில்லையென்று கண்டோம். கால ஒழுங்கின்படி பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் நாம ஜீவித்தாலும், அனுபவத்தின்படி பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் இருக்கிறவர்கள் போலவே ஜீவிக்கிறோம். என்றென்றைக்கும் நமக்குள்ளே வாசம்பண்ணி, நம்மில் ஜெப சிந்தையையும், இயேசுவின் பேரில் அன்பையும், ஆத்துமாக்கள் பேரில் தாகத்தையும், அவர்களை ஆதாயம்பண்ணுவதில் வல்லமையும் விளங்கப்பண்ணவேண்டிய ஆவியானவர் ஏதோ காரணத்தினால் தடைப்பட்டிருக்கிறார் அல்லவா? இந்தத் தடைகள் எவை என்று இப்பொழுது பார்ப்போமாக. பெந்தெகொஸ்தின் ஆவியானவரே, சபையிலும் சபையின் மூலமாயும் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வந்தவர் நீர் அல்லவா? அப்படியானால் உம்முடைய வல்லமை எங்கே? நீர் சபையில் பரதேசியைப் போலவும் இராத்தங்க இறங்குகிற வழிப்போக்கனைப் போலவும் இருப்பானேன்? நீர் உமது கிரியையை எங்கள் நடுவில் நடப்பிக்காதபடி உம்மைத் தடுத்துக் கொண்டிருக்கிற தடைகள் எவை எனக் காட்டும் ஐயா!

வேதாகமத்தில் பார்க்கும்போது, பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்க் கிரியை செய்யும் வேறே இரண்டு ஆவிகள் இருக்கின்றன என்று காணலாம். விசுவாசிகள் இவைகளுக்கு இடங்கொடுத்து, இவைகளால் ஆளப்படுகிறதினாலேயே ஆவியானவர் அவர்கள் நடுவில் வல்லமையற்றிருக்கிறார்.

1-வது: மாம்சத்தின் ஆவி.

இதற்கு 'மாம்சம்' என்றும், 'மாம்ச சிந்தை' என்றும் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வித பதங்கள் ஆவியானவரோடு சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிற சில வசனங்களைப் பார்ப்போம்.

கலா. 5: 17. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது ;...இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.

ரோ. 8: 5. மாம்சத்தின்படி நடக்கிறவர்கள்...ஆவியின்படி நடக்கிறவர்கள்.

ரோ. 8: 6. மாம்ச சிந்தை...ஆவியின் சிந்தை.

ரோ. 8. 9. மாம்சத்துக்குட்பட்டவர்கள் ... ஆவிக்குட்பட்டவர்கள்.

மனுஷன் இயற்கையாய் மாம்சத்துக்குட்பட்டவனாய்ப் பிறந்திருக்கிறான். "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்" (யோ. 3: 6). ஆனால் ஒருவன் மறுபடியும் பிறக்கும்போது, ஆவியானவர் அவனில் வந்து வாசம் பண்ணுகிறார். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.(ரோ. 8: 9). ஆனால் ஆவியானவர் உட்பிரவேசித்துவிட்டதினால் அவனுடைய மாம்சம் வெளியே போய் விடுகிறதில்லை. அவன் ஜீவகாலமெல்லாம் அதுவும் அவனிலேயே இருக்கிறது. எந்த நிமிஷத்திலும் அவன்பேரில்

குதித்தெழும்பி, அவனை ஆளுகை செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது. பிசாசின் பெலத்தைப் பெற்று, நன்மையானதெல்லாவற்றிற்கும் விரோதமாய்க் கிரியைசெய்கிறது. விசுவாசிக்குள் வாசம்பண்ணுகிற ஆவியானவருக்கும், இந்த மாம்சத்துக்கும் எப்போதும் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. இவ்விரண்டும் "ஒன்றுக்கொன்று விரோதம். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது" (கலா. 5: 17). இந்தப் போராட்டத்தில் எந்தப்பக்கம் ஜெயிக்கும் என்பதைத் தீர்மானிக்கவேண்டியது விசுவாசி தான். அவன் தன்னில் வாசம்பண்ணுகிற ஆவியானவர் தமது கிரியையைப் பூரணமாய் நடப்பிக்கும்படி இடங்கொடுத்து அவருக்குக் கீழ்ப்படிவானானால், மாம்சத்தின் வல்லமையிலிருந்து காக்கப்பட்டு ஆவியானவரால் நடத்தப்படுவான். "ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சைகளை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (கலா. 5: 16). ஆனால் மாம்சத்திற்கு இடங்கொடுத்து, அதற்குக் கீழ்ப்படிவானானால் மாம்சத்தினால் நடத்தப்படுவான்; ஆவியின் கிரியையைத் தன் ஜீவியத்தில் காணமாட்டான். ஏனென்றால், "மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை." மாம்சம் ஆளுகையைப் பெற்றிருக்கும் இடத்தில் ஆவியானவருடைய ஆளுகை காணப்படமாட்டாது.

மாம்சத்தின் கிரியைகள் எப்படி வெளியரங்கமாய்க் காணப்படும்? சுயஇஷ்டம், சுயசித்தம், சுயமகிமை, தற்பெருமை, சுயதீர்மானம், சுயவைராக்கியம், சுயபெலன் முதலியவைகளும், இவைகளுக்கு இடையூறு நேரிடும்போது காணப்படும் பொறாமை, எரிச்சல், கோபம், சண்டை, வாக்குவாதம், பிரிவினை முதலியவைகளுமே

மாம்சத்தின் அடையாளங்கள். கொரிந்து சபையில் பொறாமையும், வாக்குவாதமும், பேதங்களும், பிரிவினைகளும் இருந்தன. ஆகையால் அவர்கள் மாம்சத்துக்குட்பட்டவர்கள் என்று அப்போஸ்தலன் அவர்களைக்குறித்துச் சொல்லுகிறார்.

தேவனுடைய பிள்ளைகளே, நமது ஜீவியத்தில் எதற்கு இடங் கொடுக்கிறோம்? "எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள்" (ரோ. 6: 16). நாம் எதற்கு நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோம்? தனித்தனி ஜீவியத்திலும், தேவ ஊழியத்திலும், சபை நடத்துவதிலும், 'மாம்சம்' கிரியைசெய்கிறதா, ஆவியானவர் கிரியை செய்கிறாரா? 'நான்' என்ற எண்ணம் முன்னுக்கு நிற்கிறதா, தேவமகிமை முன்னுக்கு நிற்கிறதா? என்னுடைய சொந்த ஜீவியத்திலானாலுஞ்சரி, என் ஊழியத்திலானாலுஞ்சரி, 'நான்' என்ற கெர்வத்தை வளர்த்து, அதைப் பூசை செய்யும் வரைக்கும் ஆவியானவருடைய வல்லமையை நான் காண்பது கூடாதே.

1. தேவனுடைய பிள்ளைகளுடைய ஜீவியத்தில் மாம்சத்தின் கிரியை எவ்வளவு காணப்படுகிறது! இதற்குரிய பேர் பெருமையே. 'பெருமை' என்றால் என்ன? அநேகருக்குள் இதைப்பற்றித்தப்பெண்ணம் இருக்கிறது. நமக்கு இல்லாததை இருக்கிறது போலே நினைத்து மேன்மைபாராட்டுகிறது பெருமை என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். அது இழிவான பெருமை. ஆனால் தேவன் நமக்குத் தந்திருக்கும் ஈவுகளை நமது சுய மேன்மைக்கென்று உபயோகப்படுத்தி, அதினிமித்தம் அவ்வீவுகளைப் பெற்றிராத மற்றவர்களைக் குறைவாய் எண்ணுவதே

பெருமை. தேவன் ஒருவனுக்குக் கல்வியைக் கொடுத்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அக்கல்வியினிமித்தம் மற்றவர்கள் தன்னை மகிமைப்படுத்த வேண்டும் என்று எதிர் பார்ப்பதும், 'மகா-ா-ா,' 'அவர்கள்' முதலிய மரியாதைப் பட்டங்கள் கொடுக்கவேண்டும் என்று விரும்புவதும், அந்தக் கல்வியில்லாத மற்றவர்களைக் குறைவாய் எண்ணுவதுமே பெருமை. ஒருவனுக்குத் தேவன் ஆஸ்தியைக் கொடுத்திருக்கலாம். ஆனால் அந்த ஆஸ்தியினிமித்தம் அவன் தன்னை மேன்மைக்குரியவனாக எண்ணி, மற்றவர்களை அவமதிப்பானானால், அதுவே பெருமை. ஒருவன் உயர்குலத்தில் பிறக்கும்படி தேவன் கிருபை செய்திருக்கலாம்; ஆனால் அவன் தன் குலத்தினிமித்தம் தன்னை மற்றவர்கள் கண்ணியப்படுத்தவேண்டும் என்று விரும்பி, தன்னிலும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவனை அவமதித்து, குறைவாய் எண்ணும்போது, அதுதான் பெருமை. ஒருவன் பிரசங்கத்தில் சாமர்த்தியனாயிருக்கும்படி தேவன் கிருபை அளித்திருக்கலாம். ஆனால் மனுஷர் தன்னை அதற்காக மெச்சிக் கொண்டு, பெருமைப் படுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கும்போது அதுதான் பெருமை. வேறொருவன் தேவ கிருபையினால் நல்ல கிறிஸ்தவ ஜீவியம் செய்கிறவனாயிருக்கலாம். ஆனால் அந்த ஜீவியத்தின் நிமித்தம் தன்னை மற்றவர்கள் முக்கிய மனுஷனாக எண்ண வேண்டுமென்று விரும்பி, குறைந்த ஜிவியமுள்ளவர்களை அவமதிக்கும் போது அதுவே பெருமை. ஒருவருக்கு தேவனுடைய பரிசுத்த ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கலாம்; ஒருவேளை போதகராயிருக்கலாம். ஆனால் அந்த ஊழியத்தினிமித்தம் மற்றவர்கள் தனக்குச் சலாம் போடவேண்டும் என்றும் தோத்திரம் செய்யவேண்டுமென்றும் எதிர் பார்த்து,

மற்றவர்களைத் தனக்குக் கீழானவர்களாக எண்ணிவிடும் போது அது பெருமையாகி விடுகிறது.

சுருங்கச்சொன்னால்: தேவன் அருளியிருக்கும் எந்தக் கிருபைகளையும் பெற்றுக்கொள்வதற்குத் தான் முற்றிலும் அபாத்திரன் என்றும், இவைகளை தேவன் தனக்கு அளித்து விட்டதினால் தான் மற்றவர்களிலும் எந்த விஷயத்திலும் விசேஷித்தவனல்ல என்றும் உண்மையாய் உணர்ந்து, தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் ஒன்று மற்றவனாகத் தன்னைத் தாழ்த்துவதே மனத்தாழ்மையுடையவனுக்கு அடையாளம். இப்படியில்லாமல், தேவன் அருளியிருக்கும் கிருபைகளைச் சுயமகிமைக்கென்று உபயோகித்து, தன்னை அவைகளினிமித்தம் உயர்த்துவதே பெருமை. "தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்."

ஜாதிவித்தியாசம் பாராட்டுவது முழுவதும் இப்படிப் பட்ட பெருமையல்லவா? தாங்கள் ஒரு உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சிலர் எண்ணிக்கொண்டு அதற்குரிய கனத்தை மற்றவர்கள் கொடுக்க வேண்டும் என்று எதிர் பார்த்து, அந்தஜாதிக்குரிய பட்டத்தைத் தங்கள்பேரின் பின்னால் கூட்டிக்கொண்டு, இன்னும் சிலரைத் தங்களிலும் தாழ்ந்தவர்களாகப் பாவித்து, அவர்களோடு உட்காரவும், சாப்பிடவும், சரிசமானராகக் காணப்படவும் கூடாது என்று நடந்து கொள்ளுகிறது பெருமையேயன்றி வேறென்ன? இவ்வித சிந்தை அற்பமேனும் இருந்தால், அல்லது, இவ்வித வித்தியாசம் இருக்கவேண்டும் என்று விரும்பினால் ஆவியானவருடைய வல்லமை எப்படிக் காணப்படக்கூடும்? "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்." "மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை" யல்லவா?

சண்டை விரோதம் முதலியவைகளுக்குக் காரணம் பெருமைதானே. நமது இஷ்டத்திற்கு விரோதமாக யாராவது எதையாவது நடப்பித்தவுடனே மாம்சம் கொதிக்கிறது. நமது மேன்மையையும், நமது நியாயத்தையும் எடுத்துக்காட்டி, நம்மை குற்றமற்றவர்களென்று காட்ட அவசரப்படுகிறோம். இவ்விதமாய் நமது பெருமையை வளர்த்து, நம்மிலிருக்கும் மாம்சத்தைப் பெலப்படுத்துகிறோம். நமது பேரில் மனத்தாங்கலுள்ள மனுஷரோடு போய்ப் பேசி ஒப்புரவாகிறதற்கு அந்த மாம்சம் சகிக்கிறதில்லை. ஏன்? அப்படியானால், அது தாழ்ந்து போகிறதற்குச் சரியாகுமாம்; அது மாம்சத்திற்குப் பிரியமாயிருக்கிறதில்லை. ஆகவே, அன்பின் ஆவியானவர் ஆட்கொள்ள இடம் பெறாமல் போகிறார் இன்னும் சிலவேளைகளில் சமாதானப்படுத்தும்படி போகும்போதே, நம்முடைய நியாயத்தை எடுத்துப் பேசத் தொடங்கி, மாம்சப் பெருமையை எழுப்பி விடுகிறோம். மற்றவர்கள் சமாதானம் பண்ணவரும்போது நாம் அவர்களைவிட மேலானவர் போலவும், சமாதானம் பண்ண வருகிறவர்கள் மாயக்காரர்போலவும் எண்ணி அவர்களை அவமதித்து, அவர்களுடைய மாம்சத்தை எழுப்பிவிட்டு நமது மாம்சத்தைப் பெலப்படுத்திப்போடுகிறோம். இவைகளுக்கும் இடங்கொடுத்துக்கொண்டு பரிசுத்த ஆவியானவருக்காகவும் விண்ணப்பம் பண்ணினால் அவருடைய கிரியை காணப்படுவது கூடிய காரியமோ? மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமானவை அல்லவா?

பிறரைக் குற்றப்படுத்திக் குறைவாய்ப் பேசுகிறது பெருமைதானல்லவா? எத்தனையோ தேவனுடைய பிள்ளைகளுடைய ஜீவியம் இதினால் வல்லமையற்றுப் போயிருக்கிறதே! புதிதாய்க் குணப்பட்டு, புதிய ஜீவனைப் பெற்று, புது உற்சாகத்துடன் ஜீவிக்க ஆரம்பித்திருக்கிறவர்கள்

மற்றவர்களைக் குறைகூறி, தங்களுடைய ஜீவியம் மேலான ஜீவியம் என்றும், தங்களைப்போல மற்றவர்கள் இல்லையென்றும் பேசுகிறதினால் மாம்சத்தைப் பெலப்படுத்தி விடுகிறதில்லையா? மிஷன் உத்தியோகஸ்தர்மேல் குறை, போதகன்மார்பேரில் குற்றம், மிஷனெரிமார்பேரில் முறைப்பாடு — இப்படிப்பட்டவைகளுக்கு எத்தனை விசுவாசிகள் இடங்கொடுத்து, தங்கள் ஜீவியத்தில் ஆவியானவருடைய கிரியையைக் குறைத்துப்போடுகிறார்கள்! நாம் முறையிடுகிற குறைகள் நியாயமா, அநியாயமா என்பது காரியமல்ல. அதைக்குறித்து அந்த இடத்தில் அந்த நேரத்தில் பேச வேண்டியது அவசியமா? அல்லது கடமையா? அல்லது பேசினதினால் தேவ நாமத்திற்கு மகிமையுண்டாகுமா? பேசும்போது பூரண மனத்தாழ்மையோடு பேசினோமா? அதுதான் காரியம். அப்படியில்லையானால் அது மாம்சத்தின் கிரியையேயன்றி வேறல்ல. ஆவியின் கனி அன்பு. தேவ லக்ஷணம் அன்பு. அன்பில்லாத எந்தக் கிரியைக்கும் நாம் இடங்கொடுக்கும்போது தேவ ஆவியானவர் தமது வல்லமையைக் காட்டமுடியாது. ஆன்றிரு மறே சொல்லுகிறார்: * "சகலவிதமான அன்புத்தாழ்ச்சியும், உண்மையைத்தான் பேசுகிறோம் என்று மனதைத் தேற்றிக்கொண்டு மற்றவர்களைக் குற்றப்படுத்துவதும், மற்றவர்களிடத்தில் பதஷ்டத்தோடு காட்டமாயும் வெடுவெடுப்பாயும் பேசுவதும், ஏதாவது ஒரு காரியம் மனதுக்கு விரோதமாய் நடந்தால் மனம் நொந்துகொள்ளுகிறதும், முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறதும், மற்றவர்களைப்பற்றி மனக்கசப்பாய் நினைக்கிறதும் பேசுகிறதும், மற்றவர்கள் மனமுறிவடையத்தக்க விதமாய் நடந்து கொள்ளுவதுமாகிய இவைகளெல்லாம்

---

* "மனத்தாழ்மை" பக். 72.

பெருமையாகிய வேர் உள்ளேயிருக்கிறது என்பதின் வெளி அடையாளங்கள்.'' இவைகளுக்குத் தாராளமாய் நமது இருதயத்தையும் வாயையும் திறந்து கொடுக்கும்போது, ஆவியானவரின் வல்லமையைக் காணுதிருப்பது ஆச்சரிய மில்லையே.

2. கர்த்தருக்கென்று செய்யப்படும் வேலைகளில் மாம்சத்தின் கிரியை காணப்படுகிறதில்லையா? எத்தனை வேலை நமது பேருக்கென்று செய்யப்படுகிறது? நமது காலத்தில் இன்னின்ன சபைகள் வந்தது என்று காணப்படுவதற்கு, நமது திறமையால் இந்தக் கோவில் கட்டி முடிந்தது என்று சொல்லப்படுவதற்கு, நமது பேர் சொல்லப்படுவதற்கென்று எத்தனை வேலையைச் செய்கிறோம்! எல்லாவற்றையும் நாம் செய்திருக்க அதினுல் வருகிற கண்ணியம் வேறொருவருக்குப் போகுமானுல், உடனே உண்மையைச் சொல்லி, நான் தான் செய்தேன் என்று வெளியிட ஆயத்தமாயிருக்கிறோ மல்லவா? நாம் செய்த வேலையில் ஒரு தப்பிதம் அல்லது குறை சொல்லப்படுமானுல், அது நம்மாலல்ல நம்மோடு சேர்ந்த மற்றவர்களால் உண்டானது என்று தெரியப்படுத்தி விடத் தீவிரிக்கிறோமே. நம்முடைய பிரசங்கத்தை எல்லாரும் மெச்சிக்கொள்ளவேண்டும்; நம்முடைய வேலையில் தப்பிதம் சொல்லக்கூடாது; நம்முடைய ஊர், நம்முடைய காலம், நம்முடைய சபை — இவைகள்தான் எல்லாவற்றிலும் சிறந்ததெனப் பேர்பெறவேண்டும் என்று இவ்வித நோக்கங்களுடன் கர்த்தருடைய வேலையை நாம் செய்கிறதில்லையா? நம்முடைய ஆலோசனையின்படி மற்றவர்கள் நடக்கவேண்டும் என்று எவ்வளவு ஆத்திரப்படுகிறோம்! நல்ல முயற்சிகள் நடக்க வேண்டும் என்று மாத்திரமல்ல, அவைகள் நம்முடைய பேரால், நம்முடைய ஆலோசனைக்குக் கீழ்ப்பட்டு, நம்மால்

உண்டானதாக நடந்தேறவேண்டும் என்றும் ஆசைப்படுகிற தில்லையா? நம்முடைய யோசனை கேட்டு, நமக்குக் கீழடங்கிச் செய்யப்படாத எவ்வித முயற்சிகளைப்பற்றியும் குறை கூறி, அவைகளில் தப்பிதங் கண்டுபிடிக்கிறதற்கு விழிப்பாயிருக் கிறோமல்லவா? கர்த்தருடைய வேலை யார் மூலமாகச் செய்யப்பட்டாலும் நாம் சந்தோஷப்பட்டு அவர்களைத் தைரியப்படுத்துகிறோமா? கர்த்தருடைய மகிமையை மாத் திரம் நாம் நாடுகிறவர்களானால் அப்படிச் செய்வது நமக்குச் சந்தோஷமாயிருக்குமே. ஆலோசனைக் கூட்டங்கள், கமிற்றிக் கூட்டங்கள், பஞ்சாயத்துகள்—முதலியவைகளில் நமது ஆலோசனையின்படியே காரியங்கள் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறோமா? நமது தீர்மானத்தை அல்லது ஆலோசனையைக் கொண்டு செலுத்தவேண்டும் என்ற வைராக்கியம் நமக்கு இருக்கிறதுண்டா? நமது ஆலோசனை தள்ளிவிடப்படும்போது கோபம் உண்டாகிற துண்டா? நமது யோசனைகள் நியாயம் என்றும், மற்றவர்கள் யோசனைகள் தப்பிதம் என்றும் எண்ணுகிறதுண்டா? அப்படியானால், இவ்விஷயங்களிலெல்லாம் மாம்சத்தைப் பெலப்படுத்துகிறோம்; 'நான்' என்ற விக்கிரகத்தைப் பூசை செய்கிறோம். அது பக்தியின் வேஷமானாலும் சரி தேவ ஊழியத்தின் வேஷமானாலும் சரி, தேவ வைராக்கியத்தின் வேஷமானாலும் சரி,—எந்த வேஷத்தின் மூலமாயும் நடக்கிறது 'நான்' என்கிற மாம்சத்தைப் பூசை செய்கிற விக்கிரகாராதனையே. இப்படிக் கர்த்தருடைய வேலையில் மாம்சத்துக்கு இடங் கொடுத்துக்கொண்டு ஆவியானவருடைய வல்லமைக்காகக் கெஞ்சும் போது, ஆவியின் கிரியை காணப்படாதிருக்கிறது ஆச்சரியமல்லவே. மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகையல்லவா?

சுய தீர்மானமும், சுய பெலனில் சார்ந்திருக்கிறதும் மாம்சத்தின் கிரியைகளேயன்றி வேறென்ன? கர்த்தருடைய வேலையில் எவ்வளவாக நம்முடைய பயமுறுத்தலையும், கண்டிப்பையும், சொற் சக்தியையும் நம்பி விடுகிறோம்! சீர்திருத்தமும், ஜீவிய மாறுதலும் நம்முடைய சட்ட திட்டங்களால் மாத்திரம் நடந்து விடும் என்று எண்ணு கிறோம். பிரசங்கத்தில் நாம் சொல்லும் கண்டிப்பான வார்த்தைகளால் ஜனங்கள் பாவ உணர்வடைவார்கள் என்று நினைக்கிறோம். நமது இஷ்டப்படி வேலைகளை ஒழுங்கு செய்கிறோம். நமது வைராக்கியத்தினாலே அவைகளை நடத்துகிறோம். நமது தீர்மானப்படியும் எண்ணப்படி யும் சகலத்தையும் கொண்டு செலுத்த முயலுகிறோம். இவைகளெல்லாம் மாம்சத்தின் ஆயுதங்கள் அல்லவா? கர்த்தருடைய வேலையில் இவ்வளவு தூரம் மாம்சம் கிரியை செய்ய இடம்பெறும்போது ஆவியானவரும் கூடக் கிரியை செய்யக்கூடுமோ? 'மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை' யாயிற்றே!

உடன் ஊழியரே, பரிசுத்த ஆவிக்காக நாம் இதுவரை யும் ஜெபம்பண்ணினோம். அவருடைய வல்லமையை நமது நடுவில் காண வாஞ்சித்தோம். ஆனாலும் அவருடைய வல்லமையை நமது நடுவில் நாம் ஏன் காணவில்லையென்று ஆச்சரியப்படுகிறோம். இப்பொழுது அதின் காரணம் தெரிகிறதா? பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமா யிருக்கிற மாம்சத்திற்கு நம்மிடத்தில் இடம் உண்டா? 'நான்' என்கிற மாம்ச சிந்தை நம்மை ஆளும்படி நாம் இடங் கொடுத்திருக்கிறோமா? கர்த்தருடைய வேலையை மாம்ச ஆயுதங்களோடு நடத்த முயன்றோமா? அப்படியானால் அவ்வெல்லாத் தடைகளையும் நீக்கி தேவன் நம்மைச் சுத்திகரிக்கும்படி அவர் சமுகத்தில் பணிந்து வணங்கி

நிற்போமா? இந்நிமிஷத்திலேயே நம்மைத் தாழ்த்துவோமா? நமது வல்லமையைக் கெடுத்துக்கொண்டிருக்கும் இந்த மாம்ச சிந்தையை அவரே நம்மைவிட்டு நீக்கும்படி கெஞ்சுவோமா ? நமது மாம்சம் கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டது என்பதை நினைத்து, தைரியமாய் நமது குறைவை அறிக்கையிடுவோமாக. கிறிஸ்துவின் சிலுவையில் மாம்சத்தின் வல்லமை ஜெயிக்கப்பட்டது (கலா. 5 : 24) நாம் இதின் மோசமான தன்மையை அறிந்து, நம்மைத் தாழ்த்தும்போது ஆவியானவர் நம்மை நிரப்பி, மாம்சத்தை ஜெயிக்கிறார் என்று காண்போம்.

ஆவியானவர் தண்ணீருக்கும் நதிகளுக்கும் ஒப்பிடப் பட்டிருக்கிறார் (யோ. 7 : 38). நதி தாழ்ந்த இடத்தில் மாத்திரம் ஓடும். எங்கே பள்ளம் இருக்குமோ, எங்கே தரைமட்டம் தாழ்ந்துகொண்டே போகுமோ, அங்கே தண்ணீர் பாய்ந்துகொண்டே இருக்கும். நம்முடைய ஜீவியத்தில் மாம்சத்தின் மேடுகள் உடைபடாமலிருக்கும் வரை நம்மிலும் நமது மூலமாயும் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடமாட்டா.

மாம்சசிந்தை பெந்தெகொஸ்தே ஆவியின் பூரண கிரியையைத் தடுக்கிற முதலாம் தடை. மற்றதை அடுத்த அதிகாரத்தில் கவனிப்போம்.

8-ம் அதிகாரம்

பெந்தெகோஸ்தே ஆவிக்குத் தடை: உலகசிந்தை

பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் இருதயத்தில் கிரியை செய்யும் இன்னொரு ஆவி எதுவென்றால் உலகத்தின் ஆவியே. மாம்சசிந்தையைப் போலவே உலக சிந்தையும் தேவனுக்கு விரோதமான பகைதான். ஆவியானவருடைய கிரியையை சபையில் வல்லமையாய் நாம் காணாதிருப்பதற்குக் காரணம் சபையில் உலக சிந்தை பலத்திருப்பதுதான். விசுவாசிகள் இப்பிரபஞ்சத்தின் தேவனானவனுடைய வஞ்சனைக்குள்ளாகப்பட்டு உலகத்தைச் சிநேகிப்பதினால் ஆவியானவர் வல்லமையற்றிருக்கிறார்.

ஆதித் திருச் சபையில் அப்படியிருக்கவில்லை. உபத்திரவத்தினால் கிறிஸ்தவர்கள் ஊருக்கு ஊர் துரத்தப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் என்ற பேரினாலேயே பகைக்கப்பட்டார்கள். உலகத்தின் மேன்மையையும் பணத்தையும் அவர்கள் தேடவில்லை. கிறிஸ்துவுக்காகப் பிழைத்து, அவசியமானால் அவருக்காக இரத்தச் சாட்சிகளாய் மாண்டு போவதே அவர்களுடைய ஆசை. இவ்வுலகம் அவர்களுக்குக் குப்பையாகத் தோன்றினது. கிறிஸ்து அவர்களுக்கு ஆணிமுத்தாகத் தோன்றினார். தங்களுக்குண்டான எல்லாவற்றையும் விற்று அவரையே வாங்கினார்கள். ஆகவே, ஆவியானவர் வல்லமையாய் அவர்களில் கிரியை செய்யக் கூடியதாயிற்று.

நமது நாட்டுச் சபையோ, மோவாபைப்போல 'சிறு வயது முதல் சுகமாய் வாழ்ந்தது; அது ஒரு பாத்திரத்திலிருந்து மறு பாத்திரத்தில் வார்க்கப்படாமலும், அதின்

வண்டல்கள்மேல் அசையாமலும் இருந்தது' (எரே. 48 : 11). ஆகவே 'பரதேசி' என்கிற வார்த்தைகள் நமக்குச் சொல்லப்படக்கூடியதாயில்லை. 'இப்பூலோகம் காடுதான்' என்று வாய்பாடினாலும், உள்ளமோ இவ்வுலகம் இன்பந்தான் என்று பாடுகிறது. தேவனுடைய பிள்ளைகளைப் பற்றித்தான் இப்பொழுது பேசுகிறோம். குணப்படாத வனுக்கு உலகம் இன்பமாகத்தானிருக்கும். இயேசுவின் அருமையை அறியாதவனுக்கு உலக மேன்மை பெருமை யாகத்தானிருக்கும். ஆனால் இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட விசுவாசியை உலகவேடிக்கையும், உலக சிநேகமும், உலக உல்லாசமும், உலகப் பெருமையும், உலகக் கவலையும் இழுத்துவிடும்போது, இவைதான் தேவ னுடைய கரம் குறுகிப்போகும்படி செய்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள தேவனுடைய பிள்ளைகளே, நமது நாடு இவ்வளவு நிர்ப்பந்த ஸ்திதியிலிருக்கிறதற்குக் காரணம் நமது உலகப்பற்றுதான். தேவனுடைய சபையே, எழுந்திரு, உன் தூசியை உதறிவிடு.

வேதாகமம் இதைக் குறித்துச் சொல்லுவதைக் கவனிப்போம்.

1 கொரி. 2 : 12—"உலகத்தின் ஆவி...தேவனிலிருந்து புறப்படுகிற ஆவி."

1 யோவா. 2 : 14-20—"உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை."

லூக். 16 : 13—"தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களாலே கூடாது.

யாக். 4 : 4—"விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாயிருக்கிறான். நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேத வாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?"

மேற்காட்டிய வசனங்களில் தேவன் உலகம் என்கிற பதங்கள் எப்படிச் சம்பந்தப்படுத்தப்பட்டுப் பேசப் பட்டிருக்கிறதென்று கவனிக்கலாம். உலகத்தின் ஆவி தேவனுடைய ஆவிக்கு விரோதமாய்க் கிரியை நடப்பிக்கிறது. உலக அன்பு பிதாவின் அன்பைக் கொன்றுவிடுகிறது. உலக ஊழியமும் தேவ ஊழியமும் ஒன்றுக்கொன்று விரோதமானவை. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. உலகத்துக்குச் சிநேகிதன் தேவனுக்குப் பகைஞன். உலகத்தின்மேல் வைக்கிற பாசம் தேவ ஆவியானவருக்கு விரோதமான விபசாரம்! இவ்வளவு தெளிவு போதாதா?

யாக்கோபின் வசனத்தை இன்னும் சற்றுத் தெளிவாய்ப் பார்ப்போம். விசுவாசிகளுக்குத்தான் அவ்வசனத்தைச் சொல்லுகிறார். "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர்" என்று அவர் சொல்லக்கூடும். ஆனால் அவர் இப்போது எரிச்சலுள்ள வைராக்கியம் பாராட்டுகிறார் என்கிறார். அவர்கள் விசுவாசிகள்தாம்; ஆனால் உலகத்தோடு சேர்ந்து போனார்கள். லௌகீக மனுஷரோடு ஒருவேளை சிநேகம் பண்ணிவிட்டார்களாக்கும்! லௌகீக முறைகளைக் கையாடி விட்டார்களாக்கும்! உலக வழக்கத்துக்கேற்றபடி நடந்து கொண்டார்களாக்கும்! உலகத்தாரைப்போல ஜீவிக்க ஆரம்பித்தார்களாக்கும்! இப்படிச் செய்துவிட்டதினால்

அவர்களில் வாசம் பண்ணும் ஆவியானவர் தமது பூரண கிரியையைச் செய்யக்கூடவில்லை. அவர்களைத் தமக்கென்று மீட்ட இயேசுவுக்கு விரோதமாய் அவர்கள் துரோகம் பண்ணினதினால் விபசாரர் விபசாரிகள் என்பதே அவர்களுக்குத் தகுந்தபேர் என்று ஆவியானவர் முறையிடுகிறார். அவர்கள் சண்டைகளுக்குக் காரணம் அவர்கள் அவயவங்களில் போர்செய்கிற உலக இச்சை—உலக ஆசை. அவர்களுடைய உலக ஆசைகள் நிறைவேறுவதற்காகவே அவர்கள் விண்ணப்பம் பண்ணினார்கள். ஜெபங்களோ கேட்கப்படவில்லை. ஆகவே அப்போஸ்தலன் அவர்களைப் பார்த்து: விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார் என்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா? என்கிறார்.

தென்னிந்தியாவிலுள்ள நம்மைப் பார்த்தும் இப்படிச் சொல்லலாமல்லவா? தற்காலத்தில் நாகரீகமும், ஐசுவரியமும், கல்வியும் அதிகரிக்கிறது. இவைகள் நல்லதுதான். ஆனால், தேவன்மீது நமக்கிருக்கும் அன்பையும் அவருக்கு நாம் செய்யவேண்டிய கடமையையும் விட்டு உலகத்திலுள்ளவைகளாகிய இவைகள் நம்மைப் பிரிக்கும்போது, இவைகளே நமக்குப் பெரிய சோதனையும் கண்ணியுமாகின்றனவல்லவா? நமது நாட்டிலுள்ள அநேக தேவனுடைய ஊழியக்காரருடைய ஆவிக்குரிய ஜீவியம் குன்றிப்போகிறதற்குக் காரணம் மேற்சொன்ன விஷயங்களில் தேவனைப் பார்க்கிலும் உலக வழக்கத்தைக் கவனித்து, அதற்குக் கீழ்ப்படிகிறதுதான் என்பதற்குச் சந்தேகமுண்டா?

உலக சிந்தையாவது என்ன? யோவான் அப்போஸ்தலன்: "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய இவைகளே உலகத்திலுண்டானவைகள்" என்றார். மாம்சத்துக்குரிய ஆசை—உயர்ந்த உத்தியோகத்தின்பேரில் ஆசை, உயர்ந்த சம்பளத்தின்பேரில் ஆசை, அதிகப் பணத்தின்பேரில் ஆசை, சம்பிரமமான தீனியின்பேரில் ஆசை—இவைகளை சுயமேன்மைக்கென்றும் சுயசொகுசுக்கென்றும் தேடும் போது அதுவே மாம்ச இச்சையாகிய உலக சிந்தை. கண்களின் ஆசை—உலக வேடிக்கைகளைப் பார்க்க ஆசை, தீய எண்ணங்களை எழுப்பி விடுபவைகளைப் பார்க்கும்படி ஆசை, கண்கண்டதின்பேரிலெல்லாம் ஆசை, பார்க்கும் புதுமாதிரி வஸ்திரங்களின்பேரில் ஆசை, புது நகைகளின் பேரில் ஆசை—இவைகளே கண்களின் இச்சையாகிய உலக சிந்தை. ஜீவனத்தின் பெருமை—பணக்காரன் என்று பேர்பெறவேண்டும் என்ற பெருமை, கலியாணத்தில் ஆயிரம் ரூபாய் நகை போடப்பட்டது என்று சொல்லப் படுவதை விரும்பும் பெருமை, கலியாணம் வெகு சிறப்பாய் முடிந்தது என்ற பேர் உண்டாகும்படி செலவழிக்கும் பெருமை, உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று எண்ணப்பட விரும்பும் பெருமை, உலகத்தால் மேன்மையாக எண்ணப்படுவதை ஆசிக்கும் பெருமை—இவைகளே ஜீவனத்தின் பெருமையாகிய உலகசிந்தை. இவைகளுக்கு தேவனுடைய பிள்ளைகள் இடங்கொடுக்கும்போது பரிசுத்த ஆவியின் வல்லமையைக் காண்பதரிது.

வேறு விதமாய்ச் சொன்னால்: இயேசுவின் கட்டளையை மதியாமல், சரீர சம்பந்தமான எந்தச் சிறு விஷயத்திலானாலும் உலக அபிப்பிராயத்தையும் உலக வழக்கத்தையும் உலகத்தார் செய்கிறதையும் கவனித்து, அதற்கேற்றபடி

நடந்துகொள்ளுகிறதே உலகத்துச் சிநேகிதனுவதேயாம். இதை நமது அன்றாடக ஜீவியத்தில் பற்பல விஷயங்களில் கவனிக்கலாம்.

1. பண விஷயத்தில் இந்த உலக சிந்தையைக் கவனிக்கலாம்.

பணத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டின் போதனை யென்ன? கிறிஸ்துவின் சீஷர் பண விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று ஆண்டவர் போதிக்கிறார்? இதை வாசிக்கிற யாராகிலும் இதுவரையும் ஒரு நாளாவது இந்த விஷயத்தை ஆராய்ந்து பார்க்கவில்லையானால் இப்பொழுது செய்யும்படி வேண்டுகிறேன். விசேஷமாக, சுவிசேஷங்களில் மத்தேயு 6 : 19—26; மாற்கு 10 : 21—24; மாற்கு 12 : 44; லூக்கா 12 : 15—34; 16 : 19—31 முதலிய பாகங்களையும், நிருபங்களில் 1 தீமோத்தேயு 6 : 6—10, 17-ஐயும் பார்த்தால் பணத்தைப்பற்றி புதிய ஏற்பாடு போதிக்கிறதென்னவென்பது தெளிவாகும்.

அவைகளின் மொத்தப்பொருள் இதுதான்: இவ்வுலகத்தின் பணம் முழுவதும் தேவனுடையது. அதிலும் விசேஷமாக தேவனுடைய பிள்ளைகளுடைய பணம் முழுவதும் கிறிஸ்துவுக்குச் சொந்தமானது. பணத்திற்கு மனுஷன் சொந்தக்காரனல்ல, உக்கிராணக்காரன். தேவன் ஒவ்வொருவனுக்கும் அருளியிருக்கும் பணத்தைக் குறித்து அவனவன் தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவன் என்பதே.

லூக்கா சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் மூன்று உவமைகளிலும் இந்தச் சத்தியத்தைக் கவனிக்கலாம். ஐசுவரியமுள்ள மதியீனனிலிருந்து இயேசு சொல்லும்

போதனை என்ன? "தேவனிடத்தில் ஐசுவரியவானு யிராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான்" என்கிறார்.

அநீதியுள்ள உக்கிராணக்காரனிலிருந்து இயேசு போதிக்கிறதென்ன? "அநீதியுள்ள உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்." "கொஞ்சத்தில் உண்மையாயிருங்கள்." "அநீதியுள்ள உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?" "வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால் உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?" "தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களாலே கூடாது" என்கிறார் (லூக். 16 : 9—13)

இவைகளின் கருத்தென்ன? உலகப்பொருள் தேவனுடையது; 'வேறொருவருடையது.' இது தேவனுடையதென்றும், இதைக் குறித்து அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும் உணர்ந்து நீங்கள் அதைச் செலவழியாவிட்டால், உங்களுக்குச் சொந்தமாயிருக்கக்கூடிய எந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் தேவன் கொடுக்கமாட்டார். ஆகவே, தேவன் உங்கள் வசத்தில் ஒப்புவிக்கும் பணத்தை, அந்த உக்கிராணக்காரனைப்போல உங்கள் மேலோக நன்மைக்கென்று, அதாவது தேவனிடத்தில் ஐசுவரியமாயிருப்பதற்கென்று செலவிடுங்கள். தேவனையும் சேவித்து, உலகப்பொருளையும் சேவிக்க வேண்டுமானால் அது கூடாத காரியம் என்கிறார்.

ஐசுவரியவானையும் லாசருவையும் பற்றிய உவமையில் இதை இன்னும் தெளிவாக்குகிறார். ஐசுவரியவான் செய்த

பாவம் என்ன? அவன் விபசாரக்காரனோ? திருடனோ? அநியாயமாய்ப் பணத்தைச் சேர்த்தானோ? அப்படிப்பட்ட எந்தக் குற்றத்தையும் இயேசுநாதர் அவன்பேரில் சாட்ட வில்லை. "ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான், அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந் தான்." இதுதான் அவன் பேரில் சாட்டப்படுகிற குற்றம். ஆபிரகாம் அவனைப் பார்த்துச் சொல்லுவதென்ன? "நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அநுபவித்தாய்" என்கிறான். கர்த்தர் இவனுக்குக் கொடுத்த ஐசுவரியத்தை இவன் தன்னை அலங்கரிக்கவும் தான் சம்பிரம மாய் வாழவும் செலவிட்டானேயன்றி, தன் வாசலருகே கிடந்த ஏழை மனுஷனைச் சந்தோஷப்படுத்தச் செலவிட வில்லை. அதுதான் அவன் கேட்டுக்குக் காரணமாயிற்று.

எல்லா விஷயத்திலும் சன்மார்க்கனுயிருந்த ஐசுவரிய முள்ள தலைவன் காரியத்தைக் கவனிப்போம் (லூக். 18 : 18). கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்று இயேசு சொல்ல, அவன்: "இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக் கொண்டிருக்கிறேன்" என்றான். இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அவனுடைய பணம் அவனுடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டிருந்தது என்று கண்டார். இந்த நிபந்தனையின் பேரில் கிறிஸ்துவைப் பின் செல்ல அவனுக்கு மனமிருக்க வில்லை.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர் நமக்குக் கொடுக்கும் பணத்தை நமது பணம் என்று

நினையாமல் கிறிஸ்துவின் பணம் என்று நினைக்கப் படித்திருக்கிறோமா? தமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் நம்மைக் கிரயத்திற்கு வாங்கின இயேசு எஜமான், நம்மோடு கூட நமது பணத்தையும் சேர்த்துத்தான் வாங்கினார் என்று உணர்ந்திருக்கிறோமா? நமது வேலைக்குக் கிடைக்கிற சம்பளமானாலும் சரி, நமது பிரயாசத்தினால் வருகிற வருமானமானாலும் சரி, எல்லாம் கிறிஸ்துவினுடையதென்று நினைத்து செலவிடுகிறோமா? நமது கையில் கிடைக்கிற ஒவ்வொரு ரூபாயின் மேலும் கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணுகிறோமா?

விசுவாசிகளாகிய நம்மில் அநேகரைப் பார்த்து இயேசு இரட்சகர்: உன்னை நான் என் ஆவியினால் நிரப்பவேண்டுமானால் 'இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு.' உன் பணம் என்னுடையதாக மாத்திரம் எண்ணிச் செலவிடப்பட வேண்டும் என்று சொல்லமாட்டாரோ? சபையின் சுய ஆதரவுக்கென்றும், போதகர் தாபரிப்புக்கென்றும், சுவிசேஷ பிரபல்லியத்திற்கென்றும் சேகரிக்கப்படுகிற பணங்கள் போதாததாயிருக்கும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் சம்பிரமமாக வாழ்கிறதில்லையா? கிறிஸ்துவின் ஊழியம் லாசருவைப்போல வாசலண்டை கிடக்கும்போது, தங்கள் மனைவிகளுக்கும் பிள்ளைகளுக்கும் பட்டுகளும் இரத்தாம்பரங்களும் வாங்குகிறவர்களில்லையா? நம்முடைய பணங்களை இவ்விதமாய்ச் செலவிடவா இயேசு நம்மைத் தமது சுய இரத்தத்தினாலே மீட்டார்? தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் செலவுகளை இயேசுவினிடம் சொல்லுங்கள். உங்கள் வஸ்திரப் பெட்டிகளை அவருக்குத் திறந்து காட்டுங்கள். எல்லாச் செலவுகளும், எல்லா வஸ்திரங்களும் அவர்

ஒப்புக்கொள்ளத்தக்கவைதானு என்று தேவ சமுகத்தில் முழங்காலில் நின்று உங்கள் இருதயத்தைக் கேளுங்கள்.

நமக்குள்ளே ஒரு தப்பிதமான எண்ணம் இருக்கிறது. நாம் கிறிஸ்துவினுடையவர்களானுல் பத்திலொன்று அவருடையது என்று நினைக்கிறேம். அப்படியானுல் பத்திலொன்பது யாருடையது? இயேசு நாதர் வந்து மரித்தபின்பு தசமபாகக் கட்டளை உண்டோ? இயேசு இவ்வுலகத்திலிருந்தபோதுங்கூட தலைவன் ஒருவனைப் பார்த்து: உனக்குண்டானவைகளில் பத்திலொன்றை விற்று ஏழைகளுக்குக் கொடு என்று அவர் சொல்லவில்லை. அவன் ஒரு யூதன். ஏற்கனவே யூதர் முறைப்படி கர்த்தருக்கென்று அவன் தசமபாகம் கொடுத்திருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. அது காரியமல்ல. மீதியானதையோ தனக்கென்று கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தான். அதை விட்டுவிடு என்று இயேசு கட்டளையிட்டார். இரண்டு காசைப் போட்ட கைம்பெண்ணின் சங்கதியிலிருந்து அவர் போதிக்கிறதென்ன? நாம் எவ்வளவு கொடுக்கிறேம் என்பதையல்ல, எவ்வளவு நமக்கென்று மீதி வைக்கிறேம் என்பதையே தேவன் கவனிக்கிருர் என்று காட்டுகிருரல்லவா?

பணம் வெகு அருமையானது அதுதான் நமது சரீர பெலத்திற்கு மனுஷர் கொடுக்கும் கூலி. அதுதான் நமது பிரயாசத்தின் பெறுமதி. அதுவே நமது மனதின் திறமைக்கு மற்றவர்கள் அளிக்கும் கிரயம். ஆகவே, நமது இரட்சகர் பேரில் நமக்கிருக்கும் அன்பை நாம் நன்றாய்க் காட்டக்கூடியது பணத்தின் மூலமாகவே. நம்முடைய தேவனுகிய கர்த்தரிடத்தில் நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்பு

கூறுகிறோம் என்பதை வார்த்தையிலல்ல, செய்கையினால் காட்டக்கூடியது பணத்தின் மூலமாகத்தான். தேவனுடைய பிள்ளைகளே, நமது முழு பலத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூறுகிறோமா? நமது பிரயாசத்தின் பலனைக் கர்த்தருக்கே பிரதிஷ்டை பண்ணியிருக்கிறோமா? நாம் பணத்தைச் செலவழிக்கிற விஷயத்தில் உலகத்தார் நம்மிடத்தில் வித்தியாசத்தைக் காண்கிறார்களா? உலகத்தாரைப்போலவே நாமும் நமது பணவிஷயத்தில் தன்னயமுள்ளவர்களாகவே ஜீவிக்கிறோமல்லவா?

தேவனுடைய பிள்ளைகள் இது விஷயத்தில் பூரணமாய்க் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்வரை நமது நடுவில் பரிசுத்த ஆவியின் வல்லமை காணப்படுவது கூடாத காரியம். இதை வாசிக்கும் விசுவாசியே, தேவ ஊழியனே, உன் ஜீவியத்தின் வல்லமையற்ற நிலைமைக்குக் காரணம் இதுதானு? 'குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக, நீ வேலை செய்து பிரயாசப்படாமல் மற்றவர்களால் மதிக்கப்படுவதற்கும், நீயும் உன் குடும்பமும் சம்பிரமமாய் வாழ்வதற்கும், ஆஸ்திக்காரன் என்று பேர் பெறுவதற்கும் வேலை செய்கிறுயாக்கும்! ஆவியானவர் உன்னில் தமது கிரியையைப் பூரணமாய் நடப்பிக்கவேண்டுமானல், உன் பண விஷயத்தில் கிறிஸ்துவின் சித்தப்படி மாத்திரம் நடக்க ஒப்புக்கொள்ளுவாயா? உன் சம்பளமும், உன் வருமானமும், வட்டிக்கு விடப்பட்டிருக்கும் உன் பணமும், சொத்திலிருக்கிற தொகையும் உன்னைக் கிரயத்துக்கு வாங்கினவருடையதென்று உணர்ந்து, அவருடைய நாம மகிமைக்கேற்ற விதமாய் மாத்திரம் அதின் கால் துட்டையும் செலவழிக்க ஒப்புக்கொள்ளுவாயா? நீயும் உன் மனைவியும் கிறிஸ்துவின் மகிமைக்கென்று பிழைக்கவும், உன் பிள்ளைகளை அவருடைய மகிமைக்கென்று வளர்க்கவும் போக,

மற்றப்படி எவ்வித செலவும் தேவனுடைய பிள்ளைகளாகிய உனக்குப் பாவமானது என்று இப்போது அங்கீகரிப்பாயா? நீ ஆவியானவரின் நிறைவைப் பெறுகிறதற்கு ஒருவேளை இது மாத்திரம் தடையாயிருந்தாலும் இருக்கலாம். ஆவியானவர் இதை உன் உள்ளத்தில் உணர்த்துவாராக!

2. படிப்பு விஷயத்திலும் உலக சிந்தையைக் கவனிக்கலாம்.

இவ்வுலகத்தில் தற்காலத்தில் பிழைக்கவேண்டுமானால், மெற்றிரிக்குலேஷன் முதலிய பரீக்ஷைகள் ஒப்பேறவேண்டிய தவசியம் என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள் ஒருவாறு அது உண்மைதான். அது தப்பிதமல்ல தேவன் கொடுத்திருக்கும் புத்தியை விருத்திபண்ணுவதில் தப்பிதம் இல்லை. ஆனால், பெற்றோருக்குப் பிள்ளைகளைப் பற்றியும், பிள்ளைகளுக்குத் தங்களைப் பற்றியும், உபாத்திமாருக்கு மாணாக்கரைப் பற்றியும் இருக்கிற விசேஷித்த எண்ணம் சோதனை ஒப்பேற வேண்டும் என்றாகும்போது அங்கேதான் தப்பிதம் வருகிறது. தேவனுடைய பிள்ளைகளான பெற்றாரில் அநேகர் தங்கள் பிள்ளைகளுடைய ஆத்துமாவைக் குறித்துக் கவலைப்படுகிறதைவிடப் படிப்பைக் குறித்து அதிகக் கவலைப்படுகிறதில்லையா? அவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறானா, தேவனைக் கனம் பண்ணுகிறானா, கர்த்தருக்கு மகிமையாய் ஜீவிக்கிறானா என்று விசாரிக்கிறதைவிட, வகுப்பில் எப்படி இருக்கிறான், இந்த வருஷம் ஒப்பேறுவானா என்கிற கேள்விகள்தான் வெகு அவசரமாகக் கேட்கப்படுகின்றன அல்லவா? பெற்றாரும் சிநேகிதரும் உபாத்திமாரும், தங்களுடைய கேள்விகளினாலும் வார்த்தைகளினாலும் கவலையினாலும் படிப்பை வைக்கத்தகாத இடத்தில் வைக்கும்படி வாலிபர் மனதை நடத்திவிடுகிறார்களல்லவா? முதலாவது,

பரீட்சையையும் அதில் ஒப்பேறுவதையும் தேடுங்கள். பிற்பாடு மற்றவைகளெல்லாம் தானாய் வரும் என்பதே தற்காலத்தின் உபதேசமில்லையா? ஆகவே, வாலிபர் — விசுவாசிகளான பெற்றோரின் பிள்ளைகள் — பசாசுக்கும் உலகத்துக்கும் விரோதமாகக் கிறிஸ்துவின் கொடியின்கீழ் நின்று போர்புரிவதற்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட பிள்ளைகள் — சிலுவை அடையாளத்தினால் கிறிஸ்துவுக்கென்று பிரதிஷ்டைப்பண்ணப்பட்ட பிள்ளைகள் — தங்கள் பிராயத்தில் கிறிஸ்துவையும் இரட்சிப்பையும் அவமதித்து லௌகீக ஜீவியம் செய்வதைப் பார்க்கிறோம்.

கல்விக்கு விரோதமாகப் பேசுகிறேன் என்று ஒருவரும் எண்ணவேண்டாம். ஒருவன் தன் ஜீவகாலத்தின் வேலைக்காக ஆயத்தப்படுவதற்கு எந்தக் கல்வியை அவன் பெற்றுக்கொள்ள கர்த்தர் இடங்கொடுக்கிறாரோ அதைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் அந்தக் கல்வியை வைக்கத்தகாத இடத்தில் வைக்கிறதுதான் தப்பிதம். கல்வி கொடுக்கப்பட்டிருக்கும் நோக்கம் என்ன? கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உலகத்துக்குரியவர்களாய் வளர்க்கும்படிக்காகவா? நமது கிறிஸ்துவ வாலிபர் பணம் சம்பாதிக்கும் இயந்திரங்களாவதற்காகவா? கலியாணம் பண்ணும்போது நாலாயிரம் ஐந்தாயிரம் என்று பரிசம் கேட்பதற்காகவா? நமது ஜாதிக்கும், குடும்பத்திற்கும் பெருமையை உண்டாக்குவதற்காகவா? ஒருபோதும் இல்லை. தேவன் கொடுக்கச் சித்தமாயிருக்கும் கல்வியைக் கொண்டு, நாமும் நமது பிள்ளைகளும் எந்த இடத்திலிருந்தாலும் எந்த வேலையிலிருந்தாலும் கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்து, அவருக்கென்று முற்றிலும் பிழைப்பதற்காக அல்லவா? இந்த நோக்கம் நிறைவேறாவிடில் நாம் கிறிஸ்துவைக் கனம்பண்ணுகிறவர்களல்லவே.

இந்த விஷயத்தைக் கவனியாததால் அல்லவா? அநேகருடைய ஜீவியத்தில் ஆவியின் வல்லமையைக் காணேம். தாங்களும் தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பிள்ளைகளும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் என்பதை நினையாமலும், குடும்ப ஜீவியத்தில் கிறிஸ்துவைக் கனம்பண்ணுமலும் இருக்கும்போது ஆவியானவருடைய வல்லமை காணப்படுமா? தற்காலத்தில் நமது நாட்டிலுள்ள இந்து பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகளைப்பற்றி இருக்கும் அபேக்ஷைக்கும், தேவனுடைய பிள்ளைகளான பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகளைப்பற்றி இருக்கும் அபேக்ஷைக்கும் வித்தியாசம் உண்டோ? இந்துக்களும் நாமும் ஒன்றுபோல, பிள்ளைகள் படித்து நல்ல உத்தியோகத்திற்கு வரவேண்டும் என்று விரும்புகிறோம். சோதனை ஒப்பேறத்தக்கதாகவும், நல்ல உத்தியோகம் கிடைக்கத்தக்கதாகவும், வேலையை அவர்கள் காப்பாற்றிக்கொள்ளத்தக்கதாகவும், பணத்தைத் தகாத வழிகளில் கெடுத்துவிடாமலிருக்கத்தக்கதாகவும் — அவர்கள் சன்மார்க்கராக ஜீவிக்கவேண்டும் என்று இந்துக்களைப்போலவே நாமும் விரும்புகிறோம். அப்படியானல் கிறிஸ்து நமக்காக மரித்தார் என்று நம்பியிருக்கிற நமக்கும் அவர்களுக்கும் வித்தியாசமில்லையே. நாமும் நம்முடைய பிள்ளைகளும் கிறிஸ்துவினுடையவர்கள். அருமை மீட்பராகிய இயேசுவே நமது பிள்ளைகளுடைய ஜீவியத்திற்கும் எஜமான் என்றும், அவரை மகிமைப்படுத்தும்படி அவர்கள் பிழைக்காவிட்டால் அவர்கள் பிழைத்திருக்கிறதில் பிரயோஜனம் இல்லை என்றும் எத்தனை பேர் உணருகிறோம்? நமது பையன்கள் படிக்க வேண்டிய படிப்பையும், போக வேண்டிய பள்ளிக்கூடத்தையும், செய்யவேண்டிய வேலையையும் கிறிஸ்துவே தீர்மானிக்க வேண்டியவர் என்றும்,

கிறிஸ்துவுக்கு நாம் செய்யவேண்டிய கடமைக்கு இவைகளில் எதாவது இடையூறாக இருக்குமானால், உடனே என்ன நஷ்டம் வந்தாலும் அதைவிட்டுவிட வேண்டியதே நமது கடமை என்றும் உணருகிறோமா?

'என்னை முழுவதும் தேவனுக்கு ஒப்புவித்திருக்கிறேன்' என்று சொல்லும் என் சகோதரனே, சகோதரியே, இந்த விஷயத்தில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவாயா? இவ்வளவு நாளும் போனது போகட்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினிமித்தம் அது மன்னிக்கப்படும்படி கெஞ்சு. ஆனால் இனி இந்த விஷயத்தில் தேவனுடைய சித்தத்தின்படி செய்வாயா? நீயும் உன்னுடைய பிள்ளைகளும் கர்த்தருடையவர்கள் என்பதை உணர்ந்து ஜீவிப்பாயா? உன் பிள்ளைகளைக் கர்த்தருக்கென்று மாத்திரம் வளர்ப்பாயா? உன் பிள்ளைகளுடைய படிப்பைப்பற்றியும், வேலையைப் பற்றியுமுள்ள சகல காரியங்களிலும் உன் தேவனுடைய சித்தத்தைக் கேட்டு நடப்பாயா? உன் இஷ்டம், உன் பிரியம் என்பதல்ல, உன் இரட்சகருடைய பிரியப்படியே நடந்து கொள்ள சம்மதிப்பாயா? உன் ஜீவியத்தில் ஆவியானவருடைய வல்லமையைக் காணாதிருக்கிறதற்குக் காரணம் உன் பிள்ளைகளை நீ வளர்க்கிற வளர்ப்பும், அவர்களைப்பற்றி நீ உன் மனதில் நினைத்திருக்கிற நினைவுமாய் மாத்திரமிருந்தாலும் இருக்கலாம். உன் விஷயத்தில் இது உண்மையானால், இதினால் உன் ஜீவியத்திற்கிருக்கும் தடையைக் கர்த்தர் உனக்கு உணர்த்துவாராக.

3. கலியாண விஷயத்திலும் உலக சிந்தையைக் கவனிக்கலாம்.

மாப்பிள்ளை, பெண் தெரிந்துகொள்வதில் தேவனுடைய சித்தமா, உலக வழக்கமா, எதற்குக் கீழ்ப்படிகிறோம்?

தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்களும் தங்கள் பெண் மக்களுடைய கலியாண விஷயத்தை ஒழுங்கு செய்யும்போது தவறிப்போகவில்லையா? இந்த குடும்பம் பக்தியுள்ள குடும்பமா? அந்த ஆள் குணப்பட்ட ஆளா? என்னுடைய பிள்ளையின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உதவியாயிருப்பாரா? கர்த்தருக்கென்று ஞானஸ்நானத்தினாலும் பொருத்தனை யினாலும் பிரதிஷ்டை பண்ணப்பட்ட இந்தப் பிள்ளை இனி கர்த்தருக்கென்று பிழைப்பதும் உழைப்பதும் லேசா யிருக்குமா என்ற இப்படிப்பட்ட காரியங்களைக் கவனி யாமல், மாப்பிள்ளை என்ன பரீட்சை தேறியிருக்கிறார் என்றும், சொத்து உண்டா என்றும், சம்பளம் என்ன என்றும் மாத்திரம் கவனிக்கிறதில்லையா? எத்தனை தேவ பயமுள்ள பிள்ளைகள் உலக சிந்தையுள்ள பெற்றோரால் நிர்ப்பந்தமுள்ள பிரயோஜன மற்ற ஜீவியத்திற்கு இவ்வித மாய் விற்கப்பட்டிருக்கிறார்கள்! மாப்பிள்ளைகளுக்குப் பெண்கள் நியமிக்கிறதும் இப்படித்தானல்லவா? தேவ னுடைய பிள்ளைகளான மாப்பிள்ளைகளுங் கூட இந்த விஷயத்தில் தவறி, தங்கள் ஜீவியத்தையும் வேலையை யும் கெடுத்துப்போடுகிறார்களே. ஒரு பெண்ணை ஒழுங்கு செய்யுமுன்னதாக இந்தப் பெண் குணப்பட்டவள்தானா? ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உதவியாயிருப்பாளா? கர்த்தருக் கென்று பிழைக்கவும் உழைக்கவும் தன்னை ஒப்புக்கொடுத் திருக்கிறாளா? என்பதைக் கவனியாமல், நகை எவ்வளவு போடுவார்கள்? யார் அதிக ரொக்கம் கொடுக்கக் கூடும்? இன்னும் படிக்கிறதற்கு யார் பணம் கொடுக்கச் சம்மதிப்பார்கள்? பிள்ளையினுடைய அழகு என்ன, நிறம் என்ன, என்று கேட்டு கலியாணத்தை ஒழுங்குசெய்கிறார்கள். (குணம் நல்லதுதானா என்று கேட்கிறார்கள் என்பது நிசந்தான். ஆனால் எந்தப் பெண்ணைப்பற்றியாவது,

யாராவது, இது கெட்டகுணமுள்ள பிள்ளையென்று சொல்வார்களா? எல்லாப் பெண்களும் 'நல்ல குணம்' உள்ளவர்கள்தான்! இருதயத்திற்குள் எவ்வளவு பண ஆசையும், மினுக்கான வஸ்திரப் பிரியமும், பெருமையும், ஆபரணப் பிரியமும் இருந்ததென்பது பிற்பாடுதான் தெரியவரும்.) இவ்விதமாய் இணைக்கப்பட்ட எத்தனை அருமையான தேவ ஊழியக்காரர் வல்லமையும் மனப் பாக்கியமும் அற்ற ஜீவியம் செய்கிறார்கள்! இவைகளெல் லாம் தேவனுடைய சித்தமோ? அல்லவே அல்ல. வேதம் சொல்லுவதைக் கேட்போம்: "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக.... அவிசு வாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? (2 கொரி. 6:14, 15). இதை வாசிக்கிற தேவனுடைய பிள்ளைகளே, நம்மில் அநேகர் இவைகளில் தற்காலத்து இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி நடந்துகொள்ளுகிறோமல்லவா? அப்படிச் செய்யும்போது ஆவியானவருடைய வல்லமையை நாம் காண்பது எப்படி?

கலியாணச் செலவுகளில் தேவசித்தத்திற்கா, உலக வழக்கத்திற்கா எதற்குக் கீழ்ப்படிகிறோம்? மாப்பிள்ளைகள் தப்பிப்போகாதபடி உலகத்தாரைப்போலவே தங்கள் பணங்களை உயர்ந்த பரீட்சை கொடுத்தவர்கள் மேல் கொட்டுகிறவர்கள் இல்லையா? பெண்கள் வைத்துக்கொண் டிருக்கிறவர்களுடைய ஆத்திரத்தினால் மாப்பிள்ளைகள் தற்காலத்தில் ஏலம்போடப்படுகிறார்களே! தேவனுடைய பிள்ளைகளே, இப்படிப் பணத்தைக் கொட்டுகிறது தேவ சித்தமோ? நீங்கள் அதிகப் பணம் கையிலே கொடுத்து மாப்பிள்ளைகளைக் கொண்டதினால் தேவன் மகிமைப் பட்டாரோ? உங்கள் பிள்ளைகள் அதிக மனப்பாக்கிய முள்ளவர்களாயும் கிறிஸ்துவுக்கென்றும்ஜீவிக்கிறார்களோ?

இதை வாசிக்கிற ஒருவர்: காலம் இப்படியிருக்கிறதே. நான் அப்படி பணம் கொடுத்து நகை போடாவிட்டால் என் பிள்ளையை ஒருவரும் கலியாணம் செய்யமாட்டார்களே. அதற்கென்ன செய்கிறது? என்று கேட்கலாம். தேவ சித்தத்தைச் செய்கிறதினால் நஷ்டம் வருமோ? ஒருபோதும் வராது. கர்த்தருடைய சித்தத்திற்கு மாத்திரம் கீழ்ப் படிய ஒப்புக்கொடுங்கள். உலக வழக்கத்தின்படியல்ல, கிறிஸ்துவுக்குப் பிரியமானதையே செய்வேன் என்று சொல்லுங்கள். கர்த்தர் உங்கள் விசுவாசத்தையும் உண்மையையும் கனம்பண்ணுவார் என்று அநுபவத்தினால் அறிவீர்கள்.

மோடியான கலியாணம் செய்யும்படி பணத்தைச் செலவழிக்கிறவர்கள் இல்லையா? கடன் வாங்கியாகிலும் தங்கள் அந்தஸ்துக்குக் குறையாதபடி நகைகள் போடவும், மரியாதையாய்க் கலியாணம் முடிக்கவும் எவ்வளவு பிரயாசம்! எத்தனையோ வருஷமாய் மிச்சம் பிடித்ததை எல்லாம் ஒரே பெண்மகளுடைய கலியாணத்தில் செலவழிக் கிறவர்கள் எத்தனைபேர்! விலையுயர்ந்த வஸ்திரங்கள், அனாவசர விருந்துகள், வீண் ஆடம்பரங்கள்—முதலியன கிறிஸ்தவர்களுக்குள் வழக்கமாய் நடக்கிறதே! தேவ னுடைய பிள்ளைகளாவது வித்தியாசமாய் நடக்கிறார்களா? அப்படிப்பட்ட வித்தியாசத்தைக் காண்பது எவ்வளவு அபூர்வம்! கர்த்தருடைய விஷயங்களுக்குத் தங்கள் இருதயங்களை அடைத்துக்கொள்ளுகிறவர்கள் ஒரு கலியாணம் வந்தவுடனே நூற்றுக்கணக்கான ரூபாய்களை விருந்துகளிலும், உடுப்பிலும் வேடிக்கைகளிலும் செலவிடு கிறதில்லையா? இது உலகத்தின் பிரியத்தைக் கவனித்துச் செய்யப்படுகிறதா, இயேசு மீட்பரின் பிரியத்தைக்

கவனித்துச் செய்யப்படுகிறதா? அவருக்கு இது சந்தோஷமாயிருக்குமோ?

ஒருவேளை நாம்: நான் இன்ன பிரகாரம் விருந்து செய்யாவிட்டால் என்னை மதிக்கமாட்டார்கள். இன்னவித மான சேலை வாங்காவிட்டால் மற்றவர்கள் குறைவாய் நினைப்பார்கள்—என்று சொல்லலாம். ஆம்! இவைகள்தான் வழக்கமாய்ச் சொல்லப்படும் நியாயங்கள். நாம் உலக வழக்கத்திற்கேற்றபடி நடக்கிறோம் என்பதையே இவை காட்டுகின்றன. நமக்கு இவ்வுலகத்தின் பெருமை வேண்டும்; இவ்வுலகம் நம்மை மதிக்கவேண்டும்; நம்முடைய மரியாதை யைக் காத்துக்கொள்ளவேண்டும் என்பது முக்கியம். கிறிஸ்துவின் சித்தம் எது, அவருடைய பிரியம் எது என்பது அற்பக்காரியம். நம்முடைய முதல் எஜமான் உலகமும், இரண்டாவது எஜமான் கிறிஸ்துவுமாயிருக்க விரும்புகிறோம். தேவனுடைய பிள்ளைகளாயுமிருந்து கொண்டு, எவ்வளவு தூரம் உலகத்தின் பிரமாணங்களுக்கு உட்பட்டு, உலகத்தின் மதிப்பைத்தேடி, உலகத்தாரைப் போல ஜீவிக்கக் கூடுமோ அவ்வளவு ஜீவிக்கலாம் என்று நினைக்கிறோம். உலகத்திற்கு வித்தியாசமாய்க் காணப்படப் பயப்படுகிறோம். "ஊரோடே ஒத்தோடு" என்ற பழ மொழியை கிறிஸ்தவர்களும் மேற்கோளாகவும் நியாயமாக வும் கூறிக்கொள்ளுகிறோம். தேவனுக்கும் உலகப்பொருளுக் கும் ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது என்று இயேசு சொன்னதும் தப்பிதம் என்று நினைக்கிறோமோ?

இந்தப் பெருமையை வளர்க்கும்படி பிரயாசப்படுகிற தினால் தேவனுடைய பிள்ளைகள் அநுபவிக்கிற துன்பம் கொஞ்சமா? எத்தனைபேர் கடனினால் தொய்ந்து போகிறார்கள்! ஆண் மக்கள் படிக்கிறதற்குக் கடன். பெண்

மக்களைக் கரையேற்றுகிறதற்குக் கடன். அந்தஸ்தைக் காப்பாற்றக் கடன். பிள்ளைகளின் பெருமையை வளர்க்கக் கடன். தேவனுடைய பிள்ளைகள் — கடன்கொடுக்கிறவர்களின் அடிமைகள்! இதுவே உலக வழக்கத்திற்கேற்க நடந்துகொள்வதினால் கிடைக்கும் பலன்.

இவைகள்தான் நம்மில் வாசம்பண்ணும் ஆவியானவருக்கு விரோதமாய்க் கிரியை நடப்பிக்கிற இரண்டு ஆவிகள். சகோதரரே, நம்மை ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவது : மாம்சத்தின் ஆவிக்கு நாம் இடங்கொடுத்திருக்கிறோமா? மாம்சத்தைப் பெலப்படுத்தியிருக்கிறோமா? எந்த விஷயத்திலாவது மற்றவர்களிலும் நம்மை மேன்மையுள்ளவர்களாக எண்ணினதுண்டா? இவ்வித எண்ணத்தினால் மற்றவர்களைக் குற்றப்படுத்தி, மற்றவர்களுடைய வேலைகளிலுள்ள குறைகளைக் காட்டி நம்முடைய வேலையும் ஜீவியம் விசேஷித்ததாக எண்ணப்படும்படி பேசினதுண்டா? மாம்ச வைராக்கியத்தினாலும், நமக்கிருக்கும் இயற்கைத் திறமையைக்கொண்டும், நமது சொல் சக்தியின்மேல் சார்ந்தும் கர்த்தருடைய வேலையைச் செய்கிறோமா? இவைகளெல்லாவற்றையும் நம்மைவிட்டு அப்புறப்படுத்தி, கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படும்படி கெஞ்சுவோமாக.

இரண்டாவது : உலகத்தின் ஆவிக்கு நம்மில் இடமுண்டா? 'உலக வழக்கத்திற்கேற்றபடி' நடக்க முயலுகிறோமா? நமது உடை, உணவு, முதலியவை தேவன் ஒப்புக்கொள்ளத்தக்கவை தானா? நமது பண விஷயத்தில் சகலமும் நமது எஜமான் ஒப்புக்கொள்ளக்கூடியவைதானா? நமது பிள்ளைகளை வளர்ப்பதிலும், படிக்கவைப்பதிலும், கிறிஸ்துவின் தாசருக்கேற்றபடி நடந்து வருகிறோமா?

நமது உத்திரவாதத்திற்குள் நடக்கும் கலியாணங்களில் தேவனுடைய சித்தமும் சட்டமுமா, அல்லது உலகத்தாரின் வழக்கமும் முறையுமா, எது நடந்தேறுகிறது? தேவ சமுகத்தில் உத்தரவு சொல்லுவோமாக.

இவைதான் இரண்டு முக்கிய தடைகள். பெந்தெகொஸ்தே ஆவியைப்பெற்று, அவருடைய வல்லமையை ருசிக்கும்படி வாஞ்சிக்கிற சகோதரனே, சகோதரியே, உன்னில் இந்தத் தடைகள் இல்லையா? தேவ சமுகத்தில் இப்பொழுதே அவைகளை அறிக்கையிடுவாயா? தேவ ஒத்தாசையினால் இவைகளுக்கு எதிர்த்து நின்று உனக்குள் வாசம்பண்ணும் ஆவியானவராலே முற்றிலும் நடத்தப்பட ஒப்புக்கொடுப்பாயா? அப்படியானால் பெந்தெகொஸ்தே ஆவியைப்பற்றிச் சொன்ன வாக்குத்தத்தம் உன் விஷயத்தில் நிறைவேறும் என்பதற்குச் சந்தேகமில்லை.

9-ம் அதிகாரம்

பெந்தெகொஸ்தே ஆவியைப் பெற்றுக்கொள்ளும் வகை.

பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியைக்குத் தடைகளவை என்று முந்தின அதிகாரங்களில் கவனித்தோம். ஒரு சபையிலானாலும் சரி, ஒரு கூட்டத்தாரிலானாலும் சரி, மொத்தமாகவானாலும் சரி, தனி ஆத்துமாவிலானாலும் சரி, பரிசுத்த ஆவியானவருடைய பூரண நிறைவான கிரியைக்குத் தடைகள் இவைகளே. இவைகள் ஆளுகை செய்யும் இடத்தில் ஆவியானவர் ஆளுகை செய்ய முடியாது.

ஆனால் தேவ கிருபையினால் இத்தடைகள் நீக்கப்படும் போது, ஒரு ஆத்துமா பெந்தெகொஸ்தே ஆவியை எப்படிப் பெற்றுக்கொள்ளக்கூடும் என்று இந்த அதிகாரத்தில் கவனிப்போமாக. இதை வாசிக்கிற விசுவாசியே, பிதாவானவர் உனக்கு அருளியிருக்கும் இந்தச் சுதந்தரத்தை நீ அனுபவிப்பதெப்படியென்று ஆவியானவர் தாமே உனக்குக் காட்டியருள்வாராக.

ஒரு காரியம் முதலாவது கவனிக்கப்படவேண்டியது. விசுவாசியின் இருதயத்தில் ஆவியானவர் வாசம்பண்ணுகிறார் என்று முன் சொல்லப்பட்டதே; அப்படியானால் அவரைப் பிற்பாடும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லலாமா? அவர் நம்மில் வாசம் பண்ணுகிறது மெய்யானால் பிற்பாடு பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் என்ன? இயற்கையாய் இக் கேள்விகளைக் கேட்பது நியாயம்.

இவற்றிற்கு உத்தரவு இதுதான். ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணுகிறுர் என்பதும் மெய்தான்; அவரைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் மெய்தான். இதற்கு மூன்று முகாந்தரங்களைக் காணலாம்:—

1. ஆவியானவர் பெந்தெகொஸ்தின் நிறைவுள்ளவராக நமக்கு அருளப்பட்டிருந்தாலும், அவருடைய பெந்தெகொஸ்தே கிரியையை நாம் அநுபவிக்கவில்லையல்லவா? அவர் இந்தக் கிரியையைச் செய்யும்படி நாம் விரும்பும்போது, அந்த ஆசீர்வாதம் தேவனிடத்திலிருந்தே வரவேண்டும். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" (யாக். 1 : 17). ஆகவே பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியையாகிய இந்தப் பூரண வரமும் பரத்திலிருந்தே எப்பொழுதும் உண்டாகி, பிதாவினிடத்திலிருந்தே எப்பொழுதும் இறங்கிவரவேண்டியது.

2. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் சபையில் வாசம்பண்ணும்படி வந்தார் என்பது சத்தியமானுலும், அதினுல் அவர் பரலோகத்தில் அதற்குப் பிறபாடு இல்லை என்று சொல்வது தகாது. திரியேக தேவன் எங்கும் வியாபித்திருக்கிறவர். இடத்தின் எல்லையும், காலத்தின் அளவுகுறியும் அவருக்கு இல்லை. அவர் சபையிலும் இருக்கிறுர். தேவனிலும் இருக்கிறுர்! இதுதான் இரகசியம். இது எப்படி என்று நமக்கு விளங்காதிருக்கலாம் விளங்கவேண்டிய அவசரமும் இல்லை. அது சத்தியம் என்பது நமக்கு போதும்.

3. பரிசுத்த ஆவியானவருடைய கிரியை வேறே, அவர் வேறே என்பதில்லை ஆவியானவருடைய பூரண கிரியை நமக்கு வேண்டுமானுல், ஆவியானவரே நமக்கு

அதிகமாய்க் கொடுக்கப்படுகிறதினாலேயே அது கிடைக்கும். தேவனுடைய எந்த ஆசீர்வாதங்களையும் நாம் சுயாதீனமாய் எடுத்து அநுபவித்துக்கொள்ள முடியாது. தேவன் பேரில் சார்ந்து நின்று அவரோடு ஐக்கியமாகிறதினாலேயே, அவர் தம்மையே நமக்கு ஈகிறார். பெந்தெகொஸ்தே ஆவியானவரின் ஆசீர்வாதங்களும் அப்படித்தான். அவருடைய எந்தக் கிரியையும் நமக்குக் கிடைக்கவேண்டுமானால் அவரே ஒரு புது நிறைவோடு நமக்கு அருளப்படவேண்டிய தவசியம்

நமது சபாநாயகராகிய இயேசுநாதருடைய ஜீவியத்தில் இதைக் கவனிக்கிறோம். அவர் பரிசுத்த ஆவியினால் பிறந்தார். ஆகவே பரிசுத்த ஆவியானவராலேயே முப்பது வருஷமும் பிழைத்திருந்தார். ஆனாலும் அவருடைய ஊழியத்தை அவர் ஆரம்பிக்கும்போது, திரும்பவும் பரிசுத்த ஆவியானவரைப் பிதாவினிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார் என்று வாசிக்கிறோம். அவருடைய ஞானஸ்நான தினமே அவருக்குப் பெந்தெகொஸ்தே நாளாயிருந்தது.

ஆனால் இன்னொரு காரியத்தை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும் பரிசுத்த ஆவியானவரை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது உண்மைதான். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்காக நாடோறும் அநேக வீணான விண்ணப்பங்களும் ஜெபங்களும் செய்யப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியை எங்களுக்குத் தாரும்! என்று ஜெபிக்காத கிறிஸ்தவனுண்டோ? எல்லாக் கிறிஸ்தவர்களும், தங்களுடைய எல்லா ஜெபங்களிலும் பரிசுத்த ஆவியானவருக்காக எப்பொழுதும் ஜெபிக்கிறார்கள். என்றாலும் பெற்றுக் கொள்கிறார்களா? பரிசுத்த ஆவிக்காகச் செய்யும் ஜெபம்

சாதாரணமாயிற்று. அது ஒரு வழக்கமாகிவிட்டது இதை வாசிக்கிற சகோதரனே, நீயும் அப்படி அடிக்கடி ஜெபித்திருக்கலாம். பெற்றுக்கொண்டாயா? இல்லையானால் ஏன் இல்லை? அதை யோசித்துப்பார். பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்குமுண்டு; உனக்குமுண்டு! பெந்தெகொஸ்தே ஆவியில் பங்கு எல்லா விசுவாசிகளுக்கும் உண்டு; உனக்குமுண்டு: ஆனால் பெந்தெகொஸ்தே ஆவியானவரைக் கேட்பதும் பெற்றுக்கொள்வதும் சின்னக்காரியமல்ல. அவரைப் பெற்றுக்கொள்ள நீ ஆயத்தமாயிருக்கிறாயா? அவருடைய பரிபூரண கிரியை இதுமுதல் உன்னிலே நடக்கவேண்டும் என்று விரும்புகிற நீ அந்தக் கிரியைக்கு உன்னைக் கையளிப்பாயா? பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியை நமது நாட்டுச் சபைகளில் காணப்பட வேண்டுமானால், அது முதலாவது தனித்தனி விசுவாசிகளிடத்தில் காணப்படவேண்டும். அதாவது மற்றொருவரிடத்திலுமல்ல—உன்னில் காணப்பட வேண்டும். அருமை இயேசு பெந்தெகொஸ்தே ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி சீஷரை ஆயத்தப் படுத்தின விதத்தைக் கவனிப்போமாக. அப்பொழுது, நீயும் நானும் அவரைப் பெற்றுக்கொள்ள. வேண்டுமானால் எவ்வித ஆயத்தம் நம்மில் நடக்கவேண்டும் என்று காண்போம். பெந்தெகொஸ்தே ஆவியானவர் உன்னை நிரப்பி, உபயோகிக்க இப்பொழுது ஆயத்தமாயிருக்கிறார். அவரிடத்தில் யாதொரு தடையில்லை. நீ ஆயத்தமாயிருக்கிறாயா? உன்னில் தடை உண்டா? உண்டானால் அதை அகற்றுவாயா?

(1) 'எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்சென்றவர்களே' பெந்தெகொஸ்தே ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள் (லூக். 5 : 11). இயேசு நாதர் ஒருவனைப் பார்த்து: உன் வலையை விட்டு என்னை பின்சென்று வா என்று

அழைத்தார். வேறொருவனைப் பார்த்து: உன் ஆயத் துறையை விட்டு என்னைப் பின்சென்று வா என்று கூப்பிட்டார். "எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின் பற்றினோமே" (லூக். 18 : 28) என்று பேதுரு ஒரு சமயத்தில் சொன்னது உண்மையேயன்றி வேறல்ல. தங்கள் வீடுகளையும், குடும்பங்களையும், தொழில் துறைகளையும் விட்டு அவரைப் பின் சென்றார்கள். தங்கள் பேரையும்கூட விட்டுவிட்டார்கள். இயேசுவின் சீஷர் என்று சொல்லி, ஜனங்கள் அவர்களைப் பரியாசம்பண்ணி இகழ்ந்தார்கள். அவரோடுகூட பகைக்கப் படவும் பாடு படவும் சம்மதித்து அவரைப் பின் சென்றார்கள். தங்கள் மேன்மை, தங்கள் சுகம், தங்கள் சம்பாத்தியம்-என்பவைகளெல்லாவற்றையும் விட்டு, அவரைப் பின் சென்றார்கள். பெந்தெகொஸ்தே ஆவியினால் அவர்கள் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முதல் ஆயத்தம் இதுதான். நமக்கும் முதல்படி இதுதான். நாமும் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின் செல்லவேண்டும்.

பாவமான யாவற்றையும் விட்டுவிடவேண்டும் என்பது மாத்திரம் இதின் பொருளல்ல. பரிசுத்த ஆவியானவர் பாவத்தைப்பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறவனுக்குக் கொடுக்கப்படுகிறவரல்ல என்பது நிசந்தான். ஆனால் அது மாத்திரமல்ல. அநேக கிறிஸ்தவர்கள் இயேசுவைத் தங்களுக்கு இரட்சகராகவும், அவசர நேரத்தில் உதவி செய்கிறவராகவும் வைத்துக் கொள்ளுகிறார்கள். தங்கள் ஜீவியத்திலுள்ள சகலத்திற்கும் மேலான எஜமானாகவோ ஏற்றுக்கொள்கிறார்களில்லை. அநேக விஷயங்களில் தங்கள் இஷ்டப்படி நடக்க விரும்புகிறார்கள். அவர்களுக்குப் பிரியமான பேச்சுப்பேசி நேரத்தைக் கழிப்பார்கள்; அவர்களுக்குப் பிரியமான கதைப் புஸ்தகங்களை வாசித்து,

மனதைக் கறைப்படுத்தி, நேரத்தைப் போக்கடிப்பார்கள்; அவர்கள் மனதுக்கேற்றபடி பணத்தையும் பொருளையும் செலவழிப்பார்கள்; தாங்களே தங்கள் ஜீவியத்துக்கு எஜமானாயிருப்பார்கள். இயேசுவே, எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின் செல்லுகிறேன் என்று ஒருநாளும் சொல்லமாட்டார்கள். ஆனால் ஆவியானவருக்காக ஜெபிக்க மாத்திரம் தவறமாட்டார்கள். இயேசுவோ, எல்லாவற்றையும்விட்டு அவரைப் பின் செல்லுகிறவர்களை மாத்திரம் தமது ஆவியானவரால் நிரப்புகிறார்!

இதை வாசிக்கிற என் அருமையான சகோதரனே, உன் காரியம் எப்படி? கிறிஸ்து உனக்காக மரித்தார் என்று நீ நம்புகிறாய். தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிறிஸ்து உன்னைக் கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார் என்பதை நீ உணர்ந்திருக்கிறாயா? நீ உன்னுடையவனல்ல என்றும், உன்னை மீட்ட இயேசுவுக்கென்றே முற்றிலும் ஜீவிக்க வேண்டியவன் என்றும் உணர்ந்திருக்கிறாயா? மற்றவர்களுக்கு நியாயமாயிருக்கக்கூடிய காரியங்கள் உனக்குத் தகாததாயிருக்கும் என்பதை உணர்ந்து, உன் பழக்க வழக்கங்களும், உன் சாப்பாடும், உன் உடுப்பும், உன் குடும்ப ஜீவியமும், உன் பண விஷயங்களுமாகிய எல்லாவற்றையும் இயேசுவின் பரிசுத்த சித்தத்திற்கேற்க வைத்திருக்கிறாயா? உன் காரியங்களொவ்வொன்றையும் இயேசு ஒப்புக்கொள்ளுவாரா? பாவமுள்ள இந்த உலகத்தில் எவ்வளவு சுயவெறுப்பு காணப்படுமோ அவ்வளவுதான் அன்பும் ஊழியமும் காணப்படும். உன்னில் எவ்வளவு சுயவெறுப்பு காணப்படுகிறது? இயேசுவைப் பின்செல்லும்படி நீ எல்லாவற்றையும் குப்பையென்றும் நஷ்டமென்றும் விட்டுவிட்டாயா?

நமது நாட்டிலிருக்கிற பெரிய குறைவு இதுதான் அறிவு உண்டு, ஆசை உண்டு, பேச்சு உண்டு, பிரசங்கம் உண்டு, சுயவெறுப்பையோ காண்பது அபூர்வம்! இயேசுவுக்காகத் தங்கள் சுகத்தை விட்டுவிட்டவர்கள் எத்தனை பேர்? இயேசுவுக்காகத் தங்கள் சம்பளத்தின் பேரிலுள்ள கவனத்தை விட்டுவிட்டவர்கள் எத்தனைபேர்? இதையெல்லாம் விட்டுவிட்டாலும் இயேசுவுக்காகத் தங்கள் கண்ணியத்தையும், பேர் பிரஸ்தாபத்தையும் விட்டுவிட்டவர்கள் எத்தனை பேர்? எவ்வளவு சொற்பம்!

சீஷர்களுடைய ஜீவியத்தில் காணப்பட்ட லக்ஷணம் அதுதான். அவர்கள் முற்றிலும் தேறிவிடவில்லை. பற்பல பலவீனங்கள் அவர்களிடத்தில் காணப்பட்டது மெய்தான். ஆனால் தங்கள் முழு இருதயத்தோடும் இயேசுவைப் பின் சென்றார்கள். இவ்வுலகத்தில் அவர்கள் உயிரோடிருந்த ஒரே நோக்கம் இயேசுவுக்காகவே. இதற்கு இடையூறாக இருந்த எல்லாவற்றையும் வெறுத்துத் தள்ளினார்கள். அதுதான் உலக வழக்கம். பணம் சம்பாதிப்பது ஒருவனுடைய நோக்கமாயிருந்தால், அதற்கு இடையில் வரக்கூடிய எல்லாவற்றையும் தள்ளிவிட்டுப் பணத்தைப் பின்செல்லுவான். இவ்வுலகத்தில் பெரிய மனுஷனாக எழும்பவேண்டும் என்ற நோக்கங்கொண்டவன், எல்லாவற்றையும்விட்டுக் கீர்த்தியையே நாடுவான். எதையும் அதற்காக செலவழிப்பான். எந்தச் சங்கடத்தையும் அநுபவிப்பான். சுக ஜீவியம் ஒருவனுடைய நோக்கமாயிருந்தால், பணத்தையோ, கடுமையான வேலையையோ, கீர்த்தியையோ எல்லாவற்றையும் விட்டு விட்டுச் சுகத்தைத் தேடுவான். கிறிஸ்து ஒருவனுடைய ஜீவியத்தின் நோக்கமா

யிருந்தால் மாத்திரம் இவையெல்லாவற்றையும் விட்டு கிறிஸ்துவைப் பின் செல்லுவான் சகோதரனே, உன் ஜீவியத்தின் நோக்கமென்ன? நீ எதைப் பின் செல்லு கிறாய்? எல்லாவற்றையும் விட்டு இயேசுவைப் பின் செல்லுகிறாயா?

'எல்லாவற்றையும் விட்டு இயேசுவைப் பின் செல்லு வேன்' என்று லேசாய் அநேகர் சொல்லிவிடுவார்கள். இயேசுவுக்கு முற்றிலும் என்னை ஒப்புக்கொடுத்திருக் கிறேன் என்று சொன்னாலும், அநேக விஷயங்களில் தங்கள் பிரியப்படி நடக்க விரும்புகிறவர்கள் அநேகர் உண்டு. சகோதரனே, நீ எப்படி இருக்கிறாய்? ஒருவேளை கர்த்தர் நீ இப்பொழுது செய்கிற வேலையைவிட அதிகக் கஷ்டமான வேலைக்கு உன்னை அழைக்கலாம். உன் இன ஜனத்தை விட்டு நீ தூர இடத்தில் அந்நிய ஜனங்கள் நடுவில் தனிமை யாய் அவரைப் பிரஸ்தாபப்படுத்த அவர் உன்னை அழைக்க லாம். உனக்கும், உன் இன ஜனங்களுக்கும், உன் வீட்டாருக்கும் பிரியமில்லாத, தூரமான, சுகக் கேடான, சங்கடங்களுள்ள இடத்திற்கு நீ அவரால் அனுப்பப் படலாம். உலக வேலைக்குப் போனால் நீ சம்பாதிக்கக்கூடிய பணம் இதில் உனக்குக் கிடைக்காமல் போகலாம். சர்க்கார் வேலைக்குப்போனால் உனக்கு வரக்கூடிய மேன்மை இதில் வராமல் இருக்கலாம். சுகத்திற்கல்ல, சுகவீனத்துக்கும்; உயர்ந்த சம்பளத்திற்கல்ல, சம்பளக் குறைவுக்கும்; சௌக்கியமும் சந்தோஷமுமான இடத்திற்கல்ல, சரீரப் பிரகாரமாக கஷ்டங்களும் சங்கடங்களும் நிறைந்த இடத் திற்கும் கர்த்தர் உன்னை அழைத்தால் முழு மனதோடு அவருக்குக் கீழ்ப்படியச் சம்மதிக்கிறாயா? அவர் நிமித்தம்

பயித்தியக்காரன் என்றும், அதிகப்பிரசங்கி என்றும் இகழப்பட மனதாயிருக்கிருயா? ஒரு மனுஷரும் உன்னைக் கவனியாமலும், உன்னைப் புகழாமலும், உனக்கு உயர்ந்த உத்தியோகம் கொடாமலும், உன் பேரை அச்சுப்போடாமலு மிருந்தால் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறது மாத்திர மல்ல, அதையே நாடுவாயா? சுருக்கிச் சொன்னால், இதுமுதல் உன் சுகத்திற்காகவும், உன் சௌக்கியத்திற் காகவும், உன் குடும்பத்தின் வாழ்வுக்காகவும், உன் பேருக் காகவும், பணத்திற்காகவும் இவ்வுலகத்திலே பிழையாமல் இவை எல்லாவற்றையும் விட்டு இயேசுவுக்கென்றே பிழைப்பாயா? இதுதான் பிரதிஷ்டை. இதுதான் ஒப்புக் கொடுத்தல். இந்த நேரத்திலேயே இயேசுவின் சமுகத்தில் நின்று: விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தி என்னை அடிமை யாகக் கிரயத்திற்குக் கொண்ட இயேசுவே, எனக்குப் பெந்தெகொஸ்தே ஆவியானவர் மாத்திரம் வேண்டும். எல்லாவற்றையும், எதையும், நான் விட்டுவிட்டு உம்மையே பின் செல்லுவேன் என்று சொல்லுவாயா?

அநேகர் பெந்தெகொஸ்தே நிறைவைப் பெற்றுக் கொள்ளாததற்குக் காரணம் இதில்தான் இருக்கிறது. இயேசுவோ, "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநு தினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றும் (லூக். 9 : 23), "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (லூக். 14 : 26) என்றும் சொன்னார். "ஆமென் இயேசுவே, நீர் சொல்வதெல்லாம் உண்மையே. நீர் எனக்காக எல்லாவற்றையும் விட்டீரே. நானும்

எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின் செல்ல என்னை முற்றிலுமாய், பரிபூரணமாய், எக்காலத்திற்கென்றும் ஒப்புக் கொடுக்கிறேன்'' என்று, விசுவாசிகளே, நாம் ஒவ்வொருவரும் சொல்லுவோமா?

2. இயேசுவை மகா அருமையாக நேசித்தவர்களுக்கே பெந்தெகொஸ்தே ஆவியானவர் அருளப்பட்டார். இயேசுநாதர் அவர்களைப் பார்த்து: நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்; அப்பொழுது தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் என்று சொன்னார் (யோவா. 14 : 15). அவர்களும் மெய்யாகவே அவரை நேசித்தார்கள். அவர் சிலுவையிலறையப் பட்டதைக் கண்ணால் கண்டார்கள் என்றாலும் அவரை மறந்து போகவில்லை அவரையல்லாமல் அவர்களுக்கு உலகத்தில் நம்பிக்கையும் இல்லை, சந்தோஷமும் இல்லை, ஆறுதலும் இல்லை. 'இயேசு' என்றால் அவருக்காக சாகிறவர்களைப்போல நின்றார்கள். இந்த வைராக்கியத்தினாலேயே அவர்களில் ஒருவன் தோட்டத்தில் பட்டயத்தினால் சத்துருக்களை எதிர்க்கவும் ஆரம்பித்தான். அவரோ தடுத்துவிட்டார். அவர்களுடைய எல்லா பலவீனத்தோடுங்கூட அவர்பேரில் அவர்கள் மகா உறுதியான பற்றுதலுள்ளவர்களாயிருந்தார்கள். பேதுருவினிடம் அவர் கேட்டதுபோல அவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து: நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்று அவர் கேட்டால், ஒவ்வொருவரும் உண்மையாய்: ஆண்டவரே, நான் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்று அவர்கள் சொல்லக்கூடும். இந்த அன்புதான் பிற்காலத்தில் அவர்கள் பெலனாயிருந்தது. இந்த அன்பினால்தான் பாடுகளைச் சகித்தார்கள். இந்த அன்பினால்தான் சிறைச்சாலைக்கும்,

ரோம அடிகளுக்கும், பட்டயத்துக்கும் பயப்படாமல் நாடெங்கும் பித்தங்கொண்டவர்கள்போல அலேந்தார்கள். 'கிறிஸ்துவின் அன்பு எங்களே நெருக்கி ஏவுகிறது' என்று அவர்கள் ஒவ்வொருவரும் உண்மையாய்ச் சொல்லக்கூடியதாயிருந்தது.

சகோதரரே இது நம்மிடத்தில் எவ்வளவு சொற்பம்! கிறிஸ்துவின் அன்பினுல் நமது உள்ளங்கள் நிரப்பப் பட்டிருக்கிறதா? அந்த அன்பு நமது இருதயத்தை உருக்குகிறதா? அந்த அன்பினுல் நமது உள்ளம் உடைபட்டிருக்கிறதா? அந்த அன்பினிமித்தம் எல்லாவற்றையும் விட்டுவிடுகிருேமா? உலக இன்பங்களே வெறுத்து, அவரில் சந்தோஷிக்கிருேமா? அவருடைய சகவாசத்தைத் தேடுகிருேமா? இயேசு கிறிஸ்து நமக்கு பதினுயிரம்பேரில் சிறந்தவர்தானு? இந்த விஷயத்தில் பூரணராகிவிட்டோமா என்பது கேள்வியல்ல; ஆனுல் "தேவ கிருபையினுல் இதையே நான் நாடுகிறேன். இயேசுவின் சகவாசமே எனக்கு வேண்டும். அவருடைய அன்பே என் உள்ளத்தை உருக்கி ஆளவேண்டும். என் இயேசுவே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிருயா என்று கேட்கிறீரோ? என் நேசரே, நான் எல்லாவற்றையும் பார்க்கிலும் உம்மையே நேசிக்கிறேன். உமக்கென்றே பிழைக்கிறேன். உமக்கென்றே உழைப்பேன். அவசரமானுல் உமக்கென்று சாவேன்" என்று எத்தனே பேர் சொல்லக்கூடும்?

இதை வாசிக்கிற சகோதரனே, நீ சொல்லக்கூடுமா? உன் அன்பு பெலமுள்ளதா, பெலவீனமானதா? உன்னிடத்தில் அன்பு கூர்ந்து, உனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த இயேசு மீட்பரின் திருச்செவிகளுக்குள் நீ சொல்லக்கூடிய உத்தரவு என்ன? இயேசுவே, நீர்தான் என் வாஞ்சை, உம்மையே நேசிக்கிறேன்; உம்மையே

நேசிப்பேன் என்று சொல்லுவாயா? "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்."

3. இந்த அன்பினால், இயேசுவுக்குப் பரிபூரணமாய்க் கீழ்ப்படிந்தவர்களுக்கே பெந்தெகொஸ்தே ஆவியானவர் அருளப்பட்டார்.

இயேசு சொன்னதும் இதுதானல்லவா? "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள். அப்பொழுது தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்றார். அப்போஸ்தலர் களும் இந்தச் சத்தியத்தைப் பின்னால் மற்றவர்களுக்குச் சொன்னார்கள். "தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவி" என்றார்கள் (அப். 5 : 32).

பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவரால் நிரப்பப் பட்ட அந்த சீஷர் யார்? அவர்கள் கீழ்ப்படிந்தவர்களா? ஆம். கடைசி இரவில் இயேசு அவர்களை நோக்கி: "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப் பொழுது சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று அவர்களைப் பற்றிச் சாட்சி பகர்ந்தார். பிதாவின் சமுகத்தில் அவர்களை நிறுத்தி: "அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார் (யோ. 17 : 6). இயேசுநாதரின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னுங்கூட அவர் கட்டளைப் பிரகாரம் காத்திருந்தார்கள். தங்கள் வீடு வேலைகளை விட்டு, தங்கள் எஜமானுடைய கட்டளைப் பிரகாரம் பத்து நாள் காத்திருந்து ஜெபத்திலும் வேண்டு தலிலும் ஒருமனப்பட்டிருந்தார்கள். அந்த மேல் வீட்டில் தரித்திருந்த அந்த நூற்றிருபது பேரையும் பார்க்கும் போது பிதாவானவர் களிகூர்ந்திருக்கமாட்டாரோ? உலக

முழுவதிலும் அந்த நாளில் அவர்களைப்போல அவருக்குப் பிரியமானவர்கள் வேறே யாராவது உண்டோ? தமது குமாரனை விசுவாசித்து, எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்சென்று, அவரை நேசித்து, அவருடைய வேலையையே செய்வதற்கென்று ஆயத்தப்பட்டிருக்கும் அந்நூற்றிருபது பேரையும் நோக்கும்போது மெய்யாகவே அவர் அகமகிழ்ந்தார் பரலோகவாசலைத் திறந்தார். முழக்கம் உண்டாகும்படி செய்தார். அவ்வளவுபேரையும் தமது ஆவியானவரால் நிரப்பிவிட்டார்!

இயேசுநாதர் தாமும் அபிஷேகம் பண்ணப்பட்டது எந்தச் சமயத்தில்? பாவமறியாத இவரும் பாவிகளோடு கூட பாவியாகத் தம்மை யோவான்ஸ்நானன் முன்பாக நிறுத்தினபோதல்லவா? தடை செய்த அவனை நோக்கி: இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்கிறார். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதையே தெரிந்துகொண்டார். மற்றவர்கள் என்ன நினைத்தாலும் சரி; என்ன சொன்னாலும் சரி, தேவ சித்தத்திற்கே கீழ்ப்படிய வேண்டும் என்று சாதித்தார். பரலோகத்தின் தேவன் அதைச் சும்மா பார்த்துக்கொண்டிருந்தாரோ? பூலோகத்தில் அவரைப்போல அவருக்குப் பிரியமானவர்கள் ஒருவருமில்லை. வானம் திறவுண்டது. தேவாவியானவர் இறங்கினார். தேவன் பரலோகத்திலிருந்து திருவுளம்பற்றி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று சொன்னார். பிதாவுக்குப் பிரியமானதை எப்பொழுதும் செய்யும்படி ஒப்புக்கொடுத்த இயேசுநாதருக்கு ஆவியின் அபிஷேகம் அருளப்பட்டது (யோ. 8 : 29).

இதை வாசிக்கிற விசுவாசியே, இதின் கருத்து உனக்கு விளங்குகிறதா? பரிசுத்த ஆவியின் நிறைவை

வாஞ்சிக்கிறாயா? முற்றிலும் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்குப் பிரியமானதையே எப்பொழுதும் நடப்பிக்க உன்னை ஒப்புக்கொடுப்பாயா? உன் சொந்த ஜீவியம், உன் குடும்ப ஜீவியம், உன் வேலை, உன் வருமானம், உன் செலவு — இவைகள் எல்லாவற்றிலும் இயேசு ராஜாவையே பிரியப்படுத்த நாடுவாயா? உன் காரியாதிகளின் சகல விஷயங்களிலும் உலகத்திற்கு இசைவாயல்ல, நாட்டுக்கு இசைவாயல்ல, மற்றவர்களுக்கொப்பாயல்ல, மற்றவர்கள் என்ன சொன்னாலும் சரி, என்ன எண்ணினாலும் சரி — உன் மீட்பரையே பிரியப்படுத்தி, அவருக்கே கீழ்ப்படியச் சம்மதிக்கிறாயா? "கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவி."

4. இயேசு கிறிஸ்துவைப்பற்றி சாட்சிகூற ஆயத்தமாயிருந்தவர்களுக்கே பெந்தெகொஸ்தே ஆவியானவர் அருளப்பட்டார்.

இயேசுவின் வார்த்தைகளைப் பார்ப்போம் "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப். 1 : 8). "மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் பிரசங்கிக்கப்பட வேண்டியது...... நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக். 24 : 47, 49) என்றார். மனந்திரும்புதலையும், இயேசுவின் மூலமாய் உண்டான பாவமன்னிப்பையும் அறிவிக்கும்படிக்கே பெந்தெகொஸ்தே ஆவியானவர் வாக்குப்பண்ணப்படுகிறார்.

சிஷர்கள் 'எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றூர்கள்' என்று பார்த்தோமே. ஏன் பின் சென்றூர்கள்? "என் பின்னே வாருங்கள், உங்களே மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று இயேசு சொன்னூர் (மத். 4 : 19). கடைசியாக ஆவியின் வாக்குத்தத்தத்தை அவர்கள் பெற்று, இந்த ஒரே வேலையைச் செய்யும்படி காத்திருந்தார்கள். காத்திருந்த காலத்தில், அவர்கள் ஆத்திரமெல்லாம் இந்த ஒரே காரியந்தான். யூதாசுக்குப் பதிலாக ஒரு ஆளேத் தெரிந்துகொள்ளுகிறூர்கள். ஏன்? "எங்களோடுகூட சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும்" என்றூர்கள் (அப் 1 : 22). அந்த மேல்வீட்டறையில் காத்திருந்த புருஷரும் ஸ்திரீகளுமான நூற்றிருபதும் யார்? அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்கு ஜீவ தண்ணீரைக் கொண்டுபோகும்படி ஆத்திரப்பட்டவர்கள்; ஆடுகளேயும் ஆட்டுக்குட்டிகளேயும் மேய்க்கும்படி ஒப்புக்கொண்டவர்கள்; இயேசு தமது ஆத்தும வருத்தத்தின் பலனேக் கண்டு திருப்தியாகத்தக்கதாக அநேகரை அவருடைய பாதத் தண்டை கொண்டுவர வாஞ்சித்தவர்கள்; உலகத்தின் எம் மூலேகளிலும் போய் சுவிசேஷ வலேயை வீசி மனுஷரைப் பிடிக்கும்படி ஆயத்தப்பட்டவர்கள். அவர்கள்மேல்தான் ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார்.

விசுவாசியே, பெந்தெகொஸ்தே ஆவிக்காக வாஞ்சிக்கிறூயே. ஆத்துமாக்களேத் தேடிப் போவாயா? இயேசுவின் பேரிலுள்ள அன்பினுல் உன் சொந்த ஜீவியத்தில் அவருக்குக் கீழ்ப்படியமாத்திரமல்ல, அவர் இரத்தம் சிந்தி மீட்டுக்கொண்ட ஆடுகளேத் தேடிக் கண்டுபிடித்து மேய்க்கவும் சம்மதிக்கிறூயா?

இது விஷயத்தில் அநேகர் தப்பிதம் செய்கிறார்கள். பெந்தெகொஸ்தே ஆவிக்காக ஜெபிக்கிறார்கள். ஆனால் தங்கள் சொந்த ஜீவியத்திற்காகவே அவரைத் தேடு கிறார்கள். ஆத்துமாக்களைத் தேடி இரட்சிக்க வருத்தப் படுகிறார்கள். இயேசுவுக்காகப் பேச பயப்படுகிறார்கள். பசியிலும் பட்டினியிலும் கிடந்து, வனாந்தரத்திலும் மலை களிலும் அலைந்து திரிந்து, காணாமற்போன ஆடுகளைத் தேடமாட்டார்கள்; ஆவியானவரையும் விரும்புகிறார்கள். ஆவியானவரோ, சும்மா இருந்து தங்கள் சொந்த ஜீவியத்தை மாத்திரம் கவனித்துக்கொண்டிருக்கிறவர் களுக்குக் கொடுக்கப்படுகிறவரல்ல. சாட்சி சொல்லுகிறவர் களுக்கே கொடுக்கப்படுகிறார்.

வாசிக்கிறவனே, உன் காரியம் எப்படி? நீ ஆத்துமாக் களைத் தேடிப் போவாயா? உன் சுகத்தையும், பணத்தை யும், சொகுசையும், சம்பளத்தையும் நோக்காமல் ஆத்துமாக்களையே நோக்குவாயா? எது கிடைத்தாலும் கிடையாவிட்டாலும் ஆத்துமாக்கள் கிடைக்கவேண்டும் என்று வாஞ்சிக்கிறாயா? பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப் படவேண்டுமானால், இப்போதைப்போல நீ சும்மா உட்கார்ந் திருப்பதை விட்டுவிடுவாயா? உன் ஜீவியத்தைக் கவனித்து வீட்டிலிருப்பதை விட்டு, பிறரை இயேசுவண்டை கொண்டு வருவதற்கு வெளியேபோய் அலைவாயா? அதினால் வரக் கூடிய துன்பங்களையும், சங்கடங்களையும் சுகக்கேட்டையும் பாராமல், இயேசுவுக்காகக் கோதுமை மணியைப்போல நிலத்தில் விழுந்து சாகச் சம்மதிப்பாயா? (யோ. 12 : 24). அப்படியானால் உனக்கும் பெந்தெகொஸ்தே ஆவியானவர் கொடுக்கப்படத் தடையில்லை.

5. ஜெபத்திற்கு உத்தரவாகவே பெந்தெகொஸ்தே ஆவியானவர் கொடுக்கப்பட்டார்.

இயேசுகிறிஸ்துவின் வாக்கை ஏற்றுக்கொண்டார்கள். பிதாவின் வாக்குத்தத்தம் தங்களில் நிறைவேறும் என்று விசுவாசித்தார்கள். அந்த விசுவாசத்தினால் காத்திருந்து ஜெபித்தார்கள். ஆவியானவர் ஊற்றப்பட்டார். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" (லூக். 11 : 13). கேளுங்கள், அப்பொழுது பெற்றுக் கொள்வீர்கள்.

"இயேசு ஜெபம்பண்ணுகையில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்" (லூக். 3 : 21, 22). அவருக்கும் அதுதான் பிரமாணம். சீஷருக்கும் அதுதான் முறை. நமக்கும் அதுதான் வழி. நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் ஜெபிப்பதில் பிரயோஜனமில்லை. அப்படிப்பட்ட வீண் ஜெபங்கள் தேவனைப் பரியாசம்பண்ணுகின்றனவையேயன்றி வேறல்ல. ஆனால், இதைவாசிக்கிற விசுவாசியே,

நீ எல்லாவற்றையும் விட்டு இயேசுவைப் பின்செல்லும்படி அவருக்கே உன்னை முற்றிலும் ஒப்புவித்து விட்டாயா?

அவரில் அன்புகூருகிறாயா ?

அவருக்குக் கீழ்ப்படியும்படி உன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறாயா ?

ஆத்துமாக்களைத் தேடி இரட்சிக்கும்படி பார்ப்பாயா ?

அப்படியானால் இயேசுவின் வாக்கை நம்பி கேள். பெந்தெகொஸ்தே ஆவியில் என் பங்கைத் தாரும் என்று கேள். விசுவாசத்தோடு அவருடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொள். நீ உன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கும் நேரத்தில் தேவ அக்கினியாகிய ஆவியானவர் உன்னை வந்து பட்சிக்கிறார் என்று நம்பு. தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி எழும்பிப்போ. 'விசுவாசத்தினாலே' ஆவியின் வாக்குத்தத்தத்தை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். (கலா. 3 : 14). தேவனிடத்திலிருந்து எதிர்பார். அவர் தமது வாக்கை நிறைவேற்றி உன்னை நிரப்புப்படி எதிர்பார். நீ கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவம். ஆகவே, பெந்தெகொஸ்தின் பரிபூரண கிரியை உனக்கும் உண்டு. உரிமை பாராட்டிக் கேட்டு, நம்பிக்கொண்டிரு. பெந்தெகொஸ்தே ஆவியின் கிரியையை உன் ஜீவியத்திலும் ஊழியத்திலும் காண்பாய்.

திவ்விய அக்னி ஈவுக்காக
உம்மைத் தேடி ஆவலாக
யேசுவே, உம்மிடமாக
அண்டினேன்.

என்னை ஜீவ பலியாக
படைப்பேன் சமூலமாக,
உம்மால் பெலன் நிறைவாக
பெற்றிடுவேன்.

10-ம் அதிகாரம்

பெந்தெகொஸ்தே ஆவியினால் நிறைந்திருக்கும் இரகசியம்

"ஆவியினால் நிறைந்திருங்கள்." எபே. 5 : 18.

இந்த வாக்கியத்தின் கருத்தைக் கவனிக்கவேண்டும். 'ஆவியினால் நிரப்பப்படுங்கள்' என்று சொல்லாமல், 'ஆவியினால் நிறைந்திருங்கள்' என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஒரு தடவையில் ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்குப் பிரதிஷ்டைபண்ணி, ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுகிறதைப்பற்றி இவ்வசனத்தில் அப்போஸ்தலன் பேசாமல், அதற்குப்பின் எப்பொழுதும் ஆவியினால் நிறைந்திருப்பதைப்பற்றியே பேசுகிறார்.

இதுவே நமக்கும் கட்டளை. இதுவே நமது நாட்டுக்கும் அவசியம். ஒருவன் ஓரிடத்தில் கூட்டங்களுக்குப் போகிறான். அங்கே உணர்வடைந்து தன்னைக் கிறிஸ்துவுக்கு முற்றிலும் பிரதிஷ்டைபண்ணி, ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுகிறான். ஒருவாரம் அந்த உற்சாகத்தில் ஜீவிக்கிறான். அதற்குப் பின்போ குளிர்ந்துபோய், நான் ஆவியானவரைப் பெறவில்லை என்று சொல்லி அதைரியமடைந்துபோகிறான். ஒருநாள் ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக்கொள்ளுவதற்கென்று விசேஷ பிரதிஷ்டை செய்து அவரை ஏற்றுக்கொள்வது நல்லதுதான். ஆனால் அதற்குப் பின்னும் எப்போதும் அவரில் நிறைந்திருந்தாலன்றி மற்றப்படி அதிகப் பிரயோஜனம் இல்லை. முந்தின அதிகாரத்தின் படிகளில் சென்று விசுவாசத்தினால் அவரை ஏற்றுக்கொண்ட என் உடன் விசுவாசியே, அவருக்கு உன் இருதயத்தைத் திறந்து

வைத்து உள்ளே அவரை ஏற்றுக்கொண்ட நீ, இனிமேலும் எப்படி எப்போதும் அவரால் நிறைந்திருக்கலாம் என்பதைப் பற்றிச் சில குறிப்புகள் சொல்லுகிறேன்.

தேவனுடைய பக்கத்தில் பார்த்தால், நாம் பெற்ற ஆவியானவர் எப்பொழுதும் நம்மை நிரப்பிக்கொண்டே யிருக்கத் தடை ஒன்றுமில்லை.

'என்றென்றைக்கும்' நம்முடனே கூட இருக்கும்படி தான் இந்த ஆவியானவர் அருளப்பட்டார். "என்றென் றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குத் தேற்றர வாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவா. 14 : 16) என்பதுதான் கிறிஸ்துவின் வாக்கு. இன்னும் ஒரு சமயத்தில்: 'நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று யிருக்கும்' என்று இயேசு சொன்னார் (யோவா. 4 : 14). கூடாரப் பண்டிகையின் கடைசிநாளில் நின்று; 'என்னிடத் தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்தி லிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்' என்றார் (யோவா. 7 : 38) இவைகளெல்லாவற்றையும் கவனிக்கும் போது, பெந்தெகொஸ்தே ஆவியானவர் நிலைவரமாய் நம்மில் வாசம்பண்ணி நம்மை ஆட்கொள்ளும்படி வருகிற வரேயன்றி, கொஞ்சநாளுக்கென்று வருகிறவரல்ல என்று காண்கிறோம்.

நமது பக்கத்திலோ தடைகள் உண்டு. ஆகவே, 1-வது: ஆவியானவர் நம்மை எப்போதும் நிரப்பிக்கொண்டிருக்க வேண்டுமானால் நாம் எப்போதும் பிரதிஷ்டை பண்ணப் பட்டவர்களாயிருக்கவேண்டும் ஒருநாள் பண்ணும் பிர திஷ்டை அதற்குப் பின்னும் நாடோறும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒருநாள் பிரதிஷ்டைபண்ணி இயேசுவின்

கையில் நம்மை ஒப்புவித்துவிட்டு, அடுத்தநாள் அவருடைய கரங்களிலிருந்து நம்மை எடுத்துக்கொண்டு நமது இஷ்டம்போல ஜீவிக்கும்போது, ஆவியானவரின் நிலைவரமான கிரியையை நாம் அநுபவிக்க முடியாது. ஒவ்வொரு நாள் அதிகாலையிலும்: என் ஆண்டவரே, இன்றும் நான் உம்முடையவனாய் ஜீவிக்கும்படி என்னை ஒப்புக்கொடுக்கிறேன். இன்றைக்கு எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின் செல்லுவேன் என்று சொல்லவேண்டும். நாம் கிறிஸ்துவினுடையவர்கள்; அவரால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள்; அவருடைய கொத்தடிமைகள் என்பதை எவ்வளவு தூரம் அன்றாடக ஜீவியத்தில் உணர்ந்து ஜீவிக்கிறோமோ, அவ்வளவு ஆவியானவரின் கிரியையை அநுபவிப்போம்.

ஆகவே, சகோதரனே, அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கும் நீ, அவருடையவனாகவே எப்பொழுதும் ஜீவிக்கப் பார். உன் இருதயத்தின் முழு வாஞ்சையும் இதுவாகவே இருப்பதாக. நாடோறும் நிமிஷந்தோறும் நீ அவருடையவன். அவருக்கென்று ஜீவித்து உழைக்கும்படி ஒப்புக்கொடுக்கப்பட்டவன். இதை மறந்துபோகாதே. ஆவியின் கிரியை நிலைவரமாய் உன்னில் காணப்பட நீ விரும்பினால், உன் பிரதிஷ்டை எப்போதும் புதுப்பிக்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

2-வது: கீழ்ப்படிதல்.

“கீழ்ப்படிகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஆவியானவர்” — கீழ்ப்படிந்துகொண்டே இருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிற பரிசுத்த ஆவியானவர். ஆவியானவர் நம்மை முற்றிலும் ஆட்கொள்ளவேண்டுமானால், மறுபேச்சுப் பேசாத கீழ்ப்படிதல் இருக்கவேண்டும்.

எந்த அற்பமான காரியமானாலும் தகாதது என்று ஆவியானவர் இருதயத்தில் காட்டுவாரானால் உடனே அதை அறிக்கையிட்டு, அதை விட்டு விலகவேண்டும். மென் மேலும் ஆவியானவரைப் பெற்று, எப்போதும் நிரம்பிக் கொண்டே இருந்த அப்போஸ்தலர்கள் யார்? "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறது அவசியம்" என்று சொன்னவர்களல்லவா?

இது கஷ்டமான காரியமல்ல. நம்மை ஆட்கொள்ளும்படி வந்திருக்கும் ஆவியானவர் நாம் கீழ்ப்படியக்கூடிய கட்டளைகளைத்தான் கொடுப்பார். கீழ்ப்படிவதற்கு வேண்டிய பெலனையும் கட்டளையோடுகூட அருளுவார். ஆதலால், விசுவாசியே, இன்றுமுதல் உன் ஜீவியத்தின் பிரமாணம் கீழ்ப்படிதல் என்றே இருப்பதாக. உன் குடும்ப விஷயங்களிலானாலும் சரி, உன் சொந்த ஜீவியத்திலானாலும் சரி, உன் வேலையிலானாலும் சரி, உன் பழக்க வழக்கங்களிலானாலும் சரி, அவர் உனக்கு என்ன சொல்லுவாரோ அதின்படி செய் (யோவா. 2:5) விசேஷமாய் ஆவியானவருக்கு விரோதமாய்க் கிரியை செய்யும் மாமிச சிந்தைக்கும் உலக சிந்தைக்கும் இடங்கொடாதபடி பார். அவைகளல்ல, பரிசுத்த ஆவியானவரே இனி உன்னை நடத்தவேண்டியவர். மாம்சத்திற்கும் உலகத்திற்கும் விரோதமாக ஆவியானவர் போராடுவார். நீ அவர் பக்ஷத்திலேயே நில். அவர் சொல்லுவதற்கே கீழ்ப்படி. அப்பொழுது ஆவியானவர் ஓயாமல் தமது கிரியையை உன்னில் விளங்கப்பண்ணிக் கொண்டேயிருப்பார்.

கீழ்ப்படிதலுக்கே சகல ஆசீர்வாதங்களும் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. 'என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.'

'நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்.' என்னுடைய கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்.' 'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக் கொள்ளுவான்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம்பண்ணுவோம்.'' இதைவிட நமக்கு வேண்டியது தான் என்ன? ஆகையால் சகோதரனே, கீழ்ப்படிவோமாக. கீழ்ப்படிதல் நமது கடமை. கீழ்ப்படிதல் அவருக்குப் பிரியம். கீழ்ப்படிதல் ஆவிக்குரிய சகல உன்னத ஆசீர்வாதங்களும் வைக்கப்பட்டிருக்கும் களஞ்சியத்தைத் திறந்து கொடுக்கும் திறவுகோல். அதுவே நமது ஜீவியத்துக்குச் சட்டமாயிருப்பதாக.

3-வது. ஐக்கியம்.

இதைக் குறித்துத்தான் இயேசுநாதர்: 'என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்' (யோவா. 15 : 4) என்று சொன்னார். அவரில் நிலைத்திருப்பது எப்படி?

(1) வேதவாசிப்பு — 'நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்' (15 : 7). விசுவாசியே, ஆவியானவருடைய பட்டயம் வேதாகமம். வேதாகமத்திற்கு உன் ஜீவியத்தில் நீ எவ்வளவு இடம் கொடுக்கிறாயோ, அவ்வளவு ஆவியானவர் உன்னில் கிரியை நடப்பிக்கக்கூடும்.

(2) ஜெபம்.

"தேவனோடு பழகி ஐக்கியப்படாமல் கிறிஸ்தவ ஜீவியத்தில் எந்த ஆசீர்வாதத்தையும் அநுபவிக்க முடியாது"

என்று ஒருவர் எழுதியிருக்கிறார். தேவனோடு அதிகமாகப் பேசு. அவரை உன் தோழராக்கு. பரிசுத்த ஆவியின் வல்லமை தேவனோடுள்ள ஓயாத ஐக்கியத்தினால் மாத்திரம் காக்கப்படக்கூடும். தேவனுடைய எந்த ஆசீர்வாதமும் அவரோடுள்ள ஐக்கியத்தினாலேயே காக்கப்படவேண்டும். பரிசுத்த ஆவியானவரின் நிறைவாகிய ஆசீர்வாதம் எவ்வளவு அதிகம் அப்படி!

"அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான்" (1 யோவா. 3 : 24). ஐக்கியத்திற்கும் அவசியம் கீழ்ப்படிதல்தான். 'கைக்கொள்ளுகிறவன் நிலைத்திருப்பான்.'

4-வது ஆவியைத் துக்கப்படுத்தாதபடி பார்.

இது மகா முக்கியமான ஒரு கட்டளை. "ஆவியினால் நிறைந்திருங்கள்" என்று கட்டளையிடப்பட்ட சபையாருக்கு அப்போஸ்தலன் எழுதின இன்னொரு ஆலோசனை இதுதான். "பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4 : 30).

எவைகளெல்லாம் ஆவியானவரைத் துக்கப்படுத்தி, அவருடைய கிரியையைக் குறைத்துப்போடக்கூடும் என்று பார்ப்போம். அந்த வசனத்திற்கு முன்னும் பின்னுமுள்ள வசனங்களில் இதைக் கவனிக்கலாம்.

1. சோம்பல்—(வா. 28, 29) ஆவியானவரைத் துக்கப்படுத்தக்கூடியது. ஆவியானவரைப் பெற்றுக்கொண்டபின் சும்மா இருக்கலாம் என்றால் அவருடைய கிரியையைக் காணமாட்டோம். அவர் ஓயாத கிரியை செய்கிறவர். சோம்பேறியுடன் சேர்ந்து அவர் கிரியை நடபிக்கமாட்டார். விசேஷமாக தேவ ஊழியக்காரருக்கு இது பெரிய சோதனை.

இயேசுவுக்கென்று சாட்சிகொடுப்பதே இரவும் பகலும் தொழிலாயிருக்கவேண்டியவர்கள் கொஞ்சம் அசதிக்கும், தூக்கத்திற்கும் இடங்கொடுத்து நேரத்தை வீணாய்ச் செலவழிப்பார்களானால், ஆவியானவர் கிரியை குன்றுகிறது என்று காண்பார்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்வோமாக. குணப்படவேண்டிய ஆத்துமாக்கள் ஏராளம். ஆத்துமாக்கள் விரைந்து நரகத்துக்குச் செல்லும்போது, காவற்காரனுக்குத் தூக்கம் என்ன தூக்கம்! சகோதரனே, இந்த விஷயத்தில் எச்சரிக்கையாயிரு. "விழித்திருந்து" வேலை செய்; ஜெபி; ஆத்துமாக்களைத் தேடு. உன் சோம்பலினால் ஆவியானவரைத் துக்கப்படுத்தாதிரு.

2. வீண் பேச்சு ஆவியானவரைத் துக்கப்படுத்தக் கூடியது. "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்." எது கெட்ட வார்த்தை? பக்தி விருத்திக்கேதுவல்லாத அனுவசர வார்த்தைகளனைத்தும் கெட்ட வார்த்தையே. இன்னும் 5 : 4-ல் "வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்" என்கிறார்.

இதிலும் எத்தனையோ பேர் தவறிப் போகிறார்கள், எவ்வளவு மணி நேரங்கள் வீண் அலப்புதல்களில் செலவழிக்கப்படுகிறது! ஆவியானவரோ புறா. எவ்வித வீணான பேச்சும் அவரைக் கலைத்துவிடும் என்பதை நினைத்துக் கொள்வோமாக.

3. அன்புத் தாழ்ச்சியும் ஆவியானவரைத் துக்கப்படுத்திவிடும். "சகல விதமான கசப்பும், கோபமும்,

மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது.''

ஆவியின் கனி அன்பு. அன்புக்கு விரோதமான எந்த அற்பப் பாவமும் ஆவியின் வல்லமையைத் தடுத்துவிடும். பிறரைப்பற்றித் தீதாய்ப் பேசுகிற பேச்சு, எந்த விஷயத்திற் காகிலும் கோபப்படுதல், என்ன காரணத்தையிட்டாவது பேசாமலிருத்தல் — இவைகள் ஆவியைத் துக்கப்படுத்து கிறவைகள். ஆகையால் "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயுமிருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங் களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.''

4. பெருமை ஆவியானவருக்கு நேர் விரோதமானது. ஆவியானவர் நதிகளுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார் (யோ. 7 : 38). நதிகள் எப்போதும் பள்ளமான இடத்தில் மாத்திரம் பாய்ந்துசெல்லும். பள்ளமாகவே இருந்தால், ஆவியின் நதிகள் பாய்ந்து கொண்டேயிருக்கும்.

புதிதாய் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்று ஆவியான வருக்குள் நடக்க ஆரம்பிக்கிறவர்களுக்கு இது ஒரு பெரிய சோதனை. தங்களைப்போலிராத மற்றவர்களை இவர்கள் கவனிக்கிறார்கள். தங்களைவிட உத்தியோகத்திலும், அநு பவத்திலும் மேலானவர்களென்றாலும் இன்னும் தங்களை முற்றிலும் கிறிஸ்துவுக்கென்று ஒப்புக்கொடாதவர்களைக் காணும்போது, அவர்களைப்பற்றிக் குறைவாய்ப் பேசவும், அவர்களுக்கு விரோதமாக வைராக்கியங்கொள்ளவும் ஏவப் படுகிறார்கள். தெய்வீக வைராக்கியம் என்று இவ்வித அன்புத்தாழ்ச்சியை நினைத்துக்கொள்ளுகிறார்கள். இதினால் சாத்தான் வெகு சீக்கிரத்தில் பெருமையைப் பலப்படுத்தி,

ஆவியானவருடைய கிரியையை அபத்தமாக்கி, அந்த ஆத்துமாவைக் கெடுத்துப்போடுகிறான். ஆகையால், விசுவாசியே, தாழ்ந்த இடமே உனக்கு எப்பொழுதும் ஏற்ற இடம். ஆவியில் எளிமையுள்ளவர்கள் எப்போதும் பாக்கியவான்கள்; அவர்கள்தான் எப்போதும் தேவனுடைய ராஜ்யத்தின் வல்லமைகளை ருசி பார்ப்பார்கள். எந்த அற்பமான சுயநல்லெண்ணமும், மேட்டிமையும், பிறரை அவமதிக்கிற சிந்தையும் அறிக்கையிடப்பட்டு விட்டுவிடப்பட வேண்டும். தாழ்மையுள்ளவர்களுக்கே எப்போதும் ஆவியின் கிருபையை தேவன் அளிக்கிறார்.

இவைகளே ஆவியின் கிரியையைக் கெடுத்து, அவரைத் துக்கப்படுத்தித் துரத்திவிடுகிற குழிநரிகள். இவைகளுக்கு எச்சரிக்கையாயிருந்து, விழித்திருந்து ஜெபிப்போமாக.

5-வது எல்லாவற்றிலும் ஆவிக்குள் நட.

“நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்” (கலா. 5 : 25). எந்த விஷயத்திலும் அவருடைய நடத்துதலுக்காகக் காத்திருப்பது அவசியம். அவர் நம்மை நடத்தும்படிக்கே வந்திருக்கிறார். ஆகவே, ஆவியானவருடைய நடத்துதலுக்காகக் கெஞ்சியே எதையும் செய்வோமாக. ஆவியானவருடைய போதனையை எதிர் பார்த்தவர்களாகவே வேதம் வாசிப்போமாக. அவருடைய உதவியைத் தேடியே ஜெபங்களை ஆரம்பிப்போமாக. இவ்விதமாக ஜீவிக்கும்படி நம்மை ஒப்புக் கொடுக்கும்போது ஆவியானவர் இயேசுவோடு நமக்குள்ள ஐக்கியத்தை அதிகரிக்கிறார் என்று காண்போம்.

மேற்கண்ட எந்த விஷயங்களிலாவது தவறிப் போய் ஆவியினால் வரும் சந்தோஷத்தையும் வல்லமையையும்

இழந்துவிடில் செய்யவேண்டியது என்ன ? அறிக்கையிடத் தவறின இடத்தை உடனே சரிப்படுத்து கீழ்ப்படியாத அந்த விஷயத்தில் கீழ்ப்படி. துக்கமுண்டாக்கின அந்த விஷயத்தை நீக்கிவிடு. இயேசுவின் இரத்த சுத்திகரிப்புக்காகக் கெஞ்சு. திரும்பவும் ஆவியின் வெள்ளங்கள் உன்னில் பாய்ந்தோடும்படி விண்ணப்பம்பண்ணு. ஜெபமே ஜெயம்.

கிறிஸ்தவ நண்பனே, இப்போது முடிக்கிறேன். இனி ஆவியினால் எப்போதும் நிறைந்திருக்கும் ஜீவியம் உன்னுடையதாயிருக்கப்போகிறதா? ஜீவத்தண்ணீருள்ள நதிகள் நீ போகும் இடமெல்லாம் உன்னிடத்திலிருந்து பாய்ந்தோடப்போகிறதா? நீயே தேவ சமுகத்தில் உத்தரவு சொல்ல வேண்டும்.

உடன் ஊழியரே, தேவனுடைய வேலைக்கு தேவனுடைய வல்லமை வேண்டும். பெந்தெகொஸ்தே வேலை செய்ய பெந்தெகொஸ்தே ஆவி அவசியம். ஆகையால், எப்போதும் ஆவியினால் நிறைந்திருக்கப் பார்ப்போமாக. ஆவியின் கிரியை நம்மிலும் நமது மூலமாயும் தாராளமாய் நடக்கும்படி இடங்கொடுப்போமாக. அப்பொழுது நமது மூலமாய் தேவன் கிரியை நடப்பிப்பார். நாம் மெய்யாகவே பெந்தெகொஸ்தே ஊழியராயிருப்போம். நமது வேலையும் பெந்தெகொஸ்தே வேலையாயிருக்கும். நமது சபைகளும் மெய்யாகவே பெந்தெகொஸ்தே சபைகளாகும்.

உலகத்தின் பற்பல இடங்களிலும் ஆவியானவர் ஊற்றப்பட்டிருக்கிறார். ஆஸ்திரேலியாவிலும் ஜப்பானிலும் சீனாவிலும் தீவுகளிலும் அவருடைய வல்லமை பொருந்திய கிரியை விளங்கியிருக்கிறது. நமது நடுவிலும் பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது. ஆகையால், ஆவியின் அருள்மாரி பெய்யும்படி நாடோறும் ஜெபிப்போமாக.

அவருடைய கிரியைக்கு இடையூறாயிருக்கும் தடைகளை நீக்குவோமாக. நம்மிலும், நமது மூலமாயும், நமது சபைகளிலும் ஆவியானவரின் பூரண கிரியை காணப்படுமட்டும் அமர்ந்திராதிருப்போமாக.

வாரும், தேவ ஆவி வாரும்,
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக்குயிரைத் தாரும்
வாரும்! சுத்த ஆவியே!
பெந்தெகொஸ்தே
கிரியை ஆரம்பிக்கவே.

முற்றிற்று

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி — 1950

பக்தி விருத்திக்கு ஏதுவான நூல் தொடர்பு

No.

501. மனத்தாழ்மை, பரிசுத்தத்தின் அலங்காரம்
"Humility" by Rev. Andrew Murray

502. ஆத்தும ஆதாயம்
The Winning of Souls, by Amy Carmichael

503. சுத்த இருதயம் அடைவதெப்படி?
A Pure Heart, by P. C. Koruth

504. ஆவிக்குரிய ஜீவியம்
The Fulness of the Holy Spirit by P. C. Koruth

505. ஆனால் ....
Translated from "I F" by Amy Carmichael

506. முள்ளுக்குள்ளே ரோஜா மலர்
Translated from Rose from Brier, written for the ill
by Amy Carmichael

507. முது வாழ்வும் புது வாழ்வும்
The Old Life in the Flesh and the
New Life in the Spirit, by Rev. F. B. Meyer

508. பரிசுத்த ஜீவியம்
The Holy Life, by Rev. G. H. C. Macgregor

509. தனியாள் தீபம்
Personal Worker's Hand-book

புஸ்தகசாலை,
நட்சத்திரக் கூட்டம்,
டோனவூர்,
திருநெல்வேலி ஜில்லா.

No. 510 விலை 10 அணா